இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 230 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 30 வெள்ளிக்கிழமை 14.07.2017

## ராணுவ முகாமில் ஆயுதங்கள் மாயம்

*தீவிர விசாரணை ஆரம்பம்*

கொழும்பு, ஜூலை 14
அநுராதபுரம், கலத்தேவ பகுதியில் உள்ள இராணுவக் கவசப் படைப்பிரிவின் ஆயுதக் களஞ்சியத்திலிருந்து, ஆயுதங்கள் சில காணாமற்போயுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. >> 04

## எழுதாரகை கொழும்பில் இன்று வெள்ளோட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 14
ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு மக்களின் பயன்பாட்டுக்கு உருவாக்கப்பட்டுள்ள எழுதாரகை படகின் வெள்ளோட்டம் இன்றும் >> 04

## கொக்கிளாய் மீனவர்களுக்கு 5 பாடுகளை வழங்கவேண்டும்

*முல்லைத்தீவு நீதிமன்றம் யோசனை*

முல்லைத்தீவு, ஜூலை 14
"முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் 11 கரைவலைப் பாடுகளுக்குரிய நிலப்பரப்பில் 5 பாடுகளை உள்ளூர் மீனவர்கள்வாடி அமைப்பதற்கு வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சின் செயலாளரும் முன்னெடுக்க வேண் >> 25

## மாற்றுத் தலைமை குறித்துப் பேச ஈபிஆர்எல்எவ்வுக்கு தகுதி உண்டா?

*சரவணபவன் எம்.பி. காட்டம்*

யாழ்ப்பாணம், ஜூலை 14
அரசியல் தலைமையைக் குறைகூறுவதற்கும் மாற்றுத் தலைமை பற்றிப் பேசுவதற்கும் ஈபிஆர் எல்எவ் கட்சிக்கோ அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கோ வரலாற்றில் எந்தத் தகுதியாவது இருக்கிறதா? இவ்வாறு காட்டமாகக் கேள்வி எழுப்பியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். >> 24

# புதிய அரசமைப்புக்கு முன்னரே வருகின்றது தேர்தல் சட்டத் திருத்தம்

### உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் திட்டத்துடன் கூட்டரசு முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 14
புதிய அரசமைப்புக்கு முன்னதாகவே, தேர்தல் திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தும் நோக்குடனேயே இந்தச் சட்டவரைவைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. புதிய அரசமைப்பில், தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் 60 சதவீதமும், விகிதாசாரப் பிரதிநிதித்துவம் 40 சதவீதமுமாகக் கலப்பு முறையில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எந்த முறையில் நடத்துவது என்பதில் குழப்பமான நிலைமையே காணப்படுகின்றது. அனைத்துக் கட்சிகளும் இந்த விடயத்தில் ஒருமித்த >> 25

## சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு தடை கேட்டு ஞாயிறன்று முல்லையில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஜூலை 14
இயற்கைச் சமநிலையைக் குழப்பும் அனைத்து வகையான சட்டவிரோதக் குடியேற்றங்களையும் தடை செய்யுமாறு கோரி, நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் >> 25

## முக்கிய முடிவுகளை எடுக்க அவசரமாகக் கூடுகிறது ஐ.தே.க. மத்திய குழு

கொழும்பு, ஜூலை 14
புதிய அரசமைப்பு, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் மைய செயற்குழு இன்று வெள்ளிக்கிழமை காலை >> 25

## விக்கி மறுப்பாரானால் இன்னொரு தலைமை

*அது காலத்தின் தேவை என்கிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன்*

மட்டக்களப்பு, ஜூலை 14
தற்போதைய சூழலில் சரியான பாதையில் செல்வதற்கான தலைமையை முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிராகரிப்பாராக இருந்தால், இன்னுமொரு தலைமை அல்லது கூட்டுத்தலைமைகள் உருவாகக் கூடும். மாற்றுத் தலைமை காலத்தினுடைய தேவை. தலைமை என்பது ஒருவரை நம்பி இருப்பது அல்ல. மாற்றுத் தலை >> 25

## மாகாண சபை முறைமையை ஏற்க மறுத்து முள்ளிவாய்க்கால் நினைவை புறக்கணித்த கஜேந்திரகுமார் அணி கிழக்கில் வாக்குகளை சிதறடிக்க சதித் திட்டம்

*கோவிந்தன் கருணாகரம் குற்றச்சாட்டு*

மட்டக்களப்பு, ஜூலை 14
மாகாணசபை முறைமையை ஏற்கோம் என்று சொல்லி முதல்வர் விக்னேஸ்வரன் தலைமையில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்குகொள்ளாமலிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், தமிழ் >> 25

## பிரிவினைவாதிகளை குசிப்படுத்துவதற்கே தசநாயக்க கைது

*சாடுகின்றது மகிந்த அணி*

யாழ்ப்பாணம், ஜூலை 14
தமிழ்ப் பிரிவினைவாதிகளைக் குசிப்படுத்தவே, கடற்படையின் முன்னாள் பேச்சாளர் தசநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார் என மகிந்த அணி குற்றம் சுமத்தியுள்ளது.

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கொழும்பில் நேற்று >> 04

## சு.க. – ஐ.தே.க. உறவு; டிசெ. முக்கிய முடிவு

*அதுவரை பொறுமை காக்குமாறு சு.கவிடம் கோருகிறார் மைத்திரி*

யாழ்ப்பாணம், ஜூலை 14
கூட்டு அரசிலிருந்து வெளியேறுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, கட்சிக்குள் கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ள நிலையில், டிசெம்பர் மாதம் வரையில் பொறுமையாக இருக்குமாறும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். >> 25

## மீன் சுழற்சியின் பின் மிஞ்சும் குப்பைகள் இனிமேல் கீரிமலைப் பள்ளங்களுக்குள்

*திட்டத்துக்கான உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்து*

>> 04

## தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு செயற்படவேண்டியது அவசியம்

*வலியுறுத்துகிறார் செல்வம் எம்.பி.*

யாழ்ப்பாணம், ஜூலை 14
தென்னிலங்கைக்கட்சிகள் இன்று வடக்கு-கிழக்கில்காலூன்றித்தமது கட்சிகளின் வளர்ச்சியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற வேளையில், தமிழ்த் தலைமைகள் வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையுடன் செயற்படுவது அவசியமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு >> 04

## பொருத்து வீட்டுக்கு எதிராக கூட்டமைப்பு நேற்று வழக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14
பொருத்து வீடுகளை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைக்கும் நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உயர் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்தார். >> 25

## வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தல் தீவிரம்

*இளைஞன் கொல்லப்பட்ட பின் கடத்தல்காரருக்குக் கொள்ளை லாபம்*

யாழ்ப்பாணம், ஜூலை 14
வடமராட்சியில் வரையறையின்றி இரவுபகலாக டிப்பர்களிலும் உழவு இயந்திரங்களிலும் மணல் கொள்ளை தாராளமாக இடம்பெறுகிறது. >> 25



சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

Vardhana JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து வர்தன ஜூனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000
www.dfcc.lk
DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.
DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

newuthayan.com
ஒலி, ஒளி வடிவத் தகவல்களுடன்
உதயன் DIGITAL
24 மணிநேரப் பதிவேற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குற்றப் பத்திரிகையை திருத்துவதற்கு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 14
முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையில் திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு கோரியுள்ளது.
அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நேற்று இந்த வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
ஆணைக்குழு சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இந்தக் கோரிக்கையை முன்வைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# பயங்கரவாத செயற்பாடுகள் ஓயவில்லை

### தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14
போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதும் பயங்கரவாதச் செயற்பாடுகள் இன்னமும் ஓயவில்லை. இது எமது நாட்டுக்கு மட்டுமல்ல, சகல நாடுகளுக்கும் பெரும் தலையிடியாக அமைந்துள்ளது.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பின் உள்துறை அமைச்சர்களின் 8 ஆவது வருடாந்த மாநாடு கொழும்பு கோல்பேஸ் விடுதியில் நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே தலைமை அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
அனைத்து நாடுகளும் எதிர்நோக்கும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பிராந்தியம் என்ற வகையில் வலுவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பயங்கரவாதம் தொடர்பில் நீண்டகால அனுபவம் எமக்கு உள்ளது. அதிர்ஷ்டவசமாக எம்மால் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. போர் அல்லது ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்ததால் மாத்திரம் பயங்கரவாதம் முடிவுக்கு வராது.
எமது பிராந்தியத்துக்கு உரியதையே நாம் செய்தோம். இரண்டு முதன்மை கட்சிகளின் பங்களிப்புடன் நாங்கள் தேசிய அரசு ஒன்றை அமைத்தோம். பிராந்திய நாடுகளுடன் வலுவான இருதரப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் அதேவேளை பிராந்தியத்துக்கு வெளியில் உள்ள நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாடுகளுடனான இரு தரப்பு உறவுகளை விரிவுபடுத்த வேண்டியது அவசியம்.
கூட்டரசு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகளை விடுவித்தல், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சட்டவரைவு மூலம் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாக முன்னகர வேண்டுமானால் ஆசிய நாடுகளுடனான இரு தரப்பு உறவுகள் வெளிப்படையாக முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம். ஆசிய நாடுகளுடன் சிறந்த உறவுகளைப் பேணும்போது நாடு பல தரப்பட்ட துறைகளில் அபிவிருத்தி அடையும் - என்றார். (ற-ஐ-3)



## கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை

கொழும்பு, ஜூலை 14
கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு மலையகத்திலிருந்து பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.
மஸ்கெலியாவில் நேற்றுக் காலை பாதயாத்திரை ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் பக்தர்கள் பாதயாத்திரையை ஆரம்பித்தனர்.
நுவரெலியா, பதுளை, வெல்லவாய வழியாக புத்தல காட்டினூடாக 400 கிலோ மீற்றர் தூரம் பாதயாத்திரை செல்லும். எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறும் கொடியேற்றத் திருவிழாவுக்கு கதிர்காமத்தைச் சென்றடைவோம் என்று பாதயாத்திரையில் கலந்து கொண்டுள்ளோர் தெரிவித்தனர்.
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்தும் கதிர்காமத்துக்கு பாதயாத்திரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற-ஐ)



வவுனியா கணேசபுரம் கிழக்கு கிராமத்தில் அறநெறிப்பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அடிக்கல் நட்டார். (ற-ஐ)

## மிளகு விலை குறைப்புக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 14
மிளகு விலையையைக் குறைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எம்பிலிப்பிட்டிய கொழும்பு வீதி மறிக்கப்பட்டு பிரதேச வாசிகளால் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.
பல்லேபெத்த துந்தொட்ட சந்தியில் நடத்தப்பட்ட போராட்டத்தால் வீதிப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## வாகரைபிரதேசசெயலர்இடமாற்றம்; ஒருங்கிணைப்புக்கூட்டத்தில்சர்ச்சை

மட்டக்களப்பு, ஜூலை 14
வாகரை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் இடமாற்ற விவகாரத்தால் சர்ச்சை ஏற்பட்டது.
வாகரை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் பிரதேச செயலர் இடமாற்ற விவகாரம் விவாதிக்கப்பட்டது. அதிகாரிகள் அது தொடர்பில் எதுவித கருத்துக்களும் தெரிவிக்கவில்லை. அதையடுத்து கிராம மட்ட அமைப்புக்களைச் சேர்ந்தோர் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.
"பிரதேச செயலரின் இடமாற்றம் தொடர்பாக எமக்கு இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. 4 நாள்களாகியும் எந்தப் பதிலும் வழங்கப்படாதநிலையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்துகின்றனர். தீர்வு கிடைக்காத ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டிய அவசியமில்லை என்பதால் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்கின்றோம்" என்று அவர்கள் தெரிவித்தனர்.
வாகரைப் பிரதேச செயலர் ஆர். ராகுலநாயகி திடீரென இடமாற்றம் செய்யப்பட்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளார். அதற்குப் பிரதேச மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (ற-ஐ)

## பல்கலைக் கழக மாணவர்களை கடத்த பொலிஸ் முயற்சி!

### அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14
களனி பல்கலைக்கழகத்துக்குள் நேற்று அதிகாலை நுழைந்த சிவில் உடையிலிருந்த பொலிஸார் மாணவர்கள் சிலரைக் கடத்திச் செல்ல முயற்சித்தனர் என்று அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.
மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாணவர் மண்டபத்தில் இரவு கற்றல் நடவடிக்கைகளில் சில மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர். அங்கு வந்த சிவில் உடை தரித்த பொலிஸார் அவர்களை இழுத்துச் சென்று பொலிஸ் ஜீப் வண்டியில் ஏற்ற முயற்சித்தனர். சக மாணவர்கள் கூக்குரலிட்டதால் அவர்கள் மாணவர்களை விட்டு அங்கிருந்து சென்றனர். கடந்த காலத்தில் மகிந்தவின் அரசுக்கு எதிராகப் போராடிய மாணவர்கள் தாக்கப்பட்டும், அடக்குமுறைகளுக்கு ஆளாகியும் இருந்தனர். தற்போது கூட்டு அரசும் அதனையே செய்கிறது - என்றுள்ளது. (ற-ஐ)

## நில்கல வனத்தில் தீ விபத்து: பெருமளவு மூலிகைகள் நாசம்

பதுளை, ஜூலை 14
பிபிலை, நில்கல வனப் பிரதேசத்தில் நேற்று ஏற்பட்ட தீயால் சுமார் நூறு ஏக்கர் வனப்பகுதி நாசமானது. பெருமளவிலான மூலிகைகளும் தீயில் கருகி நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
தீயால் நில்கல பகுதி பெரும் புகை மூட்டமாக்க்காணப்படுகின்றது. பொலிஸார், இராணுவத்தினர், பொதுமக்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அது பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ)



## தொழில்முயற்சியாளருக்கு காரைநகரில் கருத்தரங்கு

காரைநகர், ஜூலை 14
காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் கருத்தரங்கு நேற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.
தேசிய தொழில் முயற்சி அதிகார சபையின் வடமாகாண இணைப்பாளர் கே. ரவிக்குமார், தொழில் திணைக்கள உத்தியோகத்தர், காரைநகர் பிரதேச சபை உத்தியோகத்தர், காரைநகர் இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்கள், காரைநகர் பிரதேச செயலக நிதி உதவியாளர் ஆகியோர் தொழில் முயற்சியாளர்களுக்கு விளக்கங்களை வழங்கினர்.
காரைநகர் பிரதேச செயலக கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் [illegible] ஒழுங்கமைப்பில், பிரதேசசெயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் விடுதி திறப்பும் மாணவர் கௌரவிப்பும்

கிளிநொச்சி, ஜூலை 14
கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலையின் ஆசிரியர் விடுதித் திறப்பு விழாவும், மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றன.
நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் ஆசிரியர் விடுதிக் கட்டடத்தொகுதியைத் திறந்தனர். மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலையின் அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ்ஸும்கலந்துகொண்டனர். (ற-ஜ-6)

## 28ஆவது வீர மக்கள் தினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு

வவுனியா.ஜூலை 14
புளொட் அமைப்பின் 28 ஆவது வீர மக்கள் தின நிகழ்வு வவுனியா, கோவில்குளத்தில் அமைந்துள்ள தோழர் க.உமாமகேஸ்வரன் இல்லத்தில் நேற்று நடைபெற்றது.



நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கத்தின் உருவப்படத்துக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவில்லத்தில் உள்ள கழகத்தின் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவர்களில் ஒருவரான க.சந்திரகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ற-ஜ)

# கொள்ளையடித்தாலும் மகிந்த சேவை செய்தார்

## இப்படிக் கூறுகின்றார் முருதொட்டுவ ஆனந்த தேரர்

கொழும்பு, ஜூலை 14
கூட்டரசின் செயற்பாடுகளால் நாடு பாதாளத்துக்குச் செல்கின்றது. மகிந்த ராஜபக்ச கொள்ளையடித்தாலும் நாட்டுக்கு சேவைகளைச் செய்தார்.
இவ்வாறு கூறினார் துறவிகள் குரல் அமைப்பின் தலைவர் முருத்தொட்டுவ ஆனந்த தேரர்.
இந்த அமைப்பு நேற்றுக் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு நடத்தியது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்த அரசு நாட்டுக்குச் சுமையாகவே உள்ளது. அரசின் மக்கள் விரோதச் செயற்பாடுகளை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச 10 ஆண்டுகள் மேற்கொண்ட கொள்ளையடிப்பை விட தற்போதைய அரசு இரண்டு ஆண்டுகளில் கொள்ளையடித்துள்ளது.
நாட்டுக்குத் தற்போது தேவையானது புதிய அரசமைப்பு மட்டும் அல்ல. நாட்டுக்குக் கெடுதி வரும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பௌத்த சங்க சபையினரே குரல் கொடுத்தனர். கூட்டரசு மேற்கொள்ளும் மக்கள் விரோதச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் பொறுத்துக்கொள்ள முடியாது. மிக விரைவில் மகாநாயக்க தேரர்களைச்சந்தித்துஅவர்களின்அழைப்புடன் கூடிய மகா சங்க சம்மேளனத்தை நடத்துவோம் - என்றார். (ற-ஜ)

## பங்களாதேஷில் மைத்திரிக்கு நேற்றுக் கோலாகல வரவேற்பு



கொழும்பு, ஜூலை 14
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று பங்களாதேஷ் சென்றடைந்தார். பங்களாதேஷ் தலைமை அமைச்சர் ஷேக் ஹஸீனாவின் அழைப்பின் பேரில் மூன்று நாள் பயணமாகவே அவர் அங்கு சென்றுள்ளார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பங்களாதேஷுக்கான முதல் பயணம் இது என்பதால் அவருக்கு அங்கு கோலாகல வரவேற்பு வழங்கப்பட்டது.
டாக்கா வானூர்தி நிலையத்தில் அந்த நாட்டு அரச தலைவர் மொஹமட் அப்துல் ஹமீட் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை வரவேற்றார். 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, இராணுவ அணிவகுப்பு அளிக்கப்பட்டது.
பங்களாதேஷின் அயலுறவு அமைச்சர், நிதி அமைச்சர், சுகாதார அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்ட மக்கள் பிரதிநிதிகளும் அரச தலைவரை வரவேற்க வானூர்தித் தளத்துக்கு வந்திருந்தனர்.
அமைச்சர் ரவி கருணாநாயக்க, இராஜாங்க அமைச்சர்களான மொஹான் லால் கிரேரு, வசந்த அலுவிகார, பிரதி அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, நிஷாந்த முதுஹெட்டிகம ஆகியோரும் அரச தலைவருடன் சென்றுள்ளனர். (ற)

## வெளிநாடு செல்வதற்கான தடையுத்தரவு நீக்கம்

கொழும்பு, ஜூலை 14
துறைமுக அதிகார சபையின் முன்னாள் தலைவர் ப்ரியத் பந்து விக்ரம உட்பட மூவருக்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த நீதிமன்ற தடையுத்தரவு நேற்று நீக்கப்பட்டது.
அவர்களின் சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்தத் தடையுத்தரவு நீக்கப்பட்டது.
கடந்த அரச தலைவர் தேர்தல் காலத்தில் துறைமுக அதிகார சபையின் ஊழியர்கள் 319 பேரைப் பணியிலிருந்து விலக்கி அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுத்தினர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.
இந்த வழக்குத் தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
வழக்கை விசாரணை செய்த நீதிவான் சந்தேகநபர்கள் வெளிநாடு செல்லவதற்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவை நீக்கி உத்தரவிட்டார்.
இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற-ஜ)

## மீட்க வந்த தொடருந்தும் தடம்புரண்டது

கொழும்பு, ஜூலை 14
கொட்டகலை தொடருந்து நிலையத்துக்கு அருகில் தடம்புரண்ட தொடருந்துப் பெட்டிகளை சீர்செய்வதற்கு வந்த கிரேனுடன் கூடிய தொடருந்து இரண்டு இடங்களில் தடம்புரண்டுள்ளது.
வெலிகல தொடருந்து நிலையத்துக்கு அருகிலும், நாவலர் பிட்டிய கைன்போட் தொடருந்து நிலையுத்துக்கு அருகிலும் அது தடம் புரண்டது. (ற)

**(இதனுடன் தொடர்புடைய மற்றொரு செய்தி 4ஆம் பக்கத்தில்)**

# முதலமைச்சர் நிதியத்துக்காக முற்றுகையிட்டுப் போராட்டம்

## எச்சரிக்கின்றார் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜி

யாழ்ப்பாணம்,ஜூலை 14
வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்தை வழங்காவிடில் அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரது செயலகங்களை முடக்கி முற்றுகைப் போராட்டத்தை மேற்கொள்வோம். அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம்.
இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
போரின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசிடம் நிதி கிடைக்கவில்லை. 2003 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், அரசுக்கும் இடையே பேச்சு நடந்தபோது 4.5 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கப் பன்னாடுகள் முன்வந்தன. போரால் வடக்கு, கிழக்கில் பல கோடி ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட அழிவுகள் ஏற்பட்டன. அவற்றை ஈடுசெய்வதற்கு எந்த நிதிகளும் கிடைக்கவில்லை. இந்தப் பின்னணியில்தான் வடமாகாண சபை முதலமைச்சர் நிதியத்தை அமைக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.



அந்த முயற்சி கடந்த 3 வருடங்களுக்கு மேலாகத் தோற்கடிக்கப்பட்டும், தடுக்கப்பட்டும், தாமதிக்கப்பட்டும் வருகின்றது.
மாகாண சபை நிதிகளைப் பயன்படுத்தாமல், புலம்பெயர் தமிழர்களிடமிருந்தும், உள்ளூர் மக்களிடமிருந்தும் நிதி பெற்று மீள்குடியமர்வு, சீரமைப்பு போன்ற வேலைகளைச் செய்ய முயற்சிக்கின்றோம். அதை அரசு தடுத்து வருகின்றது.
கடந்த மாதம் இலங்கை அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம் என்று முதலமைச்சரிடம் கேட்டோம். அப்போது அவர் இது தொடர்பில் ஒரு மாதத்துக்குள் பதில் கிடைக்கும் என்று கூறினார். இன்று வரை அந்தப் பதில் எதுவும் கிடைக்க வில்லை. முதலமைச்சர் நிதியத்தை நிறுவ வேண்டும். இல்லாவிட்டால் முற்றுகைப் போராட்டத்தை மேற்கொள்வோம். வாழ்வா? சாவா? எனப்போராடிக்கொண்டிருக்கும் இனம் ஒன்று திரண்டு, போராட்டங்களை முன்னெடுக்கும் சந்தர்ப்பம் தற்போது எழுந்துள்ளது - என்றார். (ற-ஜ-106)

## கட்டுநாயக்க வர்த்தக வலயத்தில் தீ விபத்து

கொழும்பு, ஜூலை 14
கட்டுநாயக்க வர்த்தக வலயத்தின் முதலாவது கட்டடத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் நேற்று மதியம் தீவிபத்து ஏற்பட்டது. படகு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையிலேயே தீ விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இது வரை கண்டறியப்பட வில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர்கள் 7 பேரும் மறியலில்

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 7 பேரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் மன்று உத்தரவிட்டது.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

மீன்பிடிக்காக அவர்கள் பயன்படுத்திய இரண்டு படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் 7 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (வ-4,8)

## விபத்தால் ஆத்திரமடைந்து பேருந்தை எரித்த மக்கள்!



கொழும்பு, ஜூலை 14

விபத்தை ஏற்படுத்திய பேருந்து ஒற்றைப் பிரதேச மக்கள் தீயிட்டுக் கொழுத்தினர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை மொனராகலை, வெளியாய பகுதியில் நடந்தது. இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு சற்றுப் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

பேருந்து, முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் ஐவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த பிரதேச மக்கள் பேருந்தைச் சேதப்படுத்தி, தீயிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ)



## தடம்புரண்டது தொடருந்து: மூவர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 14

கொழும்பில் இருந்து பதுளைக்குப் பயணித்த தபால் சேவைத் தொடருந்து கொட்டகலை தொடருந்து நிலையத்துக்கு அருகே தடம்புரண்டது. அதில் 3 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் கொட்டகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை நடந்தது. தொடருந்தின் 4 பெட்டிகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தை அடுத்து கொழும்பில் இருந்து பதுளை நோக்கிப் பயணிக்கும் தொடருந்துகள் ஹற்றன் வரையும், பதுளையிலிருந்து பயணிக்கும் தொடருந்துகள் கொட்டகலைவரையும் மட்டுப்படுத்தப்பட்டன. தொடருந்துத் தடத்தைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற- ஜ)

# அதிகாரப் பகிர்வு உடன் அவசியம்

## கிழக்கு முதல்வர் வலியுறுத்து

மட்டக்களப்பு, ஜூலை 14

"அதிகாரப் பகிர்வு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கூட்டரசு மீது சிறுபான்மையினர் வைத்துள்ள நம்பிக்கையைச் சிதறடிக்கக் கூடாது. வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும்"

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முதலாவது நிகழ்வு நேற்று காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது;

சிறுபான்மையினர் கடந்த கால அரசுகளால் ஏமாற்றப்பட்டனர். அது இனியும் நட க்கக் கூடாது. கூட்டரசுக்கு நம்பிக்கையுடன் வாக்களித்த மக்கள் தமக்கான நியா யங்களை எதிர்பார்த்துள்ளனர். சமகாலத்தில் நடக்கும் விடயங்கள் அரசு மீதான நம்பிக்கையைக் குறைக்கின்றன.

பெரும்பான்மையினரிடம் கெஞ்சும் நிலைமை சிறுபான்மையினருக்கு இனியும் வேண்டாம். புதிய அரசமைப்பில் சிறுபான்மையினருக்கான உரிமைகளை வழங்க வேண்டும். மாகாண சபைகளுக்குக் காணி, சுகாதாரம் உட்பட எழுத்துமூலம் வழங்கப்பட்ட எத்தனையோ அதிகாரங்கள் இன்னமும் வழங்கப்படாதுள்ளன.

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புக்காகக் கொழும்பு அமைச்சர்களின் அலுவலகங்களில் நாம் ஏறி இறங்குகின்றோம். மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தால் பட்டதாரிகள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைமை ஏற்பட்டிருக்காது. நாமும் அமைச்சுக்களில் ஏறி இறங்க வேண்டிய தேவை இருக்காது.

இந்த நிலைமை இனியும் தொடரக் கூடாது - என்றார். (ற -ஜ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### இராணுவ...

இது தொடாபாக இராணுவ மற்றும் பொலிஸ் தரப்பினால் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த முகாமின் அதிகாரி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, அநுராதபுரம் பொலிஸ் தலைமையகத்தின் குற்ற விசாரணைப் பிரிவினர் மற்றும் பொலிஸ் மோப்ப நாய்ப் பிரிவினர் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த முகாமில் இருந்து படையினர் வெளியேறுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாமின் ஆயுதக் களஞ்சியசாலைக் கதவை உடைத்து, அங்கிருந்த இரு துப்பாக்கிகள் களாவாடப்பட்டுள்ளன என்று இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், துப்பாக்கித் தோட்டாக்கள் எவையும் காணாமற்போகவில்லை என்றும், கடந்த மாதம் 28ஆம் திகதியே, குறித்த முகாமிலிருந்து இறுதியாக ஆயுதங்கள் வெளியே எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

### எழுதாரகை...

நாளை யும், கொழும்புத் துறைமுகத்தில் இடம்பெறவுள்ளது. இதன் பின்னர், எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் படகு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 134 மில்லியன் ரூபா செலவில் எழுதாரகை படகு டொக்கியாட் நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகின்றது. 40 ஆசனங்களைக் கொண்ட இந்தப் படகில் சுமார் 100 பேர் பயணிக்க முடியும். அத்துடன் 3 தொன் பொருள்களை ஒரே தடவையில் கொண்டு செல்ல முடியும். எழுவைதீவு கடற்கரைப் பகுதிக்குச் சாதாரணமாகப் பெரிய படகுகளைக் கொண்டு செல்ல முடியாது. ஆனால் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய படகு இரண்டரை அடி தண்ணீரிலும் மிதக்கக் கூடியவாறு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது.

எழுதாரகையின் வெள்ளோட்டம் இன்றும் நாளையும் கொழும்புத் துறைமுகத்தில் நடைபெறவுள்ளது. (த-5)

### தமிழ்த்...

மன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார்.

தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மேலும், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய வகையிலான அரசியல் அமைப்பொன்றை உருவாக்கும் முயற்சி இடம்பெற்று வருகின்ற நிலையில், பன்னாட்டுச் சமூகத்தின் உறுதுணையுடன் தீர்வுக்கான வழிவகைகளை ஏற்படுத்த முனைப்புக் காட்ட வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ்த் தலைமைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு உருவாக்கத்தில் தென்னிலங்கைச் சக்திகள் குழப்பத்தை ஏற்படுத்தித் தேசிய இனங்களான தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களுக்கான நிம்மதியான எதிர்காலத்தை ஏற்படுத்தத் தடையாக உள்ளன.

மாற்றுத்தலைமை என்ற எண்ணக்கருவைக் கலைத்து செயற்படவேண்டும் என்ற வடக்கு முதலமைச்சரின் காலச் சூழலை உணர்ந்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்த் தலைமைகள் செயற்பட வேண்டும். அவ்வாறின்றி, வடக்குகிழக்கில் தமிழ்த் தலைமைகள் மீதான அதிருப்தி ஏற்படுமாயின் தென்னிலங்கைக் கட்சிகள் வளர்ச்சியடைவதற்குக் காரணமாக அது அமையும்.

இவ்வாறான நிலை தமிழர்களின் எதிர்கால வாழ்வியலையும் அரசியல் ரீதியான முன்வைப்புகளையும் கேள்விக்குட்படுத்தும். அத்துடன் அரசியல் ரீதியான கோரிக்கைகளும் ஆக்கபூர்வமற்றதாக்கிவிடும் - என்றுள்ளது. (த)

### பிரிவினை...

நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கொழும்பில் 5 தமிழ் மாணவர்கள் உள்பட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், கடற்படையின் முன்னாள் பேச்சாளரும், முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளருமான தசநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் கூட்டு அரசு பாதுகாப்புத் தரப்பினரை வேட்டையாடி வருகின்றது. தசநாயக்க மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. ஆனால் அவரைக் கைது செய்துள்ளது. கடந்த காலங்களில் சிறந்த கடற்படை வீரருக்கான விருதுகளை அவர் பெற்றுக் கொண்டவர். இலங்கையில் உள்ள மிகச் சிறந்த ஆறு கடற்படை அதிகாரிகளில் அவரும் ஒருவர். இப்படிப்பட்ட ஒருவரைத் தமிழ்ப் பிரிவினைவாதிகளை குசிப்படுத்துவதற்காக இந்த அரசு கைது செய்துள்ளது - என்றார். (த-5)

### மீள்...

யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்திய பின்னர் மீதமாகவுள்ள கழிவுகளை கீரிமலையில் உள்ள பெரும் பள்ளங்களில் கொட்டி நிரவும் திட்டத்துக்கான உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது. கொழும்பு அரசின் சுற்றாடல் அதிகார சபை, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் வலி.வடக்குப் பிரதேச சபைச் செயலாளர் ஆகிய மூன்று தரப்புக்களுக்கு இடையே இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கொரிய எக்சிம் வங்கியின் நிதி உதவியில், கொழும்பு அரசின் சுற்றாடல் அதிகார சபையால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்தத் திட்டம் 20 வருடங்களைக் கொண்டது. திட்டத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்தல், செயற்படுத்தல் தொடர்பான உடன்படிக்கையே நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குப்பைகளை அகற்றும் பணி சவாலாக எழுந்துள்ளது. சேகரிக்கப்படும் குப்பைகளை எங்கே கொட்டுவது என்பதிலும் பிரச்சினை காணப்படுகின்றது. இவற்றுக்கு தீர்வு காணும் நோக்கில், சேகரிக்கப்படும் குப்பைகள் முதல் கட்டமாக தரம்பிரிக்கப்படும். அவற்றில் உக்கக் கூடிய பொருள்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி பசளை தயாரிக்கப்படும். இதில் எஞ்சும் இறுதிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு கீரிமலையில் உள்ள பெரும் பள்ளத்தில் போட்டு நிரவப்படும். அதே போன்ற உக்காத கழிவுகளைப் பயன்படுத்தி மீள் சுழற்சி மேற்கொள்ளப்படும். அதன் பின்னரும் எஞ்சும் இறுதிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு கீரிமலையில் உள்ள பெரும் பள்ளத்தில் போட்டு நிரவப்படும்.

கீரிமலையில் உள்ள பள்ளத்தில், கழிவுகள் கொட்டப்படுவதால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படாதவாறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். இதே போன்றதொரு திட்டம் கம்பகாவில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளது. (வ-ற-5,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவி கடத்தல்; இருவருக்கு மறியல்

சாவகச்சேரி, ஜூலை 13
பதின்ம வயது மாணவியை கடத்திச் சென்ற நபரையும் அவர்கள் தங்குவதற்கு வீடு கொடுத்து உதவிய நபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.
தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பதின்ம வயது மாணவி கடந்த 30 ஆம் திகதி கடத்தப்பட்டார். கடத்தியவர் மாணவியுடன் வன்னிப் பிரதேசத்தில் உள்ள நண்பரின் வீட்டில் தங்கியிருந்து குடும்பமாக வாழ்ந்துள்ளார். மாணவியின் பெற்றோர் கொடுத்த முறைப்பாட்டை பொலிஸார் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்திருந்தனர்.
மாணவியையும் அவரைக் கடத்திச் சென்ற நபரையும் சிறுமி எனத் தெரிந்தும் அவர்கள் குடும்பமாக வாழ்வதற்கு வீடு கொடுத்து உதவிய நபரையும் பொலிஸார் கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
மூவரையும் சாவகச்சேரி நீதிவான் மன்றில் கொடிகாமம் பொலிஸார் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான், மாணவியைக் கடத்திச் சென்ற நபரையும் வீடு கொடுத்து உதவிய நபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். மேலும் மாணவியை நன்னடத்தைப் பாடசாலையில் ஒப்படைக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார். (வ-4,9)

# மன்னார் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக பொது மக்கள் முறைப்பாடு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வன்னி மாவட்ட அலுவலகம் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 14
மன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தில் சிறுகுற்றப் பிரிவில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொதுமக்கள் சிலர் முறைப்பாடு வழங்கியுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வன்னி மாவட்ட இணைப்பாளர் எம். ஆர். பிரியதர்சன தெரிவித்தார்.
"மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றப்பிரிவில் பணியாற்றும் அதிகாரிகள் சிலர் பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றனர். அவர்கள் பொய்யான குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் விசாரணைகள் நேர்மையான முறையில் அமைந்திருக்கவில்லை.
பொலிஸ் அதிகாரிகளின் இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நீதியைப் பெற்றுத்தர வேண்டும்" என்று பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வன்னி மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.
இந்த முறைப்பாடு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தால் வன்னி பிராந்தியத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
14 நாள்களுக்குள் உரிய பதில் வழங்குமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வன்னி மாவட்ட இணைப்பாளர் எம். ஆர். பிரியதர்சனதெரிவித்தார். (4)

# வேலணை முருகனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
வேலணை வங்களாவடி சிறிவள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. (வ-5)

# ஈழத்துத் திரைப்படம் யாழ்.நகரில் இன்று

இலங்கையில் தயாரிக்கப்பட்ட முழுநீள திரைப்படம் சண்டியன் இன்று இரவு 6.30 காட்சியாகவும் நாளை மற்றும் மறுநாள் 16ஆம் திகதி மு.ப. 10.30, பி.ப. 2.30 மற்றும் இரவு 6.30 காட்சிகளாக யாழ்ப்பாண நகரிலுள்ள ராஜா திரையரங்கில் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. (வ)

# 4 கிலோ கஞ்சாவுடன் பயணி ஒருவர் வவுனியாவில் கைது

4 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கு பயணித்த பேருந்து வவுனியாவில் தரித்து நின்றது. அதில் பயணித்த ஒருவரின் பயணப் பொதியை பொலிஸார் சோதனை செய்தனர். அதன்போதே 4 கிலோ 300 கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டது. அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டார்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

# யார்தான் அகற்றுவார்கள்?



யாழ்ப்பாணம், பண்ணைக் கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தும் நடவடிக்கைகள் பெருமளவு நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் பண்ணைக் கடற்கரையில் பெருமளவு பிளாஸ்ரிக் கழிவுகள் தேங்கியுள்ளன. அவற்றை அகற்றுவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (வ-37)

# பூநகரி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம் செவ்வாயன்று

பூநகரி, ஜூலை 14
பூநகரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச செயலாளர் சி.ச.கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார். (4)

# தனியார் கல்லூரியின் பெயர்ப்பலகையை அகற்றியதால் யாழ்ப்பாண நகரில் பரபரப்பு

## மாநகர சபையின் அடாவடியெனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் ஜூலை 14
யாழ்ப்பாணம் நகரில் உள்ள பிரிட்டிஷ் றோயல் கல்லூரியின் பெயர்ப் பலகையை சிலர் அகற்றியதால் நேற்றையதினம் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.
இது யாழ்ப்பாணம் மாநகர சபையின் அடாவடியான செயற்பாடு என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பில் பிரிட்டிஷ் றோயல் கல்லூரியின் பணிப்பாளர் ராஜ் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள எமது கல்லூரிக்கு வந்த 4 பேர் கொண்ட கும்பல் கல்லூரியின் பெயர் பலகைகளை அடாவடியாக பிடுங்கினார்கள். எதற்காக எமது பெயர்ப் பலகைகளை பிடுங்குகின்றீர்கள்? என அவர்களிடம் நாம் கேட்டோம். எதுவித பதிலையும் கூறாமல் அவர்கள் செயற்பட்டனர். "அனைத்தையும் பிடுங்கி எறியுங்கள்" என அந்த இடத்தில் அவர்களுடன் நின்ற ஒருவர் கூச்சலிட்டார்.
அதன் பின்னர் எமது காணியைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த சங்கிலியையும் அவர்கள் அறுத்தனர். அப்போது அங்கு ஒரு வாகனம் வந்தது. அந்த வாகனம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சொந்தமான வாகனமாகும். அடாவடியாகப் பெயர்ப் பலகையை பிடுங்கிய நபர்கள் தம்மை அடையாளம் காட்டவில்லை. எனினும் அங்கு வந்த வாகனத்தில் எழுதப்பட்டிருந்த பெயரை வைத்தே நாம் அவர்கள் யாழ்ப்பாண மாநகர சபையின் பணியாளர்கள் என இனம் கண்டோம்.



எமது கல்லூரியின் பெயர்ப்பலகையை அகற்ற வேண்டுமானால் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எமது காணிக்குள்ளேயே பெயர்ப் பலகையை நாம் கட்சிப் படுத்தியுள்ளோம். அவ்வாறு காட்சிப் படுத்தியது தவறு எனில் எமது பெயர்ப் பலகையில் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அதனை அகற்றுமாறு அறிவுறுத்தியிருக்கலாம். ஆனால் அதனைவிடுத்து எமது கல்லூரி அங்கு இயங்கக் கூடாது எனற மனோ நிலையில் அங்கு வந்த நபர்கள் அடாவடியில் ஈடுபட்டுள்ளனர் - என்றார்.
"யாழ்ப்பாண மாநகர சபை ஊழியர்களே அந்தப் பெயர்ப் பலகையை அகற்றினர். யாழ்ப்பாண மாநகர சபைக்கு சொந்தமான வீதியிலிருந்து 3 அடியைத் தாண்டியே எந்த வேலைத்திட்டங்களையும் செய்ய வேண்டும். யாழ்ப்பாண மாநகர் சபையின் எல்லைக்குள் தனியார் காணியானாலும் விளம்பரங்களை காட்சிப்படுத்த வேண்டுமானால் முதலில் மாநகர சபையின் முன் அனுமதியைப் பெறவேண்டும்.
வீதிக்கு அருகே விளம்பரங்களைக் காட்சிப்படுத்தும்போது வாகனச் சாரதிகள் அதனை பார்த்து செல்வதால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே நாம் பல விடயங்களை ஆராய்ந்தே விளம்பரங்கள் காட்சிப்படுத்த அனுமதி வழங்குகின்றோம். பிரிட்டிஷ் றோயல் கல்லூரியும் முறையான அனுமதி எடுக்கதாதன் காரணமாகவே அதன் பெயர்ப் பலகையை நாம் அகற்றினோம்" என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (வ-8)

# கைதடியிலிருந்து 40 முதியோர்கள் மடுத் தேவாலயத் தரிசனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14
கைதடி அரச முதியோர் இல்ல ஆன்மிகச் சுற்றுலாவாக 40 முதியவர்கள் மடு தேவாலயத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சுற்றுலாவுக்கு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த முதியவர்களே அழைத்துச் செல்லப்படவுள்ளனர். யாழ்ப்பாணப் பிரதேச செயலக பகுதியைச் சேர்ந்த 30 முதியவர்கள் மற்றும் கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 10 முதியவர்களுமாக 40 முதியவர்கள் இவ்வாறு மன்னார் மடு தேவாலயத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.
வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் ஆன்மிகச் சுற்றுலாவாக முதியவர்கள் ஆலய தரிசனங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டும் வருகின்றனர் என்று கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் கிருபாகரன் தெரிவித்தார். (வ-21-17)

# ஓவியர் வீர சந்தானம் மறைவு

சென்னை, ஜூலை 14
முள்ளிவாய்க்கால் நினைவுகளை ஓவியங்களாக உருவாக்கிய தமிழ்த் தேசிய உணர்வாளர் வீர சந்தானம் தமிழகம் தஞ்சையில் நேற்றுக் காலமானார்.
அவர் மூச்சுத் திணறல் காரணமாகவே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
ஓவியர், நடிகர், சமூகச் செயற்பாட்டாளர் எனப் பல பரிமாணங்களைக் கொண்ட வீர சந்தானம், மொழி, இனம், நாடு பண்பாடு தொடர்பான விடயங்களில் உணர்வுடனும் முனைப்புடனும் இயங்கி வருபவர்.
அவர், தஞ்சையில் உள்ள முள்ளிவாய்க்கால் முற்றம் நினைவிடத்தை வடிவமைத்தவர். அங்கு முள்ளிவாய்க்கால் நினைவுகளை ஓவியங்களாக உருவாக்கியுள்ளார். (வ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடைச் சிறையில் கொலை சிஐடியின் விசாரணைகள் ஆரம்பம்


கொழும்பு, ஜூலை 14
2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் 27 கைதிகள் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவின ரின் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.
2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெலிக்கடை சிறைச் சாலையில், பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது, ஏற்பட்ட முரண்பாட்டில் 27 கைதிகள் கொல்லப்பட்டனர்.
இது தற்செயலாக இடம்பெற்ற ஒன்று என தெரிவிக்கப்பட்டாலும், இது திட்டமிட்ட கொலை என குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இந்தநிலையில், இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, சுதேஷ் நந்திமால் டி சில்வா என்பவர் இரகசிய பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கினார்.
சம்பவம் இடம்பெற்றவேளை அவர் அந்தச் சிறையில் கைதியாக இருந்த ஒருவர் என்பதோடு இதனை நேரில் பார்த்தவரும் என கூறப்படுகின்றது. (வ)

## ஓட்டோவுக்கு முற்பணத்தைப் பெற்று மோசடி செய்தவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 14
முச்சக்கர வண்டியை விற்பனை செய்வதாகக் கூறி முற்பணத்தைப் பெற்று மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று உத்தரவிட்டது.
"யாழ்ப்பாணம், அரியாலை வேலம்பர் சாலையில் வசிக்கும் ஒருவர் நீதிமன்றால் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட முச்சக்கரவண்டி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளார். அதனை 80ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப் போவதாக அவர் கூறியுள்ளார். அந்த முச்சக்கர வண்டியை வாங்குவதற்கு முன்வந்தவரிடம் அவர் 50ஆயிரம் ரூபாவை முற்பணமாகப் பெற்றுள்ளார்.
50 ஆயிரம் ரூபா முற்பணத்தைப் பெற்றுக் கொண்ட அவர் முச்சக்கர வண்டியை வழங்காது ஏமாற்றி வந்துள்ளார். அத்துடன், முற்பணத்தை வாங்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதனால் பாதிக்கப்பட்டவர் முச்சக்கர வண்டி உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளின் பின் முச்சக்கர வண்டியை விற்பனை செய்வதாகக் கூறி முற்பணத்தைப் பெற்று மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன், சந்தேகநபரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-4,12)

## வவுனியாவில் குழு மோதல் 4 இளைஞர்கள் படுகாயம்

வவுனியாவில் 2 குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலின் போது 4 இளைஞர்கள் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா செக்கட்டிபிலவு பகுதியில் நேற்றுப் பி.ப. 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
"வீதியில் நின்றிருந்த இளைஞர்களுடன் வேறு பகுதிகளிலிருந்து வந்த இளைஞர்கள் சிலர் தர்க்கத்தில் ஈடு பட்டனர். பின்னர் அவர்கள் இரு தரப்புகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றது. கம்பி, தடிகள் கொண்டு அவர்கள் மோதலில் ஈடுபட்டனர்.
இதில் செக்கட்டிப்பிலவு பகுதியைச் சேர்ந்த அ. மயூரன் (வயது-28) பி. சுவிதரன் (வயது-27), கே.இந்திரன் (வயது-27), கே.தங்கீதன் (வயது-24) ஆகியோர் படுகாய மடைந்தனர். இந்தத் தாக்குதல் முன்விரோதம் காரணமாகவே இடம்பெற்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். மோதலில் ஈடுபட்டவர்கள் எவரும் நேற்று மாலை வரை கைது செய்யப்படவில்லை" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-5)



## மணல் கடத்திய குற்றச்சாட்டில் ஏழு சாரதிகள் அக்கராயனில் கைது

கிளிநொச்சி, ஜூலை 14
கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் உழவு இயந்திரச் சாரதிகள் 7 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து உழவு இயந்திரங்கள் மற்றும் மணல் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அக்கராயன்குளம் பகுதிக்குச் சென்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் மணல் ஏற்றிய உழவு இயந்திரங்களின் அனுமதிப்பத்திரங்களை சோதனையிட்டனர்.
அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 7 சாரதிகளை அவர்கள் கைது செய்தனர். அத்துடன் அவர்களிடமிருந்து உழவு இயந்திரங்கள் மற்றும் மணல் என்பனவும் கைப்பற்றப்பட்டன.
சந்தேகநபர்கள் மல்லாவிப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்கப் பட்டனர்.
அக்கராயன் குளப்பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது. இது தொடர்பில் அக்கராயன்குளம் பொலிஸாருக்கும் கிளிநொச்சி பொலிஸாருக்கும் தகவல் வழங்கிய போதும் மணல் கடத்தல் இடம்பெறுகிறது என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (4-6)

## வேளாங்கன்னியின் நற்கருணைப் பெருவிழா

கொழும்புத்துறை, ஜூலை 14
எழிலூர் தூய வேளாங்கண்ணி மாதா ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
நாளைமாலை 5.30மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திருச்செப மாலையுடன் திருவிழாத் திருப்பலி இடம்பெற்று திருச்சொரூப பவனியும் நடைபெறும் என்று மணியம் தோட்டப் பங்குத் தந்தை அருட்பணி செபஸ்ரியன் அடிகள் தெரிவித்தார். (4,135)

## வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 14
அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்து.
யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும், அன்னையின் திருச்சொரூப பவனியும் இறையாசீரும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 | 60 |
| கத்தரி | 80 | 100 | 120 | 140 | 140 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 100 | 160 | 120 | 140 |
| பாகல் | 120 | 160 | 240 | 160 | 180 |
| க.கிழங்கு | 140 | 120 | 160 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 300 | 260 | 280 | 260 |
| பூசணி | 80 | 80 | 100 | 120 | 80 |
| தக்காளி | 150 | 120 | 140 | 150 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 60 | 60 |
| கீரை | 20 | 30 | 40 | 15 | 30 |
| பொன்னாங்கானி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 200 | 250 | 300 | 350 | 200 |
| புடோல் | 80 | 60 | 100 | 80 | 80 |
| கோவா | 120 | 120 | 140 | 120 | 120 |
| வெண்டி | 100 | 120 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 150 | 140 | 180 | 180 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 | 100 |
| தேங்காய் | 70 | 60 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 90 |
| தேசிக்காய் | 70 | 60 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 180 | 180 | 240 |
| இராசவள்ளி | | | 300 | 300 | 260 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 240 | 150 | 200 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 300 | 300 | 600 | 300 |
| கணவாய் | 600 | 700 | 800 | 1000 |
| பாரை | 500 | 600 | 700 | – |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 500 | 500 | 400 |
| விளை. | 500 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 500 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஒரா | 400 | 400 | 500 | – |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 150 | 400 | 300 |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 350 | 250 | 400 | – |
| மதனம் | 300 | 150 | 250 | – |
| கொய் | 200 | 60 | 80 | 100 |
| [illegible] | 250 | [illegible] | 300 | – |
| [illegible] | 200 | 200 | 400 | – |




மீன் பிரியர்கள் மீனைச் சமைக்கும் முன்னர் அதனை வெட்டுவதற்கு சிரமப்படுவார்கள். அவர்களுக்கு என்றே தற்போது மீன் வெட்டும் கட்டர் வந்துள்ளது. இது 190 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய தமிழ்மொழித் தின விழா ஒக்.14ஆம் திகதி யாழ். இந்துவில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தேசியதமிழ்மொழித்தினவிழாவை இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு கொழும்பு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. விழாவில் அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவும்கலந்து கொள்வார்என்றுதெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி விழா இடம்பெறும் என்று கல்வி இராஜாங்கஅமைச்சர்வேலுச்சாமிஇராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ளசெய்திக்குறிப்பில்தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

தேசிய தமிழ்மொழித் தின விழா கொழும்பு கல்வி அமைச்சால் ஒவ்வொருவருடமும்நடத்தப்படுகிறது. இந்த வருட தேசிய தமிழ்மொழித் தின விழா தொடர்பான கலந்துரையாடல்நேற்றுமுன்தினம்கொழும்பு கல்வி அமைச்சில் நடத்தப்பட்டது.

தேசியதமிழ்மொழித்தினவிழாவை இம்முறை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்துவதற்குத்தீர்மானிக்கப்பட்டது. அதற்கானஏற்பாடுகள்வடக்குமாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படும்.

விழாவில் முதன்மை அதிதியாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அழைக்கப்படுவார். தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் 375 பேருக்கான சான்றிதழ்களும் பதக்கங்களும் அரச தலைவரால் வழங்கி வைக்கப்படும்.

வெற்றிபெற்ற மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும், தமிழர்கலாச்சாரத்தைப்பிரதிபலிக்கும் வகையில் கலாசார ஊர்வலமும், இந்தியக் கலைஞர்களின் மேடை நிகழ்வுகளும், உள்நாட்டு மற்றும் இந்திய இலக்கிய சொற்பொழிவாளர்களின சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. கடந்த வருடம் தேசிய தமிழ்மொழித் தின விழா மலையகத்தின்தலைநகரானகண்டியில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன், கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரன, வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலளார் இ. இரவீந்திரன், வடக்கு கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவின் பணிப்பாளர் எஸ். முரளிதரன், மத்திய மாகாண மற்றும் வடக்குமாகாணமேலதிககல்விப்பணிப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (4)

# சிங்கள மக்களுக்குக் கல் வீடு தமிழர்களுக்குப் பொருத்து வீடு

## வவுனியா மாவட்டத்தில் இந்த நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 14

வவுனியா மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களுக்கு 800 கல் வீடுகள் அமைக்கப்படுகின்றன. ஆனால்அங்குவாழும்தமிழ்மக்களுக்கு ஆயிரத்து 800 பொருத்து வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் பொஸ்வேவாப் பகுதியில் உள்ள சிங்கள மக்களுக்கு800கல்வீடுகள்தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் 5.5 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படுகின்றன.

அந்தப் பகுதியில் 2013ஆம் ஆண்டின் இறுதியில் வந்து குடியேறிய குடும்பங்களேஅதிகமாகவாழ்கின்றன. இவ்வாறு வாழும் குடும்பங்கள் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பிரிவினர் முல்லைத்தீவு மாவட்டத்துடனும் இன்னும் ஓர் பிரிவினர் வவுனியா மாவட்டத்துடனும் மற்றொரு பிரிவினர் அநுராதபுரம் மாவட்டத்துடனும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு 3 மாவட்டங்களின் பிரதேசங்களுக்கும் பகுதி பகுதியாகக் காணப்படும் அனைத்து மக்களுக்குமான வீட்டுத் தேவையை நிறைவு செய்யும் பொறுப்பு வவுனியா மாவட்டச் செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில்தமிழ்அரசியல்வாதிகளும்தமிழ் மக்களில் கணிசமானோரும் எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருத்து வீடுகளை வவுனியா மாவட்டத்தில் வாழும் ஆயிரத்து 800குடும்பங்களுக்குவழங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனை வழங்கும் நடவடிக்கையை மீள்குடியேற்ற அமைச்சு முன்னெடுத்துள்ளது. (4-101)

# பிரமந்தனாறுக் குளத்து நீர் விவகாரம் கண்டாவளைப் பிரதேச செயலர் கரிசனை

யாழ்ப்பாணம், ஜூலை 14

கிளிநொச்சி மாவட்டம் பிரமந்தனாறுக் குளத்தில் இருந்து இராணுவத்தினர் தண்ணீர் எடுப்பதால் விவசாயிகளின் 300ஏக்கர்பயிர்ச் செய்கை ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. இது தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியிலாளரின்கவனத்துக்குக்கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக கண்டாவளைப் பிரதேசசெயலாளர்முகுந்தன்தெரிவித்தார்.

"பிரமந்தனாறுக் குளத்தை நம்பி விவசாயிகள்பயிரிட்டுள்ளனர். இராணுவத்தினர்பண்ணைத்தேவைக்காகத்தினமும்இரவுபகலாகத்தண்ணீர் எடுத்துச் செல்வதால் குளத்து நீர் வற்றிச் செல்கிறது. அதனை நம்பிப் பயிரிட்ட விவசாய நடவடிக்கைகள்அழிவடையும்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன" என்று பிரதேச விவசாயிகள் கடந்தவாரம் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இது தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கிளிநொச்சிமாவட்டம்பிரமந்தனாறுக்குளத்தில்உள்ளதண்ணீருக்கு ஏற்ப300ஏக்கரில்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்தினரின் செயற்பாட்டால் விவசாய நடவடிக்கை அழிவடையும் நிலையே காணப்படுகிறது என்று விவசாயிகள் கூறியுள்ளனர்.

குளத்தில் காணப்படும் நீரின் அளவைக் கருத்திற் கொண்டே 300 ஏக்கரில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்குஅருகில்உள்ளஇராணுவத்தினரின் கீழ் இயங்கும் சிவில் பாதுகாப்புப் பிரிவினரின் பண்ணைத் தேவைக்காகஇரவுபகலாககுளத்து நீர்எடுக்கப்பட்டால்நிச்சயமாகவிவசாயிகள் பாதிப்படைவர். இந்த விடயத்தில் உடனடியாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளரின்கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது" என்று கண்டாவளைப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளருக்கு அழைப்பெடுத்தபோதும் அவரதுதொடர்புகிடைக்கவில்லை. (4-101)

# மணல்கடத்தியவருக்கு ரூபா 50, 000 தண்டம்

உழவு இயந்திரத்தில் சட்ட விரோதமாகமணல்ஏற்றியசாரதிக்கு50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

[illegible]னையிறவுப் பகுதியில் கடந்த வாரம் சட்டவிரோமாக ஏற்றிச் சென்றகுற்றச்சாட்டில்உழவுஇயந்திரச் சாரதி கைது செய்யப்பட்டார். கிளிநொச்சிமுல்லைத்தீவுமாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் அந்தச் சாரதியைப் பளை பொலிஸாரிடம் மேலதிக நடவடிக்கைக்காக ஒப்படைத்திருந்னர்.

சந்தேகநபர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார். குற்றச்சாட்டை அவர்மன்றில்ஒப்புக்கொண்டார். அதனால் அவரிடம் 50 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டது. (4-6)

# 30,000 லீற்றர் பனங்களியைச் சேமிக்க யாழ். பனை அபிவிருத்திச் சபை திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இந்த வருடம் பனம்பழப் போகத்தின்போது 30 ஆயிரம் லீற்றர் பனங்களியைச் சேமித்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர்.

"தற்போது பனம் பொருளிலான உற்பத்திகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கூடுதலாகப் பனங் களியில் இருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் ஐஸ்கிறீம், ஜூஸ் போன்றவற்றின் உற்பத்திகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. 2016ஆம் ஆண்டின் பனம் பழ போகத்தில் சுமார் 26 ஆயிரம் லீற்றர் வரையான பனங்களி பனம் பழத்தில் இருந்து பிரித்து சேமித்து வைக்கப்பட்டது. இந்தப் பனங்களி ஊடாக சபையில் அதிகளவிலான உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

இந்தப் பொருள்களுக்குக் கூடுதலான கேள்வியும் வரவேற்பும் கிடைத்தன. இதன் காரணத்தால் பனங்களி உற்பத்தியை இந்த ஆண்டில் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று பனை அபிவிருத்தி சபையினர் மேலும் தெரிவித்தனர். (4-17)

# வடக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்பண்ணை சுகாதாரக் கிராமத்தில் இயங்கி வந்த வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் 611, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள ஆணையாளர் திருமதி சி. துரைரட்ணம்அறிவித்தார்.

இந்த இடம் மாற்றத்தால் அலுவலகதொலைபேசிமற்றும்தொலைநகல் இலக்கங்களில் மாற்றம் இடம்பெறவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (4-ரி)

# வடக்கில் கணித, விஞ்ஞான ஆசிரியர் நியமனம் 38 பேர் கடமைகளைப் பொறுபேற்கவில்லை

## மாகாண கல்விச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

"வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கானஆசிரியர்வெற்றிடங்களை நிரப்புவதற்காக 219 பட்டதாரிகள்நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டது. அவர்களில் இன்றுவரை 181 பேர் மட்டுமே கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர். மிகுதி 38 பேர் இதுவரை பாடசாலைகளில் கடமையைப்பொறுப்பேற்கவில்லை" இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கானஆசிரியர்வெற்றிடம் இன்றுவரை முழுமையாக நிரப்பப்படவில்லை. அந்த 2 பாடங்களுக்கான பட்டதாரிகள் இல்லாமையே காரணம்.

வடக்குமாகாணக்கல்வித்திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கென 418 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றைநிரப்புவதற்காகப் பத்திரிகைகள் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கு 353 பேரிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்தன. அவர்களுக்குப் போட்டிப்பரீட்சை இன்றி நேரடியாகவே கடந்த மே மாதம் 25ஆம், 26ஆம்திகதிகளில்நேர்முகத்தேர்வுநடத்தப்பட்டது. அதனைத் தவற விட்டவர்களுக்காக கடந்த மாதம்5ஆம்திகதிநேர்முகத்தேர்வு நடத்தப்பட்டது. அவ்வாறு 3 நாள்களும் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு 286 பேர்தோற்றினர். மிகுதி 67 பேரும் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றவில்லை.

நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய 286 பேரினதும் சான்றிதழ்கள், ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டதில் 219 பேர் நியமனத்துக்குத் தகுதியானவர்கள் எனக் கண்டறியப்பட்டனர். சிலருக்குத் தகுதி இருந்தபோதும் சான்றிதழ் கைவசம் வைத்திருக்காத காரணத்தால் சந்தர்ப்பத்தை தவறியவர்களும் உள்ளனர்.

தகுதி எனக் கண்டறியப்பட்ட 219 பட்டதாரிகளுக்கும் கடந்த மாதம் 10ஆம் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு 12 ஆம் திகதி தொடக்கம் கடமையைப் பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் வரை மொத்தமாக 181 பேர் மட்டுமே தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். இதன்பிரகாரம் நியமனக் கடிதங்களைப் பெற்ற பின்னர் 38 பேர் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை - என்றார். (4-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பசுவின் பால் உற்பத்தித்திறனை அதிகரிக்க செயற்கை முறையில் சினைப்படுத்தல்

## வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடக்கு மாகாணத்தில் பால் உற்பத்தி குறைந்த பசு மாடுகளை செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலமாக நல்லின மாடுகளாக மாற்றுவதனால் அவற்றின் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள பால் உற்பத்தித் திறன் குன்றிய பசு மாடுகளை நேரடியாகவோ அல்லது உடனடியாகவோ வினைத்திறன் கூடிய மாடுகளாக மாற்ற முடியாது. அத்தகைய மாடுகளை நல்லின பசுக்களுடன் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ சினைப்படுத்தல் செய்வதன் மூலமாக எதிர்காலத்தில் எமது உள்ளூர் பசு மாடுகளின் சந்ததியை அதிக பால் உற்பத்தித்திறன் கொண்ட பசுக்களாக மாற்ற முடியும்.

பால் உற்பத்தித்திறன் குறைந்த பசு மாடுகளைச் சினைப்படுத்துவதன் மூலமாக உருவாகும் கன்றுகள் தாய் மாட்டைவிட பால் உற்பத்தித்திறன் கூடியனவாக உருவாகும். கால்நடை வளர்ப்பாளர்களில் சிலரே பசுக்களைசெயற்கைமுறைச்சினைப்படுத்தலுக்கு ஆர்வம் காட்டுகின்றனர். பட்டியாக மாடுகளை வளர்க்கும் பண்ணையாளர்கள் இதனை விரும்பாததனால், அவர்களின் மாடுகள் பால் உற்பத்தித்திறன் குன்றிய மாடுகளாகவே காணப்படுகின்றன.

பால் உற்பத்தித்திறன் குன்றிய பசு மாடுகளின் கன்றுகளை அதிக பால் தரும் இனமாகப் பெறுவதற்காக செயற்கை முறைச் சினைப்படுத்தலை வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. எனினும் கால்நடை வளர்ப்பாளர்கள் உள்ளூர் மாடுகளுடன் சினைப்படுத்துவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர். எனவே எதிர்காலத்தில் கால்நடை வளர்ப்பாளர்கள் தமது பசு மாடுகளை பால் உற்பத்தித்திறன் அதிகம் கொண்டவையாக மாற்ற வேண்டுமானால் செயற்கைச் சினைப்படுத்தலைச் செய்யமுடியும் - என்றார். (4-8)



## குழந்தைகளுக்கு உணவு ஊட்டும் போது

★ ஒரு வயதாகும் வரை சீனியையோ, உப்பையோ சேர்க்காதீர்கள்.

★ கடைகளில் வாங்கும் சத்து மாக்களுக்கு பதிலாக வீட்டிலேயே சத்துமாக்களை தயாரித்து ஊட்டுவதே சிறந்தது.

★ உணவூட்டும் நேரங்களில் கதை கூறுதல் பாடுதல் பிள்ளையை மகிழ்விக்கும்.

★ தொலைக்காட்சி பார்த்த வண்ணம் உணவூட்டலை தவிர்க்கவும்.

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகரசபை.*



# பாடசாலை மாணவி கடத்தலுக்கு ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மல்லாகத்தில் பாடசாலை செல்லும்போது மாணவி ஒருவர் வானில் கடத்தப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் இந்தச் சம்பவத்தின் மூலம் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற தன்மை குறித்தும் கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாணவி கடத்தப்பட்ட சம்பவம் மாணவர்களையும் பெற்றோரையும் வெகுவாகப் பாதித்துள்ளது. மல்லாகம் நீதிமன்றுக்கும் காங்கேசன்துறை உதவி மாவட்ட பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. குற்றவாளிகளும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. கடத்தப்பட்ட மாணவியின் ஒளிப்படத்தை வானில் இருந்தவர்கள் எடுத்து வேறு ஒருவருக்கு அனுப்பியதாகவும் அவர்களால் கடத்துவதற்கு திட்டமிட்ட மாணவி அவரல்ல என்பதை அறிந்தே அந்த மாணவியை வானிலிருந்து வரணிப் பகுதியில் தள்ளிவிட்டதாகவும் அறியமுடிகிறது.

இந்தச்சம்பவம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தானநிலையையே கட்டியம் கூறி நிற்கின்றது. இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். மாணவர்களும் பெற்றோர்களும் பயமின்றி வாழும் சூழலை விரைவில் பொலிஸார் ஏற்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (4)

# புலிகளின் இளவரசி போர்க்கப்பல் புதுக்குடியிருப்புக்கு இடமாற்றம்



யாழ்ப்பாணம், ஜூலை 14

முல்லைத்தீவு, புதுமாத்தளனில் இராணுவத்தினரால் போர்ச் சின்னமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 'இளவரசி' என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க்கப்பல் புதுக்குடியிருப்புக்கு நகர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு இறுதிப் போரின் பின்னர் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய போர்த் தளபாடங்கள் இராணுவத்தினர் புதுமாத்தளன், மந்துவில் பகுதியில் போர்ச் சின்னங்களாகக் காட்சிப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் இளவரசி என்ற போர்க் கப்பலை இராணுவத்தின் பொறியியல்பிரிவினர் நேற்றுப் பிற்பகல் முல்லைத்தீவு ஏ35 முதன்மைச் சாலை ஊடாக புதுக்குடியிருப்புக்கு நகர்த்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் கடற்படையினரின் போர்க்கலங்களைத் தாக்கி அழிப்பதற்கு கடற்புலிகள் மகளிர் அணியினர் இந்தக் போர்க் கப்பலை பயன்படுத்தி யிருந்தனர் என்று கூறப்பட்டது. (4)

# முல்லைத்தீவில் 50 கிராமங்கள் வறட்சியால் கடும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

"முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் 136 கிராம அலுவலர் பிரிவுகளில் 135 பிரிவுகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 50 கிராம அலுவலர் பிரிவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன"

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. சில பிரிவுகளில் குடிதண்ணீர் மட்டுமன்றி ஏனைய தேவைகளுக்கும் தண்ணீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தப் பாதிப்புத் தொடர்பில் இடர் முகாமைத்துவப் பிரிவினரின் கவனத்துக்குக்கொண்டு சென்றுள்ளோம். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையானகுடிதண்ணீரை விநியோகிப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

அதன்பிரகாரம் பிரதேச செயலகங்களின் குடிதண்ணீர் விநியோக வாகனங்களும், பிரதேச சபைகளின் குடிதண்ணீர் விநியோக வாகனங்களும் இந்தப் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் நிறைவான சேவையை வழங்குவதற்குப் போதுமான தண்ணீர் இல்லை. வாகனங்களுக்கான பற்றாக்குறையும் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கான நிவாரண உதவிக் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் இடர் முகாமைத்துவப் பிரிவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன - என்றார். (4-101)

# ஆனையிறவு ஏரியில் வெடிபொருள்கள்!

## கடல் நீர் வற்றியதால் தென்படுகின்றன என்று மீனவர்கள் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூலை 14

கடும் வறட்சி காரணமாக ஆனையிறவு ஏரியில் நீர் வற்றியுள்ள நிலையில் அங்கு மோட்டார்க் குண்டுகள் பரவலாகக் காணப்படுகின்றன என்று பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

"ஆனையிறவு ஏரியில் நீர் நிறைந்து காணப்பட்டபோது கடற்றொழிலில் ஈடுபட்டோம். தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாகக் கடல் நீர் வற்றியுள்ளது. தொழில் செய்தபோது நீரேரியில் நடந்து திரிந்துள்ளோம். ஆனால் வெடிபொருள்கள் இருப்பது, தண்ணீர் வற்றியுள்ள நிலையில் தற்போதுதான் கண்டுகொள்கிறோம். நடமாடும் பாதைகளில் தற்போது அங்காங்கே வெடிபொருள்கள் காணப்படுகின்றன. இது எமக்கு மாத்திரம் அல்லாது கால்நடைகளுக்கும் பெரும் சவாலாக விளங்குகின்றது" என்று அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் நிலவிய போர் காரணமாக பல பிரதேசங்களில் இவ்வாறு வெடிபொருள்கள் பரவலாக காணப்பட்டன. அவற்றில் அடையாளம் காணப்பட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப டுகின்றன. குறித்த பகுதியில் மிகப் பழைமை வாய்ந்த மோட்டார் வெடிகுண்டுகள் பெரும் எண்ணிக்கையில் மண்ணில் புதையுண்டு காணப்படுகின்றன.

அந்தப் பகுதியில் மக்கள் தமது வாழ்வாதாரத்துக்காகத் தொழிலில் ஈடுபட்டுவருவதுடன் தட்டுவன் கொண்டி கிராமத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களை சேர்ந்த 300க்கு மேற்பட்ட மக்கள் அங்கு வசித்த வருகின்றனர்.

இந்த நிலையில் இவ்வாறு காணப்படும் வெடிபொருள்கள் தொடர்பில் அங்குள்ளவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

"நாங்கள் [illegible] கள் தொடர்பாக மிதிவெடி அகற்றும் பிரிவினருக்குத் தெரிவித்து அவை மீட்கப்பட்டன. இருப்பினும் தோட்டக் காணியில் ஒரு வெடிபொருள் புதைந்த நிலையில் இருப்பதாகத் தெரிவித்தும் அவர்கள் இதுவரை அதனை அகற்றவில்லை. நான் மாற்றுத் தோட்டக் காணியைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளேன்" என்று பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

எமது இத்தகைய நிலைகளைக் கருத்திற்கொண்டு உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோருகின்றனர். (4-6)

# சமுதாய சீர்திருத்த பிரிவினருக்கு நாளை கூட்டம்

வடக்கு மாகாண சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் இந்த வருட அரையாண்டுக்கான மீளாய்வுக் கூட்டம் கிளிநொச்சியில் நாளை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகும்.

இந்த மீளாய்வுக் கூட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள நீதிவான் மன்றங்களில் இயங்கிவரும் சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், வேலைப்பரிசோதகர்கள் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் நவமங்கை அமைப்பால் அம்பாறையில் அறநெறிக் கட்டடம்

மட்டக்களப்பு, ஜூலை 14
கோப்பாய் நவமங்கை ஸ்தாபகரும், இயக்குநருமாகிய திருமதி சுவர்ணா நவரத்தினத்தின் மக்கள் நலன் சார் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை நாவிதன்வெளிப் பிரதேசத்திலுள்ள சவளைக்கடைக் கிராமத்தில் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலைக்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏழு லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தின் திறப்புவிழா கடந்த திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ரீ.கலையரசன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

திருமதி சுவர்ணா நவரத்தினம் 'நவமங்கை' என்ற பெயரில், மன அழுத்தத்துக்குள்ளான பெண்களைப் பராமரிக்கும் நிலையமொன்றை கோப்பாயில் கடந்த ஏழு வருடங்களாக நடத்தி வருகின்றார். அத்துடன் இவரால் கோப்பாய் ஆதார வைத்தியசாலை பன்னிரண்டு லட்சம்ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு அண்மையில் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ய)



# புதிய அரசமைப்புக்கு மக்கள் ஆணை கிட்டும்

## அடித்துக் கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை14
பொதுசன வாக்கெடுப்பில் புதிய அரசமைப்புக்கு மக்களது அங்கீகாரம் நிச்சயம் கிடைக்கும் என்று தேசிய அரசின் முக்கிய பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சிங்கள பௌத்த மக்களின் பெருந்தலைமைத்துவமான மகாநாயக்க தேரர்களினதும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களதும் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளை அரசு முன்னெடுத்துவருகின்றது. எனினும் பொதுசன வாக்கெடுப்புக்கு வரும் அளவிற்கு எந்தவொரு திருத்தங்களையும் தாம் அனுமதிக்கப்போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்து வருகின்றார்.

இருந்தபோதிலும் புதிய அரசமைப்பு பொதுசன வாக்கெடுப்புக்கு விடப்பட்டே நிறைவேற்றப்படும் என்ற முடிவில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி உறுதியாக இருக்கின்றது. இந்த நிலையில் கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா, புதிய அரசமைப்பு பொதுசன வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதனை மக்கள் ஏற்றுக் கொண்டனர். அதனால் இருக்கின்ற அரசமைப்பைத் திருத்துவதைப் பார்க்கிலும் புதிய அரசமைப்பைக் கொண்டுவரலாம். நாடாளுமன்ற அனுமதியுடனும், பொதுமக்கள் கருத்துக் கணிப்புடனும் மற்றும் மக்களின் அனுமதியுடனும் இதனை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார். (த-ய)

# காணமல்போனோர் சட்டவரைவு அவசியம் கொண்டுவரவேண்டும்

## வலியுறுத்துகின்றது சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஜூலை 14
காணாமற்போனோர் தொடர்பான சட்டவரைவு அவசியம் கொண்டுவரப்படவேண்டும் எனச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் நாட்டில் நடைபெற்ற காணாமற்போதல்கள் போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்காலத்தில் இந்த நாட்டில் நபர்கள் காணாமற்போவதைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் அவசியம். 89ஆம் ஆண்டுகளில் அரசியலுக்கு வந்தவன் நான். எனது மாவட்டத்தில் 6000 பேர் வரை படுகொலை செய்யப்பட்டனர். அதேபோல் முகாம்களில், சிறைகளில் சித்திரவதைக்குஉள்ளானவர்கள் பலர் இருந்தனர்.

அவ்வாறானதொரு யுகம் மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதற்கு இந்தச் சட்டம் அவசியம். இந்த நாட்டு மக்களின் சுதந்திரம், சனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் குறிப்பாக குடிமக்கள் இனிக்காணாமற்போகமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதும் அவசியம். ஆழிப்பேரலை மற்றும்



வெள்ளப்பெருக்கில் காணாமற்போனவர்ளுக்கும் இதனூடாகச் சலுகைகள் கிடைக்கலாம்.

தொடர்ச்சியாக இந்த அரசு அதிகாரத்தில் இருக்கப்போவதில்லை. எனவே, எங்களையும் காணாமற்போகச் செய்யலாம். எமது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேணும் அந்தச் சட்டம் அவசியம். பல ஊடகவியலளார்கள் காணாமற்போயுள்ளார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் - என்றார். (த-ய)


## மரண அறிவித்தல்

### செல்வி நீலாம்பிகை செல்லப்பா

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வி நீலாம்பிகை செல்லப்பா 10.07.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், சண்முகலிங்கம், சண்முகநாதன், சண்முகரெத்தினம், சண்முகபவானந்தன், தேவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வநாயகி, யோகராணி, இரத்தினேஸ்வரி, ரட்ணஜோதி, சஞ்சிவிலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், ரேணுகா, சித்திரா, மயூரன், ஜெயபாலன், இராகவன், கௌசல்யா, இளங்குமரன், சண்முகதாசன், சண்முகநேசன், இரஜனி, சண்முக ஈசன், இராஜினி, சபேசன், சஞ்ஜீவன், சரவணன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற துர்க்கா மற்றும் ஜெனார்த்தன், துவாரகா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.07.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சனாலங்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

103/1, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

தகவல் :
குடும்பத்தினர்.

024 205 3511, 077 758 9702



## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரிக்கிறேஸ் சிங்காரம்





பிறப்பு 12.05.1936
இறப்பு 11.07.2017

அன்னசத்திரலேன், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிக்கிறேஸ் சிங்காரம் 11.07.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்காரத்தின் அன்பு மனைவியும், விஜயகுமார் (ஜேர்மனி), ஜெயசீலி (பிரான்ஸ்), ரூபி (இலண்டன்), ஜெயராணி (ஜேர்மனி) ஜெயக்குமாரி, காலஞ்சென்ற சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7/1, அன்னசத்திரலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல் -
குடும்பத்தினர்.

076 347 6629

தோற்றம் 15 . 06 . 1951


மறைவு 12 . 07 . 2017

### பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள்

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான பிரதான குருவான வைத்தீஸ்வரர் குருக்கள் அவர்களின் மகனாகிய சுப்பிரமணிய குருக்கள் அவர்கள் 12.07.2017 புதன்கிழமை பிற்பகல் 8.45 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ராஜிவியின் அன்புக் கணவரும் மணிராச்சின் அன்புத் தந்தையும், சாம்பவியின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று முன்னேஸ்வர மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முன்னேஸ்வரம்.

தகவல் -
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலீட்டுச் சபையின் தலைவர் பதவி விலகல்

கொழும்பு, ஜூலை 14
இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவராகச் செயற்பட்ட சட்டத்தரணி உபுல் ஜெயசூரிய பதவி விலகியுள்ளார்.
தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவித்து தனது பதவி விலகல் கடிதத்தை அரச தலைவரின் செயலாளரிடம் அவர் ஒப்படைத்துள்ளார்.
தனது கடமைக் காலத்தில் பல்வேறு அழுத்தங்கள் காணப்பட்டதாகவும், கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்
உபுல்ஜெயசூரிய இலங்கைச்சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

**பெயர் மாற்றம்**

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையைச் சேர்ந்த **பாலகிருஸ்ணன் இராசகணடம்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **பாலகிருஸ்ணன் இராசகாந்தம்** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்

**பா. இராசகாந்தம்**

# ஊழல் பேர்வழிகளைப் பிடிக்க ரணிலும், மைத்திரியுமே தடை

## ஊழலுக்கு எதிரான அமைப்பின் ஏற்பாட்டாளர் சமரசிங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 14
ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கைது செய்யப்படுவதை அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் தலையிட்டுத் தடுக்கின்றனர். முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுக்கமகே கைதுசெய்யப்படுவதை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தடுத்து நிறுத்தினார் என ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொலிஸ் திணைக்களம், சட்ட ஒழுங்கு அமைச்சு ஆகியவை தன்னிடமிருந்தால் திருடர்களைக் கைது செய்வார் என அரச தலைவர் குறிப்பிடுகின்றார். அவர் ஒரு சாதாரண ஊழியரைப்போல்பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் அதிகாரத்தைப் பயன்படுத்தித் திருடர்களைக் கைது செய்ய வேண்டும்.
இந்த அரசின் பல அமைச்சர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளோம். எனினும், எவ்வித விசாரணை களும் மேற்கொள்ளப்படவில்லை. விசாரணைகள் நிறைவு செய்யப்பட்ட 111 முறைப்பாடுகள் கிடப்பில் உள்ளன.
15 விடயங்கள் தொடர்பில் மாத்திரமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகள் ஆயிரத்திற்கும் அதிகம். எனினும் சுமார் 200 மாத்திரமே பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.
சுமார் 140 முறைப்பாடுகள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு 40 முறைப்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. திருடர்கள் பிடிபடுவதை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தலையிட்டுத் தடுத்தார்கள். கைது செய்யப்படுவதை அவர்கள் தடுக்கின்றனர்.
பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் தலைவருடன் பேசி மகிந்தானந்த அளுத்கமகே கைதுசெய்யப்படுவதைத் தடுத்தது அரச தலைவரே. அரச தலைவரின் செயலாளர் ராஜகிரியவில் இரண்டு கோடியே 5 இலட்சம் ரூபா வாடகைக்குக் காரியாலயத்தைப் பெற்றுள்ளார். இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும். அரசதலைவரின் சகோதரருக்கு எதிராகவும் இன்று முறைப்பாடுகள் காணப்படுகின்றன - என்றார். (த-ய)

## மகசின் சிறை கலவரம்:

## 56 சந்தேக நபர்களுக்கு 5 வருடங்களின் பின் குற்றப் பத்திரங்கள்

கொழும்பு, ஜூலை14
கொழும்பு மகசின் சிறைச்சாலையில் கலவரம் செய்து சக கைதிகளுக்கும், சிறையதிகாரிகளுக்கும் காயங்களை விளைவித்த குற்றச்சாட்டில் வழக்கு தொடரப்பட்டிருந்த 56 சந்தேகநபர்களுக்கும் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் கடந்த திங்கள்கிழமை குற்றப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டன.
அதனைத் தொடர்ந்து சந்தேக நபர்களை தலா ஐயாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதியரசர்ஆர்.குருசிங்க உத்தரவிட்டதுடன் அடுத்த விசாரணையை செப்ரெம்பர் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த-ய)

## இனவாதத்தைத் தூண்ட சில ஊடகங்கள் முயற்சி

### மத்திய மாகாண முதலமைச்சர் விசனம்



கொழும்பு, ஜூலை13
ஊடக நிறுவனங்கள் சகவாழ்வை ஏற்படத்த முயற்சி செய்யும் போது, ஒரு சில ஊடகங்கள் இனவாதத்தைத் தூண்டுவதற்கு முயற்சிசெய்கின்றன என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.
ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட புனித கப்ரியேல் பெண்கள் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான விடயங்களை வைத்துக்கொண்டு பௌத்த மதத்திற்குள்ள இடத்தை இல்லாதொழிப்பதாகவும், நாட்டைப் பிரிப்பதாகவும் செய்திகளை பரப்பி இனவாதத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
ஆனால் பௌத்த மதத்திற்குள்ள இடம் இல்லாதொழிக்கப்படமாட்டாது என்று அரசதலைவர் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.
இந்த நாட்டில் இரண்டுமுறை அரசமைப்புச் சீர்திருத்தங்கள் நடைபெற்றன. 1972, 1978 ஆகிய சீர்திருத்தங்களின் போதும் பௌத்த மதத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.
இன்று நடைபெறும் சீர்திருத்தத்திலும் பௌத்த மதத்தில் எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை. அரச தலைவரின் ஒரே நோக்கம் ஒன்றுபட்ட நாட்டிக்குள் இருந்துகொண்டு சகவாழ்வை முன்னெடுக்க வேண்டுமென்பதே - என்றார். (த-ய)

## புனானைப் பள்ளிவாசலுக்கு கட்டுப்பாடு இடவேண்டும்

### மட்டக்களப்பு விகாராதிபதி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 14
புனானையில் நிர்மாணிக்கப்படும் ஆசியாவின் மிகப் பெரிய பள்ளிவாசலை ஒரு எல்லைக்குள் மட்டுப்படுத்தவேண்டும் என மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்னதேரர் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
400 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் ஆசியாவின்மிகப் பெரியபள்ளிவாசலை ஒருஎல்லைக்குள் மட்டுப்படுத்தவேண்டும். இல்லைஎன்றால்ஒரு இனம் இன்னொரு இனத்தோடு மோதி இரத்தம் சிந்தும் நிலை ஏற்படும். தமிழ் மக்களது காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அவர்கள் காடுகளிலும் வசதியற்ற பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். கரையோரப் பகுதியான அறுகம்பை தொடக்கம் மூதூர் வரைக்கும் ஏதாவது ஒரு தமிழ் நகரம் இருக்கின்றதா? தமிழ் மக்களின் உரிமை தொடர்பாகக் குரல் கொடுப்பதற்குச் சிங்கள மக்களுக்கு உரிமை உள்ளது - என்றார். (த-ய)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம் 30 . 11 . 1938
மறைவு 15 . 06 . 2017

சங்குவேலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி

**அமரர் தனபாக்கியம் (ராசாத்தி) பழனிவேல்**

பல வலிகளைத் தாங்கி – எம்மை
பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து
பாலூட்டி சீராட்டி வளர்த்ததுடன்!
பார்தனில் புகழோடு வாழ வேண்டி
வழிகாட்டிய எமது அம்மா!

எமக்குக் காரணம் காட்டி காலன் உங்களை
கவர்ந்து சென்றாலும், கனலாய் எம் நெஞ்சில்
உங்கள் நினைவுகள் எப்போதும் நீங்காது நிறைந்திருக்கும்.

அன்னாரின் பிரிவுத் துயரில் கலந்துகொண்டு அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இருகரம் கூப்பி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக!

15/8, மங்களகிரி,
சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**





**திருமதி ஜெயறஞ்சன் தனுஷ்கா**

மண்ணில்
04.03.1985

விண்ணில்
14.07.2016

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
ஆருயிர் மகளே கரித்துக் கொட்டும் கண்ணீர்த்துளிகள்
இருபுறமும் கரை தேடி அலைய
உங்கள் முகம் தேடி அலைகின்றோம்
எம் பாசவிளக்கு பறிபோனது
என்று பாரெல்லாம் சொல்லி அழுகின்றோம்
ஆண்டு ஒன்று ஆகியும் ஆறவில்லை எம் மனம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3/8, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா,
சகோதரி.

**ஆறாம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



அமரர் **சிவகுமார் சுவர்ணன்**

தோற்றம் 11.11.1997
மறைவு 19.12.2016

நற்றவத்தால் நாம்பெற்ற
புத்திரனே
கற்றவற்றை கசடறவே
கற்றவனே
உற்றவருக்கு உதவுகின்ற
உத்தமனே
பற்றினையோ பற்றற்றான்
பாத மலர்

கடந்த 19.12.2016 அன்று சிவபதமடைந்த சிவகுமார் சுவர்ணன் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை காலை 4.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் நாளை (15.07.2017) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலாநிதி அச்சகம்,
பிராமண வீதி, தும்பளை, பருத்தித்துறை.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை பொருள் ஒழிப்புக்கு தெற்காசியத் தலைவர்களின் ஒத்துழைப்பைக் கோரும் மைத்திரி

## சார்க் நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு



கொழும்பு, ஜூலை 14
போதைப்பொருளை ஒழித்துக் கட்டுவதற்கான கூட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் தெற்காசியத் தலைவர்கள் ஒத்துழைக்கவேண்டும் என அரச தலைவர் மைத்ரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

போதைப்பொருள்பாவனை அதிகரித்து வருவது பிராந்தியத்தில் இளைஞர்கள் மத்தியில் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றும்,போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தவிர்ப்பது தொடர்பில் தொடர்ச்சியான கவனமும் விழிப்புணர்வும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சார்க் நாடுகளின் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர்களின் எட்டாவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ள பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் அரச தலைவரைச் சந்தித்த போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் பிரச்சினை சமூகத்தில் ஈடுசெய்ய முடியாத தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் அதிகாரிகள் மீது போதைப்பொருள் கடத்தல் குழுவொன்று மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரு அதிகாரியும், 12 வயதுப் பிள்ளையும் கொல்லப்பட்டனர். மற்றுமொரு பிள்ளை காயமடைந்தது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த அந்தப் பிள்ளையின் குடும்பத்தை நான் சந்தித்தேன். காயமடைந்த பிள்ளை அதன் துப்பாக்கிச் சூட்டுக் காயத்தை என்னிடம் காட்டியது. உண்மையில் அது எனக்கு மிகவும் உணர்வுபூர்வமான ஒரு தருணமாக இருந்தது.

அந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பிள்ளையின் பெற்றோருக்குச் சொந்தமான கடைக்கு ஏற்பட்ட சேதம் குறித்து வினவியபோது, சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா என அந்தப் பிள்ளையின் தந்தை தெரிவித்தார். அவர்களுக்கு நான் உடனடியாக 1.5 மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்கினேன். பணம் ஒருபோதும் உயிரைக்கொண்டு வந்துவிடாது.

எனவே, போதைப்பொருளை ஒழித்துக்கட்டுவதற்கு வினைத்திறனான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்றார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வக் கூட்டத்தின் முன்னேற்ற நிலைமைகள் குறித்து சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் அம்ஜாத் ஹூசைன் பி சியால் அரச தலைவருக்கு விளக்கினார். (த-ய)

# கல் சரிந்து விழுந்ததில் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 14
கல் குவாரியொன்றில் கருங்கல் ஏற்ற வந்த டிப்பர் வாகனத்தின் மீது பெரிய கல்லொன்று சரிந்து வீழ்ந்து ஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கம்பஹா மாவட்டம், மீரிகம, தம்பகொல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த டிப்பர் வாகனத்தின் மீது கல்லுடன் கூடிய மண்மேடு சரிந்துள்ள போது, டிப்பர் வாகனத்தில் மூவர் இருந்துள்ளனர். இதன்போது, படுகாயமடைந்த மூவரும், மீரிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வரக்காபொல, மாஹேன பிரதேசத்தைச்சேர்ந்த டிப்பர் வாகனத்தின் சாரதியே இதன்போது உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றைய இருவரும், மேலதிக சிகிச்சைக்காக வத்துபிடிவல வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் மீரிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# கனடா ஆற்றில் விழுந்த தமிழ் இளைஞர் இறப்பு

கொழும்பு, ஜூலை 14
கனடாவில் உள்ள பெராய்ரிஸ் ஆற்றில் விழுந்து காணாமற்போன தமிழ் இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த ஆற்றில் இருந்து மீட்கப்பட்ட சடலம் ஞாயிற்றுக்கிழமை காணாமற்போன அனோஷன் நாகேஸ்வரா என்ற இளைஞனுடையது என மொன்றியல் பொலிஸார் உறுதி செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அன்ட்ரே ஆன் பிக்கார்ட் தெரிவித்துள்ளார். 20 வயதுடைய அனோஷன் நாகேஸ்வரா என்ற இளைஞர் வேகமான நீரோட்டத்தைக் கொண்ட ஆற்றில் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புகைப்படம் எடுக்கும்போதே அவர் ஆற்றில் தவறி விழுந்துள்ளார். அவருக்கு நீச்சல் தெரியாததால் ஆற்றில் அடித்துச் செல்லப் பட்டார் எனக் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (த)


**vacancy**

**ICT Instructor (NVQ 5)**
யாழில் தொழில்க்கல்வி நிலையத்திற்கு
ICT துறையில் NVQ 5 இனை
பூரணப்படுத்தியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(முழு நேரம்/பகுதி நேரம்)
தொடர்புகளுக்கு - 0777 17 35 17

**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் பிளாட்டினம
10.30 / 1.30 / 4.30 / 7.30 / 9.30




சில்வர்
10.30 / 1.30 / 4.30 / 7.30




ப்ரொன்ஸ்
10.30 / 1.30 / 4.30 / 7.30

விசாரணை ☏ 021- 2227712
facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**
திரு திருமதி செல்வதாஸ் மயூரி தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**தன்விகா** 14.07.2017



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாட இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்த்துவோர்கள்:-
கனகரத்தினம் [அம்மப்பா],
மல்லிகாதேவி [ அம்மம்மா],
மாமன்மார்கள் :-
மதன் (கனடா),
மயூரன் (லண்டன்),
மதீப், மதிவதன்
கைதடிச்சந்தி,கைதடி.

**SUSTAINABLE GREEN ENERGY (PVT) LTD**
**வேலைவாய்ப்பு**

**01. வரவேற்பாளர் - பெண் (01)**
அ. மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள்
ஆ. அடிப்படைக் கணினி அறிவு

**02. கணக்கு லிகிதர் - பெண் (01)**
அ. கணக்கு வேலையில் தகுதி பெற்றிருத்தல்
ஆ. வேலையில் அனுபவம் பெற்றிருத்தல்
இ. ஆங்கில அறிவு.

**03. சாரதிகள் - ஆண் (02)**
அ.இரு மொழிகளிலும் சரளமாகப் பேசக் கூடியதாக இருத்தல் (தமிழ் & ஆங்கிலம்)
ஆ. சிங்களம் விரும்பத்தக்கது.
இ. குறைந்தது ஐந்து வருட அனுபவமும் கனரகசாரதி அனுமதிப் பத்திரமும் கொண்டிருத்தல்.

**ஆகாஷ் பெருந்தோட்டம் வேலைவாய்ப்புக்கள்**

**01. தோட்ட முகாமையாளர் (01) ஆண் / பெண்**
அ. விவசாயத்துறையில் பட்டம் பெற்றிருத்தல்.
ஆ. வேலை அனுபவம் கொண்டிருத்தல்.
இ. சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல்.

**02) தோட்ட உதவியாளர்கள் (06) ஆண்/ பெண்**
அ. விவசாய விஞ்ஞான துறையில் டிப்ளோமாவினைக் கொண்டிருத்தல்.
ஆ. வேலை அனுபவம் கொண்டிருத்தல்.
இ. மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான உரிமத்தைக் கொண்டிருத்தல். (சாரதி அனுமதிப்பத்திரம்)

**03) இயந்திரவியல் பொறியியலாளர் (01) ஆண் / பெண்**
அ. குறித்த துறையில் பட்டம் ஒன்றினைக் கொண்டிருத்தல்.
ஆ. வேலை அனுபவம் கொண்டிருத்தல்.

**04) கட்டடப் பொறியியலாளர் (01) ஆண் / பெண்**
அ. குறித்த துறையில் பட்டம் ஒன்றினைக் கொண்டிருத்தல்.
ஆ. வேலை அனுபவம் கொண்டிருத்தல்.

**05) செயலாளர் (01) பெண்**
அ. மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல்.
ஆ. சிறந்த கணினி அறிவினைக் கொண்டிருத்தல்.
இ. ஆளுமையான தோற்றமுடையவராக இருத்தல்.

**நிபந்தனைகள்**

01. நேர்முகத் தேர்வு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதியிலிருந்து 4ஆம் திகதிவரை இலக்கம் 53, நாவலர் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா என்னும் முகவரியில் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை நடைபெறும்.(அலுவலகம் மாடசாமிக் கோயிலுக்கு அருகில் உண்டு.)

02) நியமனம் தொடர்பாக தொலைபேசி தெளிவுபடுத்தல் இருக்க மாட்டாது.

03. உங்களது வாய்மூலமான கருத்துக்களை ஆதரிக்கும் வகையில் அனைத்து மூலப்பிரதிகளும் நேர்முகத் தேர்வுக் குழுவினரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04) நேர்முகத் தேர்வில் கலந்துகொள்வதற்கான போக்குவரத்துச் செலவுகள் நிறுவனத்தினால் செலுத்த முடியாது.

05. வேறு எந்தத் திகதிகளும் நேர்முகத் தேர்வுக்காக வழங்கப் பட மாட்டாது.

**சிறி குமரன் ரெக்ஸ்**



அசத்தலான ஆடித்தள்ளுபடி
சிறிகுமரன் ரெக்ஸ்சின் மாபெரும் ஆடித்தள்ளுபடி தட்டாதெருச் சந்தியில்...
இந்தியாவிலிருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துரக ஆடைகளும்
விசேட தள்ளுபடி விலையில்...
விசேடமாக Office ware சாறிகள்
மிககுறைந்த விலைகளில்
ஆடித்தள்ளுபடியில்
ஓர் ஜாலியான ஷொப்பிங்



சிறி குமரன் ரெக்ஸ்
770.K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். Tel: 021 221 6845


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிலிருந்து வெளியேற யாருக்கும் தடையில்லை

## மைத்திரி ஆட்சியே தொடரும் என்கிறார் அமைச்சர் விஜயதாச

கொழும்பு, ஜூலை 14



அரசை விட்டு யாரும் வெளியேறலாம். அதற்குத் தடைகள் எதுவும் கிடையாது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நல்லாட்சி அரசிலிருந்து யார் விலகினாலும் அரசைக் கவிழ்க்க முடியாது.

2020ஆம் ஆண்டு வரையில் இந்த நாட்டை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுமே ஆட்சி செய்வார்கள்.

பெரும்பான்மைப் பலமின்றி அரசை முன்னெடுக்க முடியாது எனச் சிலர் நினைக்கின்றார்கள். எனினும் நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலமின்றி ஆட்சி செய்த அனுபவங்கள் எமக்கு உண்டு.

எனக்குத் தெரிந்த வகையில் ஆளும் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அல்லது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவரும் விலகுவதாகக் கூறவில்லை.

அரசை விட்டு விலகவேண்டுமாயின் எந்தவொரு நபருக்கும் அதற்கான சுதந்திரம் உண்டு - என்றார். (த)

# இலங்கை நீதித்துறைக்கு சார்க் அமைப்பு பாராட்டு

கொழும்பு, ஜூலை 14

சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித் துறை சுயாதீனத்தை நிலைநாட்டுவது தொடர்பாக இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளுக்குச் சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் அம்ஜாட் ஹூஸைன் பீ.சியல் மகிழ்ச்சி வெளியிட்டதாக நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நீதித்துறைக் கட்டமைப்பைப் பலப் படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளதாக நீதி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வலய ரீதியாக இலங்கையின் நீதித்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இதன்போது கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப் பட்டது. (த)

# அயலுறவு அமைச்சில் பெண் பணியாளருக்கு பாலியல் தொந்தரவு

## அதனை முறையிட்டதால் அவருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூலை

அயலுறவு அமைச்சில் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளான பெண் ஊழியருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரினால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான பெண் ஊழியருக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

குறித்த அதிகாரியினால் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்ட அவர், அதிலிருந்து தப்பிச் சென்று மற்றுமொரு மூத்த அதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும் குறித்த உயர் அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள முடியாதெனக் கூறிய மூத்த அதிகாரி, பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தண்டனையாக இடமாற்றம் வழங்கப் பரிந்துரை செய்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த)

# பாய்களுக்குப் பதிலாக கைதிகளுக்கு மெத்தை

கொழும்பு, ஜூலை 14

சிறைக் கைதிகள் உறங்குவதற்குப் பாய்களுக்குப் பதிலாக மெத்தை வழங்கப்படவுள்ளதாகச் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நிசான் தனசிங்க தெரிவித்தார்.

கைதிகள் உறங்குவதற்குத் தேவையான மெத்தைகள் கைதிகளாலேயே உற்பத்தி செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மெத்தைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருள்களைக் கொள்வனவு செய்ய நிதி வழங்கப்படும் எனவும், சுமார் 7000 மெத்தைகள் முதலில் உருவாக்கப் படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சாவுத் தண்டனைக் கைதிகளுக்கும் இவ்வாறு தயாரிக்கும் மெத்தைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (த)

# அரசமைப்பைவிட டெங்குக்குத் தீர்வு காண்பதே முக்கியம்

## வலியுறுத்துகிறார் ராகுல தேரர்

கொழும்பு, ஜூலை 14



புதிய அரசமைப்பை விட டெங்குக்குத் தீர்வு காண்பதே மிக அவசியம் என வனவாசி ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்குத் தற்போது தேவை அரசமைப்பு மாற்றம் அன்றி டெங்கு ஒழிப்புக்கான முனைப்புக்களாகும்.

சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவ மாணவியர் மட்டுமன்றிப் பெரியவர்களும் டெங்கினால் அதிகம் பாதிக்கப்படுவதுடன், நோயினால் உயிரிழப்போர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

நாட்டின் அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி வருகின்றனர். பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவில்லை.

டெங்கு ஒழிப்பு தொடர்பில் ஆணைக்குழுக்களை அமைத்தல், அறிக்கை கோருதல் போன்ற வேலைகளை நிறுத்திவிட்டுக் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்றார். (த)

# சவூதியில் பணியாற்றிய கிழக்கு வாசி உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 14

தொழில் நிமித்தம் சவூதி அரேபியா சென்ற இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு, துறைநீலாவணை கிராமத்தைச் சேர்ந்த அழகையா அருணகிரி(வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சவூதியில் பணியாற்றி வந்த இவர் திடீர்ச் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் கடந்த ஒரு வார காலமாகச் சிகிச்சை பெற்று வந்துள்ளார். ஆயினும் சிகிச்சை பலனின்றி இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். விரைவில் நாடு திரும்பவுள்ளதாக இரு வாரங்களுக்கு முன்னர் அவர் தனது உறவினர்களுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் எனக் கூறப்பட்டது. சடலத்தை இலங்கைக்குக் கொண்டு வருவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர். (த)

# பெருந்தோட்ட மக்களுக்கு வீட்டு உறுதிப் பத்திரங்கள்

கொழும்பு, ஜூலை14

பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கு உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

பெருந்தோட்ட மக்களின் நலன் கருதி வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காக 2010ஆம் ஆண்டிலிருந்து நவஜீவன என்ற வேலைத் திட்டமும் ஹரித்தரன என்ற வீடமைப்புத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் முறையே ஆயிரத்து 122 வீடுகளும், ஆயிரத்து 742 வீடுகளும் நிர்மாணிக்கப் பட்டுப் பெருந்தோட்ட மக்களிடம் பாவனைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளன.


ஹரித்தரன என்ற வீடமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் மேலும் இரண்டாயிரம் வீடுகளும், இந்திய நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்தின் மூலம் ஆயிரத்து 134 வீடுகளும் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தோட்ட மக்கள் உயர்வான வாழ்க்கை நிலையுடன் வசதிகள் கூடிய வாழ்க்கையை முன்னெடுப்பதற்காக வீடுகளை நிர்மாணிப்ப தற்கும், அவற்றுக்கான முறையான உரிமையை உறுதி செய்வதற்குமாகத் தலா 7 பேர்ச் காணியைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (த-ய)

> 2016 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் முறையே ஆயிரத்து 122 வீடுகளும், ஆயிரத்து 742 வீடுகளும் நிர்மாணிக்கப் பட்டுப் பெருந் தோட்ட மக்களிடம் பாவனைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளன.

# மருத்துவர்கள் போராட்டம் பயங்கரவாதத்தைவிட மோசமானது

## விக்ரமபாகு கடும் கண்டனம்



கொழும்பு, ஜூலை 14

நாட்டில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வரும் நேரத்தில் போராட்டம் நடத்தி மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற அரச மருத்துவர்களின் செயற்பாடு பயங்கரவாதத்தை விட மோசமானது எனத் தெரிவித்த நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன, புண்ணியம் செய்தும் நன்மை செய்தும் நியாயத்தைப் பெற முடியாதென்றும் பாவம் செய்தாவது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பயங்கரவாதி என்று கூறினாலும், அவர் பயங்கரவாதி அல்லர்.

மருத்துவ அதிகாரிகளே கொடூரமான பயங்கரவாதிகள். அரசியலுடன் எவ்வகையிலும் சம்பந்தப்படாத அப்பாவி மக்களை, சைட்டம் பிரச்சினைக்காகப் பலியெடுக்கும் அரசமருத்துவ அதிகாரிகளின் செயற்பாட்டுக்கு அரசு அடிபணியாமல் அவர்களை அடக்க வேண்டும் - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்கள் மீது அரச தலைவர் இனி சிறப்புக் கவனிப்பு

## மீளாய்வுக் கூட்டங்களில் அடுத்த மாதம் முதல் பங்கேற்பார்

கொழும்பு, ஜூலை 14

அனைத்து அமைச்சுக்களினதும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் அடுத்த மாதம் முதல் பங்குபற்றவுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற அரச தலைவர் செயலகப் பணிக்குழுவின் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பதின்நான்கு இலட்சம் அரச ஊழியர்களுக்கு முன்மாதிரியாக - வினைத்திறனாகத் திட்டமிடப்பட்டவாறு அரச தலைவர் செயலகத்தின் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். ஆட்சிபுரியும் அரசியல் தலைமையின் நெறிப்படுத்தல், முகாமைத்துவ மற்றும் நிர்வாகத் திறனிலேயே அரச அலுவல்களுக்கான வழிகாட்டல்கள் உள்ளன.

நான் ஒரு போதும் அரச அலுவலர்களைக் குற்றம் சாட்டுவதில்லை. ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் அரசியல் தலைமையே அதற்குச் பொறுப்பேற்க வேண்டும்.

அரச ஊழியர்கள் அனைவரும் அடுத்துவரும் ஆண்டுகளில் அபிவிருத்தியின் முன்னோடிகளாக மாறி அதனை ஒழுங்குபடுத்த வேண்டும்.



ஊழல், மோசடி, முறைகேடுகள் எங்கும் இடம்பெறக் கூடாது. வெளிப்படைத் தன்மையுடனும், தூய்மையுடனும் தமது கடமைகளை மேற்கொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் - என்றார். (த)

---

# அமைச்சர்களின் தீர்மானங்களால் பின்வரிசை எம்.பிக்கள் விசனம்

கொழும்பு, ஜூலை 14

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களினால் எடுக்கப்படும் தீர்மானங்களினால் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இதனால் எதிர்வரும் நாள்களில் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமர்வுகளைப் புறக்கணிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர் எனக் கட்சியின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த வாரத்தில் குறித்த பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி இது தொடர்பாகத் தீர்மானிக்க உள்ளனர்.

அமைச்சரவை அமைச்சர்களின் விவாதங்களில் பங்கேற்று மாலைவரை காத்திருந்து வாக்கெடுப்புக்களில் வாக்களித்துவிட்டு வரும் பின்வரிசை உறுப்பினர்களுக்கு அமைச்சுகளால் எவ்வித உதவியும் வழங்கப்படுவதில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் தலைமை அமைச்சரிடமும், கட்சியின் செயற்குழுவினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலைமை நீடித்தால் கட்சி, ஆதரவாளர்களின் அதிருப்திக்கு உள்ளாக நேரிடும் எனப் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர். (த-ய)

---

# அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் அரசு

கொழும்பு, ஜூலை 14

அமெரிக்காவுடன் 2007ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட, பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன் தினம் முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அமெரிக்கா பாதுகாப்புத் திணைக்களம், இலங்கைப் பாதுகாப்பு பணியகத்திடையே 2007ஆம் ஆண்டு மார்ச் 05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தமானது கடந்த மார்ச் மாதத்துடன் காலாவதியானது. இதன் ஆயுட்காலம் 10 வருடங்களாக இருந்தது.

இந்நிலையிலேயே உலகப் பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற் கொண்டும், பன்னாட்டு உறவுகளைப் பலப்படுத்தும் நோக்கிலும் இந்த ஒப்பந்தத்தை மேலும் சில வருடங்களுக்கு நீடித்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இது பற்றி அமைச்சரவைக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். (த)

---

# தபால் பிரச்சினைக்கு உடன் தீர்வு வேண்டும்

## இல்லையேல் மீண்டும் போராட்டம் என அரசுக்கு தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 14

புராதன தபாலகங்களை வெளிநாட்டவர்களுக்கு வழங்கும் யோசனையைக் கைவிடல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து தபால் தொழிற்சங்கங்கள் ஆரம்பித்திருந்த வேலைநிறுத்தம் அந்தப் பிரச்சினைகளுக்கு இரு வாரங்களில் தீர்வு வழங்கப்படுமென அரசு அளித்த எழுத்துமூல உறுதிமொழியின் அடிப்படையில் கைவிடப்பட்டது. எனினும், இருவார காலக்கெடு முடிவடையவுள்ள போதிலும் இதுவரை அரச தரப்பிலிருந்து எவ்வித பதிலும் வராததால் தாங்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் இறங்கவுள்ளதாகத் தபால் ஊழியர்கள் தொழிற்சங்கச் சம்மேளனம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கனவே நாங்கள் இருநாள் அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டபோது தங்களது பிரச்சினைகளுக்கு இரண்டு வாரங்களில் தீர்வு வழங்கப்படுமென அரசு உறுதிமொழி வழங்கியதையடுத்து வேலைநிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. எனினும், அரசு வழக்கம்போல தனது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளதால் மீண்டும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது என்று தபால் ஊழியர்கள் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (த)

---

# தேரர்களின் கருத்தை ஏற்கவேண்டும் அரசு

## எச்சரிக்கை விடுக்கின்றார் மெகொட அபேதிஸ்ஸ தேரர்

கொழும்பு, ஜூலை 14

நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் வகையில் அரசமைப்பை உருவாக்கும் பாதையில் சென்றுகொண்டிருக்கும் அரசு, மகாநாயக்க தேரர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் எந்தவொரு அரசியல்வாதிக்கும் அரசமைப்பை மாற்றியமைக்கச் சந்தர்ப்பமளிக்கமாட்டோம்.

இவ்வாறு மெகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவரும் செயற்பாட்டை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று மகாநாயக்க தேரர்கள் கடந்த வாரம் அறிவித்திருந்தனர். அவர்களின் கருத்து அரச தரப்பால் நிராகரிக்கப்பட்டமையானது அவர்களுக்கான அகௌரவம் அல்ல இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த பௌத்தர்களுக்கும் இழைக்கப்பட்ட சவாலாகும்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டு நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கில் செயற்படும் எந்தவொரு அரசுக்கும் அதிகாரம் இல்லை. அவ்வாறு செய்ய முற்படுபவர்கள் தேசத் துரோகிகளே. எனவே, மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று அரசு செயற்பட வேண்டும். மாறாக அவர்கள் மீது கைவைக்க எத்தனிக்கக் கூடாது - என்றார். (த)

---

# கைகளில் தாமே காயத்தை ஏற்படுத்திய மாணவர்கள்

## போதைப் பாவனை காரணமா எனப் பொலிஸார் விசாரணை

கொழும்பு, ஜூலை 14

பொலனறுவை மெதிரிகிரிய கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் 41 மாணவ, மாணவிகள் தமது கைகளை அறுத்துக் காயமேற்படுத்தியுள்ளனர்.

இது குறித்துப் பொலிஸாருக்குத் தெரியவந்ததை அடுத்து அவர்கள் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். போதைப்பொருளைப் பயன்படுத்திய 10ஆம், 11ஆம் ஆண்டு மாணவர்களே அதன் உச்சத்தால் இவ்வாறு நடந்துகொண்டனர் என்று கூறப்படுகின்றது.

இவர்களில் 7 பேர் மாணவிகள். பாடசாலையின் உப அதிபர் மாணவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்டு அவர்களைப் பரிசோதித்தபோது கைகளில் வெட்டுக்காயம் காணப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து இந்த விடயம் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்ட மாணவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்துடன் மாணவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் போதைப் பொருளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் எப்படிப் பாடசாலைக்குக் கொண்டு வரப்பட்டது என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

---

# மோசடிக்காக இராணுவத்தை விசாரிப்பது பழிவாங்கலா?

## கோத்தாவிடம் கேட்கிறார் சந்திம வீரக்கொடி



கொழும்பு, ஜூலை 14

தற்போதைய அரசு அரசியல் பழிவாங்கலில் ஈடுபடவில்லை. புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் படையினரைத் தண்டிக்கவில்லை. ஊழல் மோசடிக் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இப்போது படையினர் விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

போரில் ஈடுபட்ட படையினர் மாத்திரம் திட்டமிட்ட அடிப்படையில் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்ற கோத்தபாய ராஜபக்சவின் குற்றச்சாட்டுக்குத் தொடர்பில் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1994 இல் நாம் ஆட்சியைப் பிடித்ததும் ரணில் விக்ரமசிங்கவைக் கூண்டில் ஏற்றி தேவையில்லாது விசாரித்தோம். 2010 இல் சரத் பொன்சேகாவைச் சிறையில் அடைத்தோம்.

இவையெல்லாம் நடந்திருக்கக்கூடாது. இது தொடர்பில் அரசு கொண்டிருந்த நிலைப்பாட்டைவிட மாறுபட்ட நிலைப்பாட்டையே மக்கள் கொண்டிருந்தனர்.

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டின் அடிப்படையில் இப்போது படையினர் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் உண்மையில் குற்றம் செய்திருந்தால் விசாரிப்பதில் தப்பில்லை.

ஆனால் அவர்களைத் தொல்லைப்படுத்துவதற்காக விசாரித்தால் அதை ஏற்கமுடியாது. அதற்கு மக்கள் பதிலளித்து விடுவார்கள்.

படையினர் செய்த தியாகத்தால் தான் நாம் இப்போது நிம்மதியாக இருக்கின்றோம். நாட்டை முன்னோக்கி நகர்த்த முடிகின்றது. அவர்களின் தியாகம் அர்ப்பணிப்பு மதிக்கப்படவேண்டும்.


அவர்கள் கவனமாக விசாரிக்கப்பட வேண்டும். புலனாய்வு அதிகாரிகள் விசாரிக்கப்படும்போது கவனம் தேவை. அவர்களின் விவரங்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தக் கூடாது. தப்புச் செய்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அரசியல் பழிவாங்கலாக எதுவும் நடக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் அரசு உள்ளது. இதை ராஜபக்ச அணியினர் கவனத்தில் கொள்ளவேண்டும். நாட்டு மக்களைக் குழப்பும் வகையில் கருத்துக்களை வெளியிடக்கூடாது - என்றார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் தோன்றினார் ரி சோல் ஜு

பியாங்யாங், ஜூலை 14
ஒன்பது மாதங்களாக வெளியில் தலைகாட்டாமல் இருந்த வடகொரிய அதிபர் கிம் ஜோன் உன்னின் மனைவி ரி சோல் பொது நிகழ்ச்சியில் பங்கேற்று பல சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.
வடகொரிய அதிபராக உள்ள கிம் ஜோங் உன்னின் மனைவியான ரி சோல் ஜு கடந்த ஒன்பது மாதங்களாக வெளியே தலைகாட்டாமல் இருந்து வந்தார். இதனால், கிம் அவரை ஒதுக்கியிருக்கலாம் என்றும், கொலை செய்திருக்கலாம் எனவும் செய்திகள் வெளியாகின. இந்தநிலையில், வடகொரியா கடந்த வாரம் மேற்கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனை வெற்றி அடைந்ததன் கொண்டாட்ட நிகழ்ச்சியில் கிம்மின் மனைவி கலந்துகொண்டார். இதன்மூலம் பல சர்ச்சைகள் முடிவுக்கு வந்துள்ளன. (ம)




# பப்புவாவில் நிலநடுக்கம்

போர்ட், ஜூலை 14
தென் பசுபிக் நாடுகளில் ஒன்றான பப்புவா நியூ கினியாவின் ரபாயுல் நகரத்தில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.
ரிச்டர் அளவுகோலில் 6.7 அலகுகளாகப் பதிவான இந்த நடுக்கத்தால் உயிர்ச்சேதமோ, பெரிய அளவில் பொருட்சேதமோ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை. 6.7 அலகுகள் என்பது சற்று அபாயமான அளவை என்பதால் பப்புவாவில் நேற்றுப் பதற்றநிலை இருந்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# பறந்து வந்தன பசுக்கள்; அதிரடி காட்டியது கட்டார்

சவூதி விதித்துள்ள பொருளாதாரத் தடையைச் சமாளிக்கும் விதத்தில் பல்வேறுபட்ட அதிரடி நடவடிக்கைகளைக் கட்டார் கையாண்டு வருகிறது. இதன்படி பால் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்கு சுமார் 4ஆயிரம் பசுக்களை ஜேர்மனியில் இருந்து இறக்குமதி செய்துள்ளது. வானூர்தி வழியாக இந்த இறக்குமதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கட்டார் அறிவித்தது.
ஈரானில் செயற்படும் ஆயுதக் குழுக்களுக்கு உதவி செய்கிறது என்று தெரிவித்து கட்டார் மீது பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது வளைகுடா நாடான சவூதி அரேபியா. பக்ரைன், ஏமன், மாலைதீவு உள்ளிட்ட நாடுகளும் கட்டாருக்கு எதிராகவும் சவூதிக்கு ஆதரவாகவும் உள்ளன. இவை கட்டாருடன் தமது தூதரக உறவுகளை முறித்துக் கொண்டதுடன் அந்த நாட்டுக்கு எதிராக தமது ஆகாயப் பரப்பையும் மூடியுள்ளன. வளைகுடா நாடுகளின் இந்தத் திடீர் நடவடிக்கையால் கட்டார் சில தளம்பல்களை எதிர்கொண்டது. குறிப்பாக கட்டாருக்கு செல்கின்ற காய்கறிகள், பழங்கள் மற்றும் பால் என்பன சவூதி வழியாகவே வருகிறது. எனவே இந்தத் திடீர்த் தடையால் கட்டார் திண்டாடியது. துருக்கி மற்றும் ரஷ்யா என்பன கட்டாருக்கு உதவிக்கரம் நீட்டின. பால் உற்பத்தியில் வேறு எந்தவொரு நாட்டையும் தங்கியிராது தன்னிறைவு நிலையை அடைய பல்வேறு வழிவகைகளை மேற்கொண்டது. இதன் முக்கிய கட்டமாக சுமார் 4ஆயிரம் உயர்தரப சுமாடுகளை ஜேர்மனியிடம் இருந்து கட்டார் இறக்குமதி செய்துள்ளது. கப்பல் மூலமாக அல்லாமல் வானூர்தி மூலமாக இந்த இறக்குமதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ம)




# 13 லட்சம் சிப்பா
# விடுவிக்கச் சீன



பீஜிங், ஜூலை 14
சீனாதனது இராணுவத்தில் இருந்து சுமார் 13 லட்சம் சிப்பாய்களை விடுவிக்க உள்ளது. தென்சீனக் கடல்பரப்பு, கொரியத் தீபகற்ப மோதல்கள், அமெரிக்காவுடனான பலப்பரீட்சை, இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினை உள்ளிட்ட பதற்றமான சூழ்நிலையில் சீனாவின் இந்த முடிவு ஆச்சரியத்தைத் தரும் ஒன்றாக அமைந்தது. உலகிலேயே மிகப் பெரிய எண்ணிக்கையில் சிப்பாய்களைக் கொண்ட இராணுவமாக சீன இராணுவம் விளங்கி வருகிறது. சீனாவில், தற்போதைய நிலவரப்படி 23 லட்சம் சிப்பாய்கள் உள்ளனர். இந்த நிலையில், சீன அரசு தனது இராணுவச் சிப்பாய்களின் எண்ணிக்கையை 10 லட்சமாகக் குறைப்பதற்கு முடிவு செய்துள்ளது.
இதன்படி 13 லட்சம் சிப்பாய்கள் விடுவிக்கப்படவுள்ளனர். இந்த விடுவிப்பைத் தொடர்ந்து கப்பற்படை மற்றும் ஏவுகணை படைப் பிரிவுகளில் அரசு அதிகம் கவனம் செலுத்த உள்ளதாக சீன இராணுவத்தின் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.
“சீன இராணுவத்தில் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் மிகப் பழைமையானவை. எனவே அவற்றை இன்றைய காலத்துக்கு ஏற்ப மாற்றி நவீன உத்திகளை நடைமுறைப் படுத்த முடிவு செ
ளது. இதற்காக
வம் புதுக் கட்டல
படவுள்ளது. இ
அதிக அளவிலான
குறைப்பது இதுவே
யாகும்.
பாதுகாப்பு ஏற்பா
டுத்தும் வகையில்
கைகள் எடுக்கப்ப
இராணுவத்தில்
மேலும் குறிப்பிடு
கொரியத் தீபகற்ப
சீனா நேரடியாக
வில்... எனினு
டின் தலையீட்ட
பலதரப்பு அழுத்
கப்படுகின்றன. இ

# ஜப்பான் வெள்ள
## அபே நேரில் ஆய்வு

ஜப்பானின் தெற்குபகுதியில் உள்ள கைசு தீவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 25 பேர் உயிரிழந்தனர் என்று நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே பாதிப்பு நடந்த இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.
ஜப்பான் நாட்டி
தில் கடந்த ஒரு
மேலாக கனம
வருகிறது. கனம
வேறு இடங்கள
பெருக்கு ஏற்படு
ழந்த 25 பே
மேலும் 20 பே
வருகின்றனர்.
பாதிக்கப்பட்ட



# அதிகம் உருகுகிறது அ

அந்தாட்டிக்காவில் அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக விஞ்ஞானிகளின் கண்காணிப்பில் இருக்கும் பெரிய பனிப்பாறைகள் உடைந்து உருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது அபாயகரமான நிலமை என்று பிரிட்டன் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.
அந்தாட்டிக்காவின் ‘லார்சன் சி’ பனிப்பாறையில் ஏற்பட்டுள்ள பிளவில் முக்கியமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதுவரை கண்டிராத மிகப்பெரும் உடைப்பு அங்கு ஏற்பட்டுள்ளதுடன் அந்தப் பிளவு மேலும் 16 கிலோமீற்றர் நீளத்திற்கு விரிவடைந்துள்ளது.
மேற்கு அந்தாட்டிக்காவில் அமைந்துள்ள ‘லார்சன் சி’ பனியடுக்கு பகுதியில் ஜூலை 10 மற்றும் 11ஆம் திகதிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஆராய்ச்சி செய்து வருகிறோம். இப்போது உருவாகியுள்ள பனிப்பாறை உலகின் மிக பெரிய அளவாக கணக்கிடப்பட்டுள்ளது.
இது சுமார் ஒ
தொன் எடை எ
கும் என மதிப்
இந்த பகுதியில்
டுள்ள பனித் தக
ஏற்பட வாய்ப்புள்
அளவிலான ப
துருவத்தை நோ
தில் கப்பல்களுக்
டும். இதே நிலை
மட்டம் மிகத்துரி
என குறித்த பகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பாய்களை ...னா திட்டம்




...முடிவு செய்யப்பட்டுள் ...தற்காக சீன இராணு ...க் கட்டமைப்புக்கு உட் ...ாது. இராணுவத்தில் ...விலான சிப்பாய்களைக் ...து இதுவே முதல் முறை

...ு ஏற்பாடுகளை பலப்ப ...கையில் உரிய நடவடிக் ...டுக்கப்படும்" என்று சீன ...வத்தின் பத்திரிகை ...றிப்பிடுகிறது.

... தீபகற்ப விவகாரத்தில் ...ரடியாகத் தொடர்புபட ... எனி... அந்த நாட் ...லயீட்டை வலியுறுத்தி ... அழுத்தங்கள் கொடுக் ...றன. அதேபோல் தென் சீனக் கடல் பரப்பில் சீனாவுக்கு எதிராக அமெரிக்கா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகள் வலிந்துகட்டிக் கொண்டு நிற்கின்றன. இந்தியாவின் சிக்கிம் பகுதி எனக்கா அல்லது உனக்கா என்ற போட்டி இந்தியாவுக்கும் சீனாவுக்கும் தற்போது ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவைப் போல் இராணுவ பலத்தை அதிகரிப்பதும் சீனாவின் முக்கிய நோக்கம். அதேபோல் அமெரிக்கா இயல்பாகவே சீன எதிர்ப்புக் கொள்கையை உடையது. இந்தப் பின்னணியில் இந்த படைக்குறைப்பு நடவடிக்கை ஆச்சரியம் தரும் ஒன்றாகவே அமைந்துள்ளது. (ம)



ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கவல்ல மற்றொரு ஏவுகணையை அமெரிக்கா நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகச் சோதித்தது. அமெரிக்காவின் நகரும் ஏவுகணை அமைப்பிலிருந்து (தாட்) இந்த ஏவுகணை ஏவப்பட்டது. அலஸ்காவில் வைத்து இந்தச் சோதனை நடத்தப்பட்டது. வடகொரியா கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை கடந்த நான்காம் திகதி வெற்றிகரமாகச் சோதித்த பின்னர் ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கும் ஏவுகணைகளை அமெரிக்கா தற்போது சோதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நைஜீரியாவில் தற்கொலைத் தாக்குதல்

நைஜீரியாவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நைஜீரியாவின் போகோ ஹறம் ஆயுதக் குழு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. மாய்துகுரி நகரில் பொலிஸாரைக் குறிவைத்து அந்த அமைப்பால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 19 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். சுமார் 50 பேர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடம் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. இதற்கு தக்க பதில் கொடுக்கப்படும் என்று இராணுவத்தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# பற்றி எரிகிறது கலிபோர்னியா

வொஷிங்டன், ஜூலை 14

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் தற்போது காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. மிகக் கடும் முயற்சிகள் எடுக்கப்பட்ட பின்னரும் தீ கட்டுக்குள் அடங்காமல் தொடர்ந்து பரவி வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. கலிபோர்னியாவின் மத்திய பகுதியில் ஏற்பட்டுள்ள இந்தக் காட்டுத் தீ கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கட்டுக்குள் அடங்காமல் நீண்டு செல்கிறது. 10 உலங்குவானூர்திகள், 50 வாகனங்கள், சுமார் 500 தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவரப் போராடிய போதிலும், போராட்டம் இன்னும் முழுமையாக வெற்றியடையவில்லை.

சுமார் 75 வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் அழிவடைந்துள்ளன. உயிரிழப்புத் தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமான தகவல் வெளியாகவில்லை. தீ பரவ ஆரம்பித்தவுடனேயே மக்கள் துரி...யில் அப்புறப் படுத்தப்பட்டதால் பெ...லும் உயிரிழப்புத் தவிர்க்கப்படு...ன்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



# ...ளப்பெருக்கில் 25 பேர் பரிதாப உயிரிழப்பு



... நாட்டின் தெற்கு பகு...ந்த ஒரு வாரத்திற்கு ...் கனமழை பெய்து ...ு. கனமழையால் பல் ...இடங்களில் வெள்ளப் ... ஏற்படுள்ளது. உயிரி...25 பேரைத் தவிர ... 20 பேர் தேடப்பட்டு ...றனர். வெள்ளத்தால் ...ப்பட்ட இடங்களில் இருந்து பல லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டு அரச கட்டிடங்கள் மற்றும் பள்ளிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தெற்கு ஜப்பானின் கைசு தீவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தலைமை அமைச்சர் அபே நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார். (ம)

# ...அந்தாட்டிக்கா

...ார் ஒரு லட்சம் கோடி ...டை கொண்டதாக இருக் ...ா மதிப்பிடப்பட்டுள்ளது. ...தியில் தற்போது ஏற்பட் ...ளித் தகர்வால் பேராபத்து ...ாய்ப்புள்ளது. இந்த பெரிய ...ான பனிப்பாறை தென் ...தை நோக்கி நகரும் பட்சத் ...்களுக்கு பேராபத்து ஏற்ப ... நிலை நீடித்தால் கடல்நீர் ...கத்துரிதமாக அதிகரிக்கும் ...த்த பகுதியில் ஆய்வு நடத்தும் பிரிட்டன் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

உலக வெம்பமயமாதலுக்கு எதிரான செயற்திட்டங்களை முன்னெடுக்க நூற்றுக்கும் அதிகமான நாடுகளின் பங்குபற்றலுடன் பிரான்ஸின் பரிஸ் நகரில் கடந்த 2015ஆம் ஆண்டு மிகப்பெரும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் இருந்து அமெரிக்கா அண்மையில் விலகியமை குறிப்பிடத்தக்கது. (ம)



...பனிப்பாறையின் செய்மதி ஒளிப்படம்

பிரமாண்டமான
பெற்றோல், டீசல் மோட்டார் வாகன
ஏல விற்பனை
ஜூலை 15ஆம் திகதி
LOLC வாகன வளாகத்தில்
ஸ்டேசன் றோட், வைரவப்புளியங்குளம்,
வவுனியா
திமோதி - 0766 58 23 29
அஜித் - 0773 13 64 04
பிரஷாந்தினி - 0245 11 8181
பார்வையிடல்
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
சொக்மன் & சமரவிக்கிரம
schokmankandy@sltnet.lk
www.sandlanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அறிவிப்புகள் அல்ல செயலே தேவையானது

இலங்கையில் பொலித்தீன், றெஜிபோர்ம், லஞ்சீற் ஆகியவற்றுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் தடை விதிக்கப்போவதாகசுற்றாடல்அதிகாரசபைஅறிவித்துள்ளது. அதற்கானஅமைச்சரவைஅனுமதியும்கிடைத்துள்ளது.சுற்றுச் சூழல் ஆர்வலர்களை மகிழ்ச்சிப்படுத்தக்கூடிய இந்த அறிவிப்பு உண்மையில் வரவேற்கப்படவேண்டியது.

பொலித்தீன் மற்றும் லஞ்சீற் பயன்பாட்டால் சுற்றுச் சூழல் பாதிப்பு மட்டுமல்ல, சுகாதாரப் பாதிப்பும் மிக அதிகம். டெங்குக்காய்ச்சலைக்கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதிலும் இவற்றின் பங்கை நிராகரித்துவிட முடியாது. அங்கிங்கெனாது எங்கும் நீக்கமற நிறைந்து கிடக்கும் பொலித்தீன் கழிவுகளின்அச்சுறுத்தல்குறித்த விழிப்புணர்வை இன்னும் இன்னும் அதிகமாக மக்களிடம் ஏற்படுத்த வேண்டியிருக்கும் நிலையில் இந்தத் தடை உத்தரவு மிகவும் சிறப்பான நடவடிக்கை.

பொலித்தீன் கழிவுகளை எப்படி முகாமை செய்வது என்ற திட்டமிடல் இன்றியே அவற்றை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தி வந்துவிட்டோம். இலகுவில் பிரிகை அடையாத, உக்கி மண்ணோடு மண்ணாகிப் போகாத பொலித்தீன்கள் இனிவரும்50ஆண்டுகளுக்குஅதன்தாக்கத்தைத்தொடர்ந்து செலுத்தப்போகின்றன.அப்படியிருக்கையில்பொலித்தீன் பயன்பாட்டை இப்போதாவது முற்று முழுதாகத்தடை செய்தேயாக வேண்டும். அந்த வகையில் காலந்தாழ்த்தியாவது அரசு அதற்கு இணங்கியிருப்பது நன்மையானதுதான்.

எனினும் வெறும் அறிவிப்பாக மட்டுமன்றி இதனை முழுமையாகநடைமுறைப்படுத்தநடவடிக்கைஎடுக்கவேண்டியது மிகஅவசியம்.அரசநிறுவனங்கள், பொதுநிகழ்வுகளில் மட்டுமன்றி ஒட்டுமொத்த மனித வாழ்க்கையில் இருந்தும் பிளாஸ்ரிக்குகள் அகற்றப்படவேண்டும்.

வடபகுதியில் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் சாவகச்சேரிநகரசபைபோன்றஉள்ளூராட்சிமன்றங்கள்சிலபொலித்தீன் பயன்பாட்டுக்குத் தடை விதித்தன. ஆனால், இவை அரச அலுவலகங்கள், நிறுவனங்களில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுவதாக இருக்கின்றது. பொதுவாக அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பகுதிகள் அனைத்திலும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதாகஇல்லை. இதனால்இந்தத்தடையால்பெரிதாகநன்மைகள் ஏதும் உடனடியாகக் கிடைக்கவில்லை எனலாம்.

இந்தப்.பகுதிகளில் உள்ள கடைகளிலும் சந்தைகளிலும் பொலித்தீன்கள் தாராளமாகத் தொடர்ந்தும் பயன்பாட்டில் உள்ளன. உணவகங்கள், கலியாணமண்டபங்கள்என்பவற்றில் லஞ்ச் சீற் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. மொத்தவிற்பனைக்கடைகளில் இவற்றின்விற்பனைக்குக் குறைவு ஏதும் இல்லை.

உண்மை நிலை இப்படி இருக்கும்போது தடை உத்தரவு அர்த்தமற்றதாகிறது. இப்போது சுற்றாடல் அதிகார சபை விடுத்துள்ள தடை உத்தரவும் இதுபோன்றதாக இல்லாமல் இருப்பது அவசியம். பொலித்தீன்மற்றும்லஞ்சீற்என்பவை எங்கும் பயன்பாட்டில் இல்லாதவாறு முற்றுமுழுதாகத் தடை செய்யப்படுவதை சுற்றாடல் அதிகாரசபை உறுதிப்படுத்தவேண்டும். அப்போதுதான் இந்த விடயத்தில் குறைந்தளவு நன்மையாவது கிட்டும்.

பொலித்தீன், லஞ்சீற்மட்டுமல்ல, விளையாட்டுஉபகரணங்களாகவும், வீட்டுப் பாவனைப் பொருள்களாகவும் எம்மை ஆக்கிரமித்துக்கொண்டுள்ள ஏனைய பிளாஸ்ரிக் பொருள்களும்கூட தடைசெய்யப்படவேண்டும்.

இவற்றைத்தடை செய்துவிட்டால் இவற்றுக்கு மாற்றீடான பொருள்களின் உற்பத்தி பெருகும். அதன் மூலம் உள்ளூர் உற்பத்தி வளர்வதுடன் தொழில் வாய்ப்பும் அதிகரிக்கும். அது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதுடன் மக்களின் நலமான வாழ்வுக்கும் வழிஏற்படுத்தும். எனவே அறிவிப்புடன் நின்றுவிடாது அதனைச் செயற்படுத்துவதிலும் சு[illegible]ல் அதிகாரசபை முனைப்புடன் ஈடுபடவேண்[illegible]

# அரிசி ஓர் இளவரசி

சேரலாதன்

இலங்கை மக்களின் பிரதான உணவான அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளதுடன் அதன் விலையும் அதிகரித்ததால், அரசு வேறு வழியின்றி பிற நாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. கடந்த பெரும்போக நெற்செய்கைக்குப் போதிய மழை கிடைக்காததால் அது எதிர்பார்த்த அறுவடையைத் தரவில்லை. சிறுபோக நெற்செய்கையும் நம்பிக்கையை அளிப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் தற்போதும் நாட்டில் கடுமையான வறட்சி நிலவி வருகின்றது.

இந்த நாட்டைப் பொறுத்த வரையில் மக்களுக்குத் தேவையான பெரும்பாலான்பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டே வருகின்றன. அரிசி இதிலிருந்து விலகி நின்றது. தற்போது அதுவும் இறக்குமதியாகும் பொருள்களின் பட்டியலில் இணைந்துள்ளது. என்ன தான் வறட்சி நிலவினாலும், இந்த நாட்டில் கிடைக் கின்ற நீர் ஆதாரங்களைக் கொண்டு மக்களுக்குத் தேவையான அரிசியை இங்கேயே உற்பத்தி செய்து கொள்ள முடியும். ஆனால் இது அண்மைக் காலமாகச்சாத்தியப்படவில்லை.

## அரிசி விலையை அதிகரித்ததால் அரசு பதவி இழக்க நேர்ந்ததுண்டு

கடந்த காலங்களில் அரிசியை மையப்படுத்தியதாக அரசியற் செயற்பாடுகள் இடம்பெற்றதுமுண்டு. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் அரிசியை இடத்துக்கிடம் எடுத்துச் செல்ல முடியாததொரு நிலை கூடக்காணப்பட்டது. உணவகங்களில் குறிப்பிட்ட தினங்களில் தான் அரிசியிலான உணவுகளைக் காணமுடிந்தது. இதனால் மக்கள் அரசின் மீது கடும் கோபம் கொண்டனர். அரசை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். இன்றும் அந்தநிலைஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் அரசு உறுதியாகவுள்ளது. இதன் காரணமாகவே அரிசியை இறக்குமதி செய்து விநியோகிப்பதில் அரசு அவசரமாக ஈடுபட்டுள்ளது.

முன்பொரு தடவை அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவியபோது சந்திர மண்டலத்தில் இருந்தாவது அரிசியைக் கொண்டு வந்து தருவோம் என அரசியல் தலைவர்கள் மக்களுக்கு கூறியது நினைவுக்கு வருகின்றது. எமது நாட்டு மக்கள் தினமும் ஒரு வேளையாவது சோற்றை உண்ணாமல் இருக்கமாட்டார்கள். அந்த அளவுக்குஅரிசிச்சோற்றின்மீது அவர்களுக்கு அளவு கடந்த பிரியம்.

பொதுவாகவே ஆசிய நாடுகளில் வசிக்கின்ற மக்களே பெரிய அளவில் அரிசியிலான உணவுகளைத் தமது பயன்பாட்டில் கொண்டுள்ளனர். இதனால் ஆசிய நாடுகளில் அரிசி உற்பத்தி அமோகமாக இடம்பெற்று வருகின்றது. உலகின் மிகப் பெரிய மக்கள் தொகையைக் கொண்ட சீனா, அரிசியை உற்பத்தி செய்வதில் முன்னிலைவகிக்கின்றது. அங்கே அமோகமாக விளைகின்ற வெள்ளை அரிசிக்குத்தனிக்கௌரவமே உள்ளது. இந்த ரக அரிசி[illegible] தருகின்றநெல்லைப்பயிரிடும்போதுஅமோகவிளைச்சலும் கிடைப்பதால் இதற்கு எப்போதுமே மதிப்பு அதிகம். உலகிலேயே மிகப்பெரியநெல்ஆராய்ச்சி நிலையம் பிலிப்பைன்ஸ் நாட்டில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரிசி உணவுகளே நீரிழிவு நோய் ஏற்படக் காரணமாகின்றன

இந்தியாவின் தமிழ் நாட்டில் ஏழை மக்களின் பசிப்பிணியைப் போக்கும் பொருட்டு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசியை வழங்கும் திட்டத்தை மாநில அரசு செயற்படுத்தி வருகின்றது. இதனால்ஏழைமக்களின்ஆதரவு மாநில அரசுக்குக்கிடைத்துவருகின்றது.

நீரிழிவு நோய் ஏற்படுவதற்கு அரிசிஉணவுகளைஅதிகம்உண்பதும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது. அரிசியில் உள்ள மாச்சத்து குளுக்கோசாக மாறிக் குருதியில் அதிகளவில் கலப்பதால் நீரிழிவு நோய் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் ஆசிய நாடுகளைச் சேர்ந்த மக்களே நீரிழிவு நோயினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எம்மவர்கள் அதிகளவு சோற்றுடன் சிறிதளவு கறிவகைகளைச் சேர்த்து உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதுவொரு தவறான பழக்கமாகும். இது தொடர்பாக மருத்துவர்கள் திரும்பத் திரும்பக் கூறி வருகின்ற போதிலும்மக்கள்அதைக்காதில் போட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. தமது வழக்கமான உணவுப் பழக்க வழக்கங்களை அவர்கள் விடுவதாகவும் இல்லை.

உலகில் எத்தனையோ வகையான தானியங்கள் கிடைத்தாலும் அவற்றின் அரசனாக நெல்மணியே திகழ்கின்றது. நெல்லில் இருந்து தான் அரிசியும் கிடைக்கின்றது. தானங்களில் சிறந்தது அன்னதானம் எனக் கூறு வார்கள். சோற்றுக்கு மறுபெயர்தான் அன்னம். அரிசியை வேகவைப்பதன் மூலமாக சோறு அல்லது அன்னம் கிடைக்கின்றது. ஆலய மடங்களில் அன்னதானம் இடம்பெறுவது வழமையான நிகழ்வாகும். ஆலயத்துக்கு வருகின்ற பக்தர்கள் அங்கு கிடைக்கின்ற உணவை உண்பதைபெரும் பாக்கியமாகக் கருதுவார்கள்.

## முன்னோர்கள் கடைக் கொண்ட பிடியரிசிச் சேமிப்புப் பழக்கம்

எமது முன்னோர்கள் அரிசியைச் சமைக்கும்போது அதில் ஒரு சிறிய அளவை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு வைப்பார்கள். வீட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது சேமித்து வைத்த அரிசி பெரிதும் பயன்படும்.


அரிசி எமது வாழ்வோடு கலந்தது. எம்மை வாழவைப்பது. அரிசி இல்லாத உணவை எம்மால்



நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அரிசிச் சோற்றுடன் சுவையான கறிவகைகளைச் சேர்த்துக் குழைத்து உண்பதென்பது ஒருசுகமான அனுபவமாகும். வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாவரும் வெள்ளையினத்தவர்கள் சைவக் கடைகளுக்குள் புகுந்து சோற்றை வாங்கி உண்ணுகின்ற அழகே தனி அழகுதான். முட்கரண்டிகளையும் கத்தியையும் பயன்படுத்தி இறைச்சி முதலிய உணவுகளை உண்டு பழகிய அவர்கள், வெறும் கையால் வாழை இலையில் பரிமாறப்பட்ட சோற்றைக் கறிகளுடன் குழைத்து சிரமத்துடன் அருந்துவது கண்கொள்ளாக் காட்சிதான்.

எது எப்படி இருந்த போதிலும் அரிசி உணவுகள் மீதான மோகம் எம்மவர்களிடம் குறையாது இருக்கும் வரையில் அரிசி எம்மவர்கள் மத்தியில் ஒரு இளவரசியாக வீற்றிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள ரீதியான நெருக்கடிக்கு முதலமைச்சரிடமே தீர்வு

■ இந்துமதி

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு உளரீதியான நெருக்கடிகளைக் கொடுப்பதற்கு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி முனைப்புடன் செயற்பட்டு வருவதாகக் குடாநாட்டிலிருந்து வெளியாகும் ஊடகமொன்று தலைப்புச்செய்தியொன்றைப் பிரசுரித்துள்ளது. இது அந்த ஊடகத்தின் வழமையான, கற்பனையில் உதித்த தகவல் என்று நினைப்பார்களே தவிர, பொதுமக்கள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

இன்றைய கால கட்டத்தில் உலகின் பெரிய நாடுகளின் தலைவர்களில் பலர் உளம் சார்ந்த மன அழுத்தங்களுடனேயே தமது பணிகளை ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தினுள் தள்ளப்பட்டுள்ளனர். உலகின் முதன்மை நாடான அமெரிக்க நாட்டின் அரசதலைவரான டொனால்ட் ட்ரம்ப் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவரென அண்மையில் வடகொரியா கூறியிருந்தது. அரசியலில் இதெல்லாம் சாதாரணமான விடயங்கள் தான்.

### தானே தனக்கான உள நெருக்கடியை தேடிக் கொள்கிறார் முதலமைச்சர்

ஆனால் வடக்கு முதலமைச்சரைப் பொறுத்தவரையில் தனக்கு ஏற்படுகின்ற உள நெருக்கடியை அவரே தேடிக்கொள்கின்றார் என்பதே உண்மையாகும். ஒரு மனிதனின் சொந்த வாழ்க்கை வேறு; பொது வாழ்க்கை வேறு என்பதை அவர் இன்னமும் புரிந்து கொண்டார் என்று தெரியவில்லை. அரசியலில் ஈடுபடும் எவரும் தத்தம் எண்ணம்போன்று நடந்து கொள்ள முடியாது. அரசியலில் நுழைந்த பின்னர் சுயகௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய சம்பவங்களுக்குக்குறைவிருக்காது. அரசியல்வாதிகள் இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு தான் ஆக வேண்டும். முதலமைச்சரும் இதற்கு விதிவிலக்கல்ல.

### தனிக்கட்சியொன்றை ஆரம்பிக்கும் முனைப்பில் முதலமைச்சர்

தாம் தமிழ் அரசுக் கட்சியையோ அல்லது கூட்டமைப்பையோ சார்ந்தவரென வடக்கு முதலமைச்சர் ஒருபோதுமே கூறிக்கொள்வதில்லை. ஆனால் கூட்டமைப்பின் தலைவருடனும், தமிழ் அரசுக்கட்சித் தலைவருடனும் அவர் தொடர்புகளைப் பேணி வருகிறார். இதைப்போன்றுதான் தமிழ் அரசுக்கட்சிக்கும் கூட்டப்புமைக்கும் எதிரானவர்களுடனும் தொடர்புகளைக் கொண்டிருக்கிறார். இவரது மனதில் என்ன எண்ணம் ஓடிக்கொண்டிருக்கின்றது என்பது இன்னமும் சரியாகத் தெரியவில்லை. ஆனால் தம்மையொரு தலைவராக நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இவரது மனதில் ஓடுவது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இதை அண்மையில் வடமராட்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது போட்டுடைத்தார். சி.வி.விக்னேஸ்வரன் தனிக்கட்சியொன்றை ஆரம்பிக்கின்ற எண்ணத்தில் இருந்தார் எனவும், அதற்குக் கடிவாளம் இடுவதற்காகவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது என்றும் சுமந்திரன் கூறியுள்ளார். இது உண்மையாக இருக்குமானால், விக்னேஸ்வரனின் நேர்மை கேள்விக்குரியதாகின்றது. புதிய கட்சியை ஆரம்பிப்பது அவரது சொந்த விருப்புக்குரியது. ஆனால்தற்போது அவர், அங்கம்வகிக்கின்ற கட்சியிலிருந்து விலகிய பின்னரே அவரால் இதைச் செய்ய முடியும். அதைவிட அவரை முன்னிலைப் படுத்தித் தமது அரசியல் ஆதாயங்களைத் தேடுவதற்கு முயன்று கொண்டிருக்கும் மற்றொரு தரப்பினர், விக்னேஸ்வரன் தனிக்கட்சி ஆரம்பிப்பதை ஏற்றுக் கொள்வார்களென எதிர்பார்க்க முடியாது.

> **போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து விடுபடாத நிலையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்த மக்களுக்காக நாம் என்ன செய்தோம்? என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சி.வி.விக்னேஸ்வரன் கூட இதை சிந்தித்துப் பார்த்தால் நல்லது.**

### காற்றுப்போன பலூன் போன்ற நிலையில் தமிழ் மக்கள் பேரவை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்மக்கள் பேரவை, ஆரம்பித்த வேகத்தில் அடங்கிப்போய் விட்டுள்ளது. தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே பேரவையின் முக்கிய நோக்கமென அப்போது கூறப்பட்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பேரவையின் உருவாக்கத்தில் முக்கிய பங்கை வகித்தார். வடக்கு முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனைப் பேரவைக்குள் உள்வாங்குகின்ற திட்டமும் கச்சிதமாக நிறைவேற்றி வைக்கப்பட்டது. இதைவிடக்கூட்டமைப்பில் உள்ள சிலரும், கூட்டமைப்புக்கு விரோதமான ஊடகவியலாளர்கள் சிலரும் பேரவையுடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் எழுக தமிழ் என்ற தொனிப் பொருளில் பேரணிகள் இடம்பெற்றன. இதன் பின்னர் வடக்கு முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, முழுக்கடை அடைப்புக்கு அறைகூவல் விடுத்த தமிழ் மக்கள் பேரவை, இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டது.


போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கலிருந்து விடுபடாத நிலையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். கூட்டமைப்பு இவர்கள் விடத்தில் எதுவுமே செய்யவில்லையெனக் கூறி வருகின்ற தமிழ் மக்கள் பேரவையினர் இந்த மக்களுக்காக தாம் என்ன செய்தார்கள்? என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சி.வி. விக்னேஸ் வரன் கூட இதைத் தமது மனச்சாட்சியின்படி சிந்தித்துப் பார்த்தால் நல்லது.

இன்று இவர்களுடன் இணைந்து செயற்படுகின்ற இளைஞர்கள் இவர்களது உண்மையான முகம் வெளித்தெரியவரும்போது இவர்களை விட்டுக்கலைந்து சென்றுவிடுவார்கள்.

ஊடகங்கள் சில வடக்கு முதலமைச்சரை அளவுக்கு அதிகமாகப் புகழ்பாடுவதையே தமது முக்கிய தொழிலாகக் கொண்டிருக்கின்றன. இதனால் அவர் சுயமாகச் சிந்திக்கின்ற திறனை இழந்து காணப்படுகின்றார். இதனால் தான் அவரது செயற்பாடுகளும் குழம்பிய நிலையில் காணப்படுகின்றன.

இந்தக் குறைபாடு நீங்க வேண்டுமானால், அவர் தனிமையில் அமர்ந்து ஆற, அமர யோசித்துப் பார்க்க வேண்டும். நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பதைப்புரிந்துகொள்ளவேண்டும். இவர் தொடர்ந்தும் தமிழ் அரசுக் கட்சிக்கு விசுவாசமானவராக இருந்தால் தமிழ் மக்களது ஆதரவு அவருக்குக் கிட்டும்.

இந்தயதார்த்த உண்மையைப்புரிந்து கொள்ளாது மற்றவர்கள் மீது குறை கண்டு பிடித்து விமர்சிப்பதில் அர்த்தம் எதுவும் கிடையாது. ■



## ஆசிரியருக்கான கடிதம்

### வலியின் பாதிப்பை அனுபவமே உணர வைக்கும்

இலங்கை அரசியல் வரலாற்றில் சிங்கள இளம் சமுதாயத்தினர் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆதரவு பெற்றிருந்த ஜே.வி.பி. தரப்பு, தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து முன்னைய காலகட்டங்களில் கடுங்கோட்பாட்டுநிலைப்பாட்டைக்கடைக் கொண்டதன் மூலம் தன்னை ஒரு கடும் இனவாதத் தரப்பாக அடையாளப்படுத்திவந்திருந்தது. காலப்போக்கில் சோமவன்ச அமரசிங்க மற்றும் விமல் வீரவன்ச போன்ற கடும் தமிழ் விரோதப் போக்காளர்கள் வெளியேறிய நிலையில், ஜே.வி.பி. தமிழர் விடயத்தில் ஒரு மென்போக்கைக் கடைக்கொள்ளும் தரப்பாக தன்னை இனம்காட்டிவந்தது.

நாட்டில் புதிய அரசமைப்பொன்றை உருவாக்குதல் மற்றும் பலவந்தமாக ஆள்கள் காணாமல் ஆக்கப்படுவதைத் தடுக்கும் சட்டத்தை நிறைவேற்றல் ஆகிய விடயங்களில் அரசுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிடுவதன் மூலம், உலகம் அரசியல்துறை உட்படச் சகல துறைகளிலும் பெரிய அளவில் மாற்றம் கண்டு வரும் நிலையில் அதற்கேற்பத் தாமும் தம்மை மாற்ற வேண்டிய தேவை உள்ளது என்பதை ஜே.வி.பி. உணர்த்தி வருவது பாராட்டப்பட வேண்டியதொன்றே.

அதேவேளை கடந்த காலங்களில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சட்டம் சரியாகச் செயற்படவில்லை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளதோடு, எதிர்காலத்திலாவது இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருக்க ஆள்கள் காணாமல் ஆக்கப்படுதலைத் தடுக்கும் சட்டம் நாட்டுக்கு மிக அவசியமானதொன்றென்பதை ஏற்றுக் கொண்டுள்ள ஜே.வி.பியின் இன்றைய நிலைப்பாடு பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

தலையிடியும் தடிமனும் தனக்குத் தனக்கு வந்தால்தான் அவற்றின் பாதிப்புப் புரியும் என்பதற்கேற்ப, காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த விடயத்தில் எம்மவர்கள் போன்றே ஜே.வி.பி. தரப்பினருக்கும் அதன் வலி அனுபவபூர்வமாகப் புரியும் என்பதே யதார்த்தம்.

ப.பரமலிங்கம்,
தாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனை வெல்லங்கள் கொள்வனவில் புலம்பெயர்ந்தோர் அதிக ஆர்வம்

### கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

பனை உற்பத்திகளில் முன்னிலை பெறும் பனை வெல்லங்களை கொள்வனவு செய்வதில் புலம்பெயர்ந்து வாழும் தாயகத்தவர்கள் மிகுந்த விருப்பத்தை வெளிக்காட்டி வருகின்றனர் என்ற கருத்தை கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கத்தின்பொது முகாமையாளர் துரைசிங்கம் வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"உடலுக்கு ஆரோக்கியத்தைத் தருவதுடன், நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் சிறந்த உற்பத்திப் பொருளாகவும் வெல்லம் காணப்படுகிறது. புலம்பெயர்வாழ் மக்கள் கட்டளைகள் மூலம் அதிகளவிலான வெல்லங்களை கொள்வனவு செய்து வருகின்றனர். முன்னைய காலங்களில் உள்ளூர் மக்கள் பனை வெல்லங்களை கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம்காட்டுவதில்லை. தற்போது அவர்களும்வெல்லங்களை கொள்வனவுசெய்வதில் அதிக ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர். தற்போது ஒரு கிலோ வெல்லம் 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. நடப்பாண்டில் 30 ஆயிரம் கிலோ அளவுடையதான வெல்லங்களை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது" - என்றார்.

# பன்னாட்டு வர்த்தக மூலோபாயத் திட்டங்களை பயனுறுதியாக்கத் தீர்மானம்

### தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

" அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள வானூர்தி நிலையம் மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்டவை நவீன உட்கட்டுமானத் திட்டங்களாகும். இவற்றை நாம் எக்சிம் வங்கி போன்ற சீன நிறுவனங்களிடமிருந்தான நிதி மூலங்களைப் பெற்றுக் கொண்டே முன்னெடுத்து வருகிறோம்



இந்திய பெருங்கடலின் மையமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கு சீனாவின் பன்னாட்டு வர்த்தக மூலோபாய திட்டங்களை இலங்கையிலும் பயனுறுதியாக்கத் திட்டமிட்டுள்ள கருத்தினை தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

பன்னாட்டுஒத்துழைப்புக்கான அமைப்பின் ஏற்பாட்டில் 'ஒரே பிராந்தியம் ஒரே பாதை' என்னும் தொனிப்பொருளின் கீழாக சீனாவின் தலைநகர் பீஜிங்கில் அண்மையில் இடம்பெற்றிருந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்பேதே இந்த விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் மேலும் கருத்துரைக்கும் போது,


"கொழும்பு, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய மூன்று பிரதான துறைமுகங்களையும், கொழும்பு மற்றும் மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையங்களையும் அபிவிருத்தி செய்யும் பணிகளை அரசு ஆரம்பித்துவிட்டது.

அவை அனைத்தும் உத்தேசிக்கப்பட்டுள்ள சிறப்புப் பொருளாதார மையத்துடன் வீதி வழியாகவும், தொடருந்துப் பாதை வழியாகவும் இணைக்கப்படவுள்ளன. இத்தகைய முன்முயற்சிகள் இலங்கையை கப்பல் மூலமாகவும், வானூர்திகள் மூலமாகவும் பொருள்களை இடமாற்றம் செய்வதற்கான மையமாக மாற்றியமைக்கும். தவிர வீதிகளைநிர்மாணித்தல், நீர்வழங்கல், மின்இணைப்பு மற்றும் மிக அத்தியாவசியமான உட்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் இலங்கை கூடிய அவதானம் செலுத்தியுள்ளது. சீனாவின் 'ஒரே பிராந்தியம் ஒரே வீதி' முயற்சியை இலங்கையும் அதே திசையில் முன்னெடுப்பதானது எமது முயற்சிக்குக் கிடைத்த வெகுமதியாகும்" - என்றார்.

## ஆசிய வர்த்தகச் சந்தையில் கச்சா விலை சடுதியாக உயர்வு

### எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கும் ஒப்பந்தங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ளது

" பிரென்ட் மற்றும் யு.எஸ் கச்சா எண்ணெய்களின் விலை நிர்ணயமானது கடந்த இரண்டு மாதங்களில் இல்லாத அளவுக்கு 52.17 டொலராகவும் 49.23 டொலராகவும் அதிகரிப்பினை வெளிக்காட்டியுள்ளது



ஆசிய வர்த்தகச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை நிர்ணயங்கள் அதிகரிப்பைக் காட்டியுள்ளன.

இதன்பிரகாரம் உலக கச்சா எண்ணெய்ச் சந்தையில் சமநிலையை ஏற்படுத்தும் விதமாக எண்ணெய் உற்பத்தியை குறைக்கும் ஒப்பந்தங்களை எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீடிக்க வேண்டும் என்பதான அறிவிப்பை சவூதி அரேபியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் வெளிப்படுத்தியுள்ள நிலையிலே எண்ணெய் விலைகள் 3 சதவீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

இருநாட்டு எரிசக்தி அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பை தொடர்ந்தே கச்சா (Brent Crude) எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நிர்ணயமானது 52.52 டொலர்களுக்கு அதிகரித்துள்ளது.

அதேவேளை சவுதி அரேபியாவில் ஆதிக்கம் செலுத்தும் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) எண்ணெய் விலைகளை அதிகரிப்பதற்கு வெளியீட்டுக் குறைப்பை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்துக் கருத்து தெரிவித்துள்ள சவுதி அரேபிய எரிசக்தி அமைச்சர் காலிட் அல் பலீஹ்,

"கச்சா எண்ணெய் தொடர்பில் நடைமுறையில் உள்ள குறைப்புக்கள் போலவே அடுத்தகட்ட குறைப்புக்களும் அமையும்" - என்றார்.

சவுதி அரேபியா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் நாள் ஒன்றுக்கு 200 மில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெய் உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றமை நோக்கத்தக்கது.

## புதிய முதலீட்டு வரிச்சலுகை முறைமை அறிமுகம்

### வருமான வரிச் சட்டத்தின் கீழ் நடைமுறைக்கு




வர்த்தமானியில் பிரசுரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய தேசிய வருமான வரி சட்டத்தின் கீழான புதிய முதலீட்டு வரிச்சலுகைமுறைமையொன்றினை அரசு நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இதன்படி புதிய தேசிய வருமான வரி சட்டத்தின் கீழாக மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் குறைவான முதலீடுகள் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் அடிப்படைகளை உடையதாக வட மாகாணத்தினுள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு 200 வீதமான நிவாரண விகிதாசாரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய மாகாணங்களைப் பொறுத்தவரையிலே இந்தக் கொடுப்பனவானது 100 வீதம் என்ற அடிப்படை விகிதத்தில் வழங்கப்படவுள்ளது.

மேலும் இந்தப் புதிய முதலீட்டு வரிச்சலுகை முறைமை தொடர்பில் பின்வரும் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக,

"பெரியளவிலான முதலீடுகளுக்கான சலுகைக் கொடுப்பனவுகள் 100 தொடக்கம் 150 வரையான விகிதத்தில் வழங்கப்படவுள்ளதுடன் துறைமுக அபிவிருத்திக்கான முதலீடுகளுக்கு 100 வீதம் வரையான வரிச்சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

புதிய தேசிய வருமான வரி சட்டமூலத்தின் கீழ் நிறுவன வருமான வரி வீதம் என்பது 03 பிரிவுகளை உள்ளடக்கியதாக குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வங்கி, நிதி மற்றும் காப்புறுதி துறைகளுக்காக 28 வீதம் வரையிலான வரிச்சலுகையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காணி, கட்டிடம் மற்றும் பட்டியலிடப்பட்ட பங்குகள் தவிர்ந்த ஏனைய வகையான முதலீடுகளுக்கு தொடர்பற்ற விதத்தில் உள்வரும் மூலதன இலாபங்கள் மீதான வரி விதிப்பனவுகள் 10 வீதமாகவும், கூட்டுமுயற்சி வியாபாரங்கள் மீதான வரி விதிப்பனவுகள் 10 வீதமாகவும் காணப்படுகிறது."

அதேவேளை மதுசாரம், புகையிலை ஆகியவற்றுக்கு அதிகபட்சமாக 40 வீத வரி விதிப்பனவுகளும் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

## ஊழியர் சேமலாப நிதியச் சந்தை முதலீட்டின் நட்டங்கள் குறித்து விசாரணை



ஊழியர் சேமலாப நிதியத்தினால் இரண்டாம் தரச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டினால் ஏற்பட்டுள்ள தாக்கம் கூறப்படும் 9.5 பில்லியன் ரூபா தொகை மதிப்பீடுடைய நட்டம் குறித்த விசாரணைகள் இடம் பெற்றுள்ளதுஎன்றுஇக்கருத்தை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி வெளிப்படுத்தியுள்ளார்.

மத்திய வங்கியின் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றிருந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் சந்தர்ப்பத்திலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

"இந்த விசாரணைகளின் முதற்கட்டமாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மத்திய வங்கியின் உதவி ஆளுநர் உள்ளிட்ட இரண்டு அதிகாரிகள் வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர். எதிர்வரும் நாள்களில் அவர்களிடமிருந்து விளக்கம் கேட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


அத்துடன் அடுத்தகட்ட விசாரணைகளை மோற்கொள்வதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன" - என்றார்.

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

| 13/7/2017 www.cse.lk | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -7.68 | 6,738.42 | 6,746.10 |
| S&P SL20 | 0.89 | 3,899.58 | 3,898.69 |
| வியாபாரப்புரள்வு | | 489,371,648 | 557,952,830 |
| உள்நாடு- கொள்வனவு | | 220,395,296 | 406,922,208 |
| விற்பனை | | 386,742,496 | 379,018,528 |
| வெளிநாடு- கொள்வனவு | | 268,976,352 | 151,030,640 |
| விற்பனை | | 102,629,152 | 178,934,336 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 74.50 | 1,613,817 | 120,217,244 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 175.00 | 343,577 | 60,794,921 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 152.00 | 155,900 | 22,403,848 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 239.50 | 87,790 | 21,054,340 |
| ரேணுகா கப்பிற்றல் | KZOO.N | 5.60 | 3,420,971 | 19,764,512 |
| றிச்சட் பீரிஸ் அன் கம்பனி | RICH.N | 13.10 | 1,234,384 | 16,042,090 |
| எல் பீ பைனான்ஸ் | LFIN.N | 133.50 | 98,115 | 13,094,773 |
| சம்பத் வங்கி | SAMP.N | 283.90 | 45,972 | 13,056,086 |
| தலபாகல ரீ எஸ்ரேட் | TPL.N | 52.10 | 188,945 | 9,850,746 |
| பேகவந்தலாக பிளான்ரேசன் | BALA.N | 18.60 | 462,662 | 8,441,298 |

- பங்குலாபம் -

லங்கா மில் பூம் - ரூபா 2.50
ஏசியன் பிளாஸ்[illegible] - ரூபா [illegible]
களனி கேபிள் - ரூபா 3.50
களனி ரயர் - [illegible]

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 244 |
| [illegible] | 11.5 |
| [illegible] | 1.5 |
| பங்குலாப விளை[illegible] | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து வெள்ளி

■ என்.கரன்

# கந்தன் அருள் மேவும் தல யாத்திரை

## அடியார்கள் வினை தீர்க்கும் மாத்திரை

கதிர்காம முருகன் கோவிலுக்கான யாத்திரைப் பயணங்கள் எப்போதும் பக்தி மயப்பட்டதாகவே அமைந்திருக்கும். கந்தனின் தரிசனத்தை கண்குளிரக் கண்டு கொள்ள வேண்டும் என்ற நீண்ட தூரக் கால் நடைப் பயண வேண்டுதல்களின் தனித்துவமாக அவை என்றும் சிறப்புற்றிருக்கும். அந்தவகையிலே வனவழிப் பாதையூடான யாத்திரைகள் கொடிய மிருகங்களின் இருப்பிடமான கானகங்களை இடையறுத்துச் செல்வதாக இருக்கும். யாத்திரிகர்கள் செல்லும் பாதையெங்கும் கல்லும், முள்ளும், மணலும், புல்லும், நீரும் .வனப்பும், வெயிலும் முருக பக்திக்கான சக்தியை ஈடுசெய்யப்பணிக்கும். 'கந்தப் பெருமான் எங்கள் சொந்தப் பெருமான்' என்று கூறிய படியே அடியவர்கள் 'அரோகரா கோஷம்' எழுப்புவர். தாம் கொண்டு வந்த இசைக்கருவிகளுடன் ஒன்றித்துக் கந்தன் பாமாலைகள் பாடியவாறு யாத்திரைப் பயணங்களைத் தொடர்வர்.



இவ்வாறு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் முருக தரிசனம் பெறலுக்கான யாத்திரைப் பயணங்கள் வருடம் தோறும் இடம்பெறுகின்றன. ஒவ்வோரு பிரதேசங்களில் இருந்தும் நூற்றுக்காணக்கான அடியவர்கள் தங்களது வேண்டுதல்களோடு புறப்பட்டு நான்கு அல்லது ஐந்து வாரங்கள் என நடை பயணங்களை மேற்கொண்டு ஆலயத்தை வந்தடைகின்றனர். இவ்வாண்டும் ஏராளமான அடியவர்கள் பாதயாத்திரைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் கதிர்காமம் முருகன் கோவிலுக்கான பாதயாத்திரைப் பயணத்தை தொடர்வதற்கான கூமுனை காட்டு வழிப்பாதை நாளை முதல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதிவரை திறந்திருக்கும் என உகந்தை முருகன் ஆலயத்தின் தலைமை வண்ணக்கர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கதிர்காம முருகன் கோவிலுக்குப் பாதயாத்திரை மேற்கொள்வோர் குறுந்தூரக் காட்டுப் பாதைகளையே பயன்படுத்துகின்றனர். அந்தவகையிலே உகந்தை யால சரணாலயம் ஊடான பாதயாத்திரை கூமுனை என்ற இடத்திலிருந்து ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.


**பத்தில் பதியடைதல்**

வனவழியூடான யாத்திரைப் பயணங்கள் நாளை முதல் ஆரம்பமாகின்றன. இந்தப் பயணங்கள் குமண பறவைகள் சரணாலயத்தில் இருந்து குமுக்கன் ஆற்றினை அடைந்து அங்கிருந்து அடர்ந்த வனவழியூடாக வண்ணாத்தி கிணற்றடி, பறவைக்குளம், மணல் பாதை, வெள்ளி முள் தோட்டம், உப்பாறு, வீரச்சோலை, துலை யாப்பலை காடு, நாவலடி, கட்டகாமம் போன்ற பகுதிகளின் ஊடே தொடர்ந்து கதிர்காம ஆலயத்தினை வந்தடையும். இதனை 'பத்தில் பதியடைவது' எனும் மரபுக்கமைவான பயணம் எனச் சிறப்பித்துச் கூறுகின்றனர்.

**கதிர்காம திருக்கொடியேற்றம்**

கதிரகாமக் கந்தன் ஆலயத் திருக் கொடியேற்றல் நிகழ்வின் ஆரம்பங்கள் கதிர்காமத்தின் 'பால்குடி பாவா' பள்ளிவாசலில் இடம்பெறுகின்றன.

இந்த ஆரம்ப நிகழ்வுகளின் போது பள்ளிவாசலினுள் பச்சை நிறத்திலான கொடியினை வைத்து இஸ்லாமிய மதப் பெரியார்கள் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர். பின்பு கொடிக்குச் சந்தனம் பூசி ஆகம முறைப்படியாக பாரம்பரிய இசை ஒலித்து அக் கொடியோடு பள்ளிவாசலை வலம் வருகின்றனர். அதனைத் தொடர்ந்து பிரார்த்தனைகள் இடம்பெற்று அனைத்து மத பெரியார்களின் ஆசீர்வாதத்தோடு கதிர்காமக் கந்தன் ஆலய கப்புறாளையிடம் கொடியானது கையளிக்கப்பட்டு கொடியேற்ற நிகழ்வு இடம்பெறும். இதுவே வழமையாகவும் காணப்படுகிறது.



மத பேதங்களையும், மொழி பேதங்களையும்கடந்துஅனைவரும் ஒன்றிணைந்து கதிர்காமக் கந்தனை வழிபடும் பண்பு என்பது ஆலயத்தின் தனிச் சிறப்பிற்குரிய கைங்கரியமாக அமைந்துள்ளது.

> “கந்தன் அருள் அடியவர்களைக் காத்திருக்கிறது. தல யாத்திரை மேற்கொண்டு தனை நாடி வேண்டுதல்களோடு வருகையுறும் அடியவர்களை பரிவோடு அரவணைத்து, துன்பங்களைக் களைந்திருக்கிறது. வேல் ஆயுதம் கொண்டு கன்ம வினைகளின் போராயுதங்களை அழித்திருக்கிறது. அருள் கொண்டு மருவி எழுந்தருளும் முருகவேள் பக்தர்கள் அனைவரிடத்தேயும் அன்பினையும், இன்பத் தூய்மைகளையும், வாழ்வியல் கோன்மையுள் அமைதியின் மேன்மைகளையும் வியாபகம் செய்திருக்கட்டும்.

**தல யாத்திரை**

இலங்கையில் அமைந்துள்ள புராதன முருக ஸ்தலங்களில் முதன்மையானவனாக, சர்வ மதக் கடவுளனாக அருளாட்சி செய்து வருகின்ற கதிர்காமக் கந்தனை பணிவதான பாதயாத்திரைகள் பன்நெடுங்காலமாக இடம்பெற்றுவருகின்றன. புராண இதிகாச காலம் சார்ந்த சித்தர்களும், முனிவர்களும், மகான்களும், ரிஷிகளும் இப்பூவுலகில் வாழ்ந்த காலம் தொடக்கம் கதிர்காமத் தலயாத்திரைகள் ஆரம்பமாகி இடையறாது தொடர்கின்றன.

கதிர்காமக் கந்தனின் பேரருளைப் பெறுவதற்கு வட இந்தியாவில் இருந்தும், தென் இந்தியாவில் இருந்தும் முனிவர்கள், சித்தர்கள், யோகிகள், ஞானிகள் எனப் பலரும் தலயாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

இதனடிப்படையிலே இவர்கள் யாழ் சம்புத்துறை மற்றும் மன்னார் மாந்தை ஆகிய இடங்களில் வந்திறங்கி நகுலேஸ்வரம் கதிரையாண்டவரை தரிசித்தனர். பின்பு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் சென்று தரிசனம் மேற்கொண்டு அங்கு தங்கியிருந்தனர்.

அங்கிருந்து ஈழமணித் திருநாட்டின் கிழக்குப் பகுதியாக அமைந்துள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை பாத யாத்திரை மேற்கொண்டு வந்தடைந்தனர். பின்பு உகந்தையில் இருந்து வனங்களின் ஊடான பயணத்தை மேற்கொண்டு மொனராகலை ஊடாக கதிர்காமத்தினை சென்றடைந்தனர். முருகனை வணங்கி தமது சக்தியினை அதிகரித்துக் கொண்டுள்ளனர்.

இந்தப் பாரம்பரியமான வழக்கங்களை அடிப்படையாகக்கொண்டே செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து கதிர்காமக் கந்தனை நோக்கியதான தலயாத்திரைப் பயணங்கள் இன்றுவரையாகவும் இடம் பெற்றுவருகின்றன.

பாதயாத்திரையினை மேற்கொண்டு முருகனை தரிசிக்க அமைப்பும், முருகன் அருளும் ஒன்று சேரக் கிடைக்க வேண்டுமென எம் முன்னோர் சொல்கின்ற அருளமுதமான வார்த்தைகள் இங்கு நோக்குதற்குரியது. எத்தனையோ சுவாமிகள் யாத்திரைகளை மேற்கொண்ட போதும் கதிர்காமக் கந்தனைத் தரிசனம் செய்யும் பாக்கியம் இன்றி திரும்பிய வரலாறுகளும் உண்டு.

**பயண வழிப்பாதை**

உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து குமண வனவழிப்பாதை ஆரம்பமாகின்றது. இந்த வனவழிப் பாதையூடாக தல யாத்திரைப் பயணத்தை மேற்கொள்வோர் ஏறத்தாழ 75 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து செல்ல வேண்டும். 05 தொடக்கம் 10 நாள்கள் வரை இந்தப் பயணம் நீடிக்கும்.

கலியுகத்தில் கேட்ட வரங்களை வாரி வழங்கும் கலியுக வரதனாக முருகப் பெருமான் விளங்குகிறார். இதன் காரணம் கொண்டே தான் முருக வழிபாட்டை சகல இன மக்களும் முன்னிலைப்படுத்தி வருகின்றனர். காட்டுவழிப் பாதைகள் ஊடான பாத யாத்திரைகள் அற்புதங்கள் நிறைந்த செளபாக்கியங்களின் பயனளிக்கும் பயணமாக அமைந்திருக்கும்.

கல்லும் முள்ளும் நிறைந்த கானகத்தின் ஒற்றையடிப் பாதையூடாக, கொடிய வன விலங்குகளின் பயமுறுத்தல்களுக்கு மத்தியிலே காலணிகள் எதனையும் அணியாது அடியவர்கள் யாத்திரையை மேற்கொள்கின்றனர். இதில் சிறு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை உள்ளடங்குகின்றனர்.

வழிதவறும் பக்தர்களை பல வடிவம் கொண்டு முருகன் துணை நின்று காத்தருளி ஆலயம் கொண்டுவந்து சேர்க்கின்ற அற்புதங்களும், பசித்தோர்க்கு உணவளிக்கும் அருளின் மேன்மைகளும் தலா யாத்திரைப் பயணங்களிடையே இடம் பெற்ற வண்ணம் உள்ளன.

ஆக, கந்தன் அருள் அடியவர்களை காத்திருக்கிறது. தல யாத்திரை மேற்கொண்டு தனை நாடி வேண்டுதல்களோடு வருகையுறும் அடியவர்களை பரிவோடு அரவணைத்துத் துன்பங்களைக் களைந்திருக்கிறது. வேல் ஆயுதம் கொண்டு கன்ம வினைகளின் போராயுதங்களை அழித்திருக்கிறது. அருள் கொண்டு மருவி எழுந்தருளும் முருகவேள் பக்தர்கள் அனைவரிடத்தேயும் அன்பினையும், இன்பத் தூய்மைகளையும், வாழ்வியல் கோன்மையுள் அமைதியின் மேன்மைகளையும் வியாபகம் செய்திருக்கட்டும்.

*“ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே*
*ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே*
*கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே*
*குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே*
*மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே*
*வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே*
*ஆறுமுகம் ஆன பொருள் நீ அருள வேண்டும்*
*ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே…!”*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நேர்மை

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, ஆளுநரிடம் கையளிக்குமாறு என்னிடம் திணிக்கப்பட்டது. அதை நான் விருப்புடன் கையளிக்கவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நீர்வேலியில் நடந்த மக்கள் சந்திப்பில் கூறியிருந்தார். அவரைப் பற்றி அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் இந்த விடயத்தில் என்ன நடந்திருக்கும் என்பதைச் சரியாக ஊகித்திருப்பார்கள்.

தனக்கு விருப்பமில்லாத ஒன்றைத் திணித்ததால் தான் செய்ததாக மிகச் சுலபமாகக் கூறி விட்டு, விடயத்திலிருந்த நழுவ முற்பட்டிருக்கிறார் சி.வி.கே.சிவஞானம். அரசியல்வாதியாக மட்டுமல்லாது மிக நீண்ட காலம் அரச அதிகாரியாகவும் இருந்தவர் சிவஞானம். அப்படிப்பட்டவர், மற்றவர்கள் திணித்தாரகள் என்பதால், அதை வேறு வழியின்றிச் செய்தேன் என்று கூறுவாரானால் தமிழ் மக்களுக்கு விரோதமானவற்றையும் கூட, அவர் செய்திருப்பார் என்ற முடிவுக்கு வரலாம்.

இவை ஒருபுறம் இருக்கட்டும். கடந்த மாதம் 14ஆம் திகதி, வடக்கு மாகாண சபை அமர்வு முடிந்ததும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் மாகாணசபை உறுப்பினர்களின் கூட்டம் நடந்தது. அதில் கட்சியின் உறுப்பினர்களும், அமைச்சர் பா.டெனீஸ்வரனும், அ.அஸ்மினும் மேலதிகமாகக் கலந்து கொண்டிருந்தனர். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தயாரித்து அதனை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தியவர் மாகாணசபை உறுப்பினர் சயந்தன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளுநரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் புதிய முதலமைச்சர் யார் என்று ஆளுநர் கோரினால், பதில் முதலமைச்சராக எவரை நியமிப்பது என்ற ஏற்பாடு எங்களிடம் இருக்க வேண்டும் என்று சயந்தன் உறுப்பினர்களிடம் கூறினார்.

வழமையாக முதலமைச்சர் வெளிநாடு சென்றால், அமைச்சரவையில் உள்ள ஏனைய அமைச்சர்களில் ஒருவர்தான் பதில் முதலமைச்சராகப் பணியாற்றுவார். அவ்வாறாயின் த.குருகுலராசாவைத்தான் நியமிக்க வேண்டும். ஆனால் அவர் விசாரணை அறிக்கையில் பதவி விலக வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறார். அவரை நியமிக்க முடியாது. அடுத்த நிலையில் உள்ள ஐங்கரநேசனும் அதே நிலையில் உள்ளவர். எனவே அமைச்சர் ப. சத்தியலிங்கத்தை பதில் முதலமைச்சராகப் பெயரிடலாம்என்றுகுறிப்பிட்டார். இதன்போது அமைச்சர் டெனீஸ்வரன், சிவஞானத்தின் பெயரை முன்மொழிந்தார். நாம் தனி நபர் சார்ந்து இந்த விடயத்தைமுன்நகர்த்தக் கூடாது என்று சயந்தன் கூறியதும், அந்தக் கூட்டத்திலிருந்து சி.வி.கே.சிவஞானம் வெளியே செல்லப் புறப்பட்டார். அவர் தனது வாகனத்தை எடுத்துக் கொண்டு செல்ல முற்பட்ட போது, அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் த.குருகுலராசா ஆகியோர் அவரைச் சமாதானப்படுத்தி அழைத்து வந்தனர். இதன் பின்னர், பதில் முதலமைச்சராக சிவஞானத்தின் பெயர் முன்வைக்கப்பட்டது.




நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரதி அவைத் தலைவரே ஆளுநர் அலுவலகம் வரையில் கொண்டு சென்றார். அங்கு வைத்து சி.வி.கே.சிவஞானத்திடம் அதனை ஒப்படைத்தார். இதன்போது சிவஞானம் எந்த மறுப்பும் சொல்லாமலேயே அதனைப் பெற்று ஆளுநரிடம் கையளித்தார். கையளித்த அன்றிரவே, தனது வாகனத்தில் பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரனையும் ஏற்றிக் கொண்டு கொழும்புக்குச் சென்று, எதிர்கட்சி உறுப்பினர் அகிலதாஸிடம் சத்தியக் கடதாசியைப் பெற்றார். திரும்பி வரும்போது எதிர்க் கட்சி உறுப்பினர் ஜனோபரிடமும் சத்தியக் கடதாசியைப் பெற்று வந்தார். அரசியலில் உண்மையாக இருக்காவிட்டாலும், ஆகக் குறைந்தது நேர்மையாக இருப்பது போன்று நடிக்கவாவது முயற்சிக்க வேண்டுமல்லவா!

## வரலாற்றில் இன்றைய தினம்

1223-அரசர். பிலிப் உயிரிழந்ததையடுத்து அவரது மகன் எட்டாம் லூயிஸ் பிரான்ஸின் அரசரானார்.

1789-பரிஸ் குடிமக்களால் பஸ்ணல் தாக்கப்பட்டது.

1853- அமெரிக்காவின் முதலாவது உலக சந்தை திறந்து வைக்கப்பட்டது. நியூயோர்க் நகரில் அனைத்து கைத்தொழில் நாடுகளினதும் கைத்தொழில் கண்காட்சியாக இது அமைந்தது.

1911-ஹாரி அட்வூட் வெள்ளை மாளிகையின் தெற்கு பகுதி முற்றத்தில் தனது வானூர்தியைத் தரையிறக்கினார் இந்தச் சாதனைக்காகப் பின்னாளில் அமெரிக்க அரசதலைவர் வில்லியம் ஹவாட் ராப்ட் இடமிருந்து தங்கப் பதக்கம் விருதும் பெற்றார்.

1915-ஒட்டமான் பேரரசுக்கு எதிரான அரபுப் புரட்சி தொடர்பாக மெக்கா ஷெரிப் ஹுசைன் பின் அலி மற்றும். பிரித்தானிய அதிகாரி ஹென்றி மக்மஹோன் இடையே கடிதப் பரிமாற்றம் ஆரம்பமானது.

1928-ஹியூவில் புதிய வியட்னாம் புரட்சிக்கட்சி தொடங்கப்பட்டது இதன் பயனாக கம்யூனிஸ் கட்சியின் மிகப் பிரதான தலைவர்கள் உருவாக்கப் பட்டனர்.

1933-ஜேர்மனியின் கிளச்ஷோல்றங்கில் நாசி கட்சி தவிர்ந்த ஏனைய அரசியற் கட்சிகள் சட்ட விரோதமானவை ஆக்கப் பட்டன.

1933-மரபணு தொடர்பாகக் குறைபாடு உடையவர்களைக் கட்டாயக் கருத்தடைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென ஜேர்மனியில் சட்டம் கொண்டு வரப் பட்டது.

1948-இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பால் மிரோ ரொக்லியாற்றி நாடாளுமன்றத்துக்கு அருகே சுடப் பட்டுப் படுகாயமடைந்தார்.

1950-வடகொரியப் படைகளால் ராஜோன் சண்டை முன்னெடுக்கப்பட்டது.

1965-மரினர் -4. செவ்வாய்க்கருகே சென்று ஒளிப் படமெடுத்து அனுப்பியது வேறொரு கிரகத்தை நெருங்கி படம் பிடித்த முதற் சம்பவம் இதுவாகும்.

1969-ஹொண்டுராஸ் கால்பந்தாட்டம் ஒன்றில். எல் சல்வடோரிடம் தோற்றதையடுத்து ஹொண்டூராஸில் சல்வடோர் குடிவரவு தொழிலாளர்களுக்கு எதிராக கலவரம் வெடித்தது.

1976-கனடாவில் தூக்குத் தண்டனை இல்லாமற் செய்யப்பட்டது.

1986-திருமலையில் மாலை 7 மணி தொடக்கம் ஊரடங்கு நடைமுறையில்.

1995-புக்காரா வானூர்த்தியைப் புலிகள் வீழ்த்தினர்.

1995-பிரபா இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு இருப்பதாக இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு.

1995-மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் சுட்டுக் கொலை.

2005-சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த மீதான தாக்குதல் வழக்கில் 2பேர் குற்ற வாளிகள் எனத் தீர்ப்பு.

2016-பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றில். பிரான்சில் 86 குடிமக்கள் உயிரிழக்க 400பேர் காயமடைந்தனர்.

2016-சரணடைந்தவர் தொடர்பில் விரிவான விசாரணை அவசியம் என பரணகம வலியுறுத்தல்.

2016-போர்க் குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லையென நான் ஒரு போதும் கூறவில்லை. அப்படிக் கூறவும் முடியாதென சம்பந்தன் தெரிவிப்பு.

2016-அரச வேலை என்ற மனோ நிலை இளைஞரிடம் மாறவேண்டும் என வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் அறிவுரை.

### நாளை

**ஆனி - 31**
சனிக்கிழமை
-15.07.2017
திதி:ஷஷ்டி
மு.ப.11.45 வரை
நட்சத்திரம்:
உத்தரட்டாதி
மு.இ.10.27 வரை
சுபநேரம்:
03.00–04.30 வரை
ராகுகாலம்:
09.00–10.30 வரை




தூக்கத்தில் கனவுகள் வருவது பொதுவான ஒன்று தான். ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியான கனவுகள் வரும். அப்படி வரும் கனவுகள் ஒவ்வொன்றும் எமது உண்மையான வாழ்க்கையில் என்ன நடக்கப் போகிறது என்பதைச் சுட்டிக் காட்டும் எனப் பலர் கூறுவர். சில நேரங்களில் சில கனவுகள் எமது எதிர்காலத்தில் நடக்க போகும் நல்லதையும் மற்றும் சில கனவுகள் கெட்டதையும் உணர்த்துமாம். அந்த வகையில் இந்தப் பதிவில் எப்படியெல்லாம் கனவு வந்தால் என்ன அர்த்தம் எனக் கொடுக்கப்பட்டுள்ளது. அதிலும் அதிகாலையில் பிரம்ம முகூர்த்தத்தில் கனவுகளைக் கண்டு, அந்தக் கனவு எமக்கு நினைவில் இருந்தால், அது நிச்சயம் நடக்கும் என, வேதங்கள் கூறுகின்றன.

**கனவு 1**
ஆண், தனது கனவில் மனைவி அல்லது நிச்சயித்தப் பெண்ணுடன் வெளியூர்ப் பயணம் மேற்கொள்வது போன்று வந்தால், அது அந்த ஆணின் திருமண வாழ்க்கை வெற்றிகரமாக அமையப் போகிறது என்று அர்த்தமாம்.

**கனவு 2**
ஆண் வெள்ளை உடை அணிந்த ஒரு பெண்ணைச் சந்திப்பது போன்று கனவு கண்டால், அந்த ஆணின் வாழ்வில் அதிர்ஷ்டம் கொழிக்கப் போகிறது என்று அர்த்தமாம்.

**கனவு 3**
ஆணின் கனவில் ஒரு பெண் நடனமாவது போன்று வந்தால், அந்த ஆணின் திருமண அல்லது காதல் வாழ்வில் முறிவு ஏற்படப் போகிறது என்று அர்த்தமாம்.

**கனவு 4**
ஆண் தன் கனவில் திருமண கோலத்தில் ஒரு பெண் அழுவது போன்று கண்டால், அது மாமனார், மாமியாருடன் சண்டை வரப் போவதைக் குறிக்குமாம்.

**கனவு 5**
கனவில் தனது வாழ்க்கைத் துணைக்கு வைர ஆபரணங்களைப் பரிசாகக் கொடுப்பது போன்று ஆண் கனவு கண்டால், அது அந்த ஆண் திருமண வாழ்வில் கூடிய விரைவில் பிரச்சினையைச் சந்திக்கப் போகிறார் என்று அர்த்தமாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனசாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்டப் பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். நண்பர்களால் உதவி உண்டு.

**இடபம்:** நம்பியவருக்கு இயன்ற உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்தில் சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும்.

**மிதுனம்:** வெளிப்படையாக பேசுவதில் தயக்கம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பெண்களுக்கு பிள்ளைகளின் வழியில் செலவு ஏற்படலாம். வருமானம் வரும்.

**கடகம்:** சந்திக்கும் நிகழ்வுகள் பாதிப்பை ஏற்படுத்தலாம். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். பாதுகாப்பு குறைவான இடங்களுக்கு செல்ல வேண்டாம்.

**சிங்கம்:** நீண்ட நாள் விருப்பம் நிறைவேறும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** மனதில் இருந்த தயக்கம் விலகி தைரியம் பிறக்கும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** உங்களின் எதார்த்த பேச்சு பிறரை சங்கடப்படுத்தலாம். நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும்.

**விருச்சிகம்:** தேவையற்ற சமயத்தில் பேசுவதை தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**தனுசு:** உங்களின் நற்செயலை சிலர் விமர்சனம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மனைவி, குழந்தைகளுடன் விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** சிலரது தற்பெருமை பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாக நடைமுறையை சரிவர பின்பற்றுவது நல்லது.

**கும்பம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மீனம்:** திட்டமிட்டப் பணிகளை தாமதமின்றி நிறைவேற்றவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர். பெண்கள் செலவில் சிக்கனம் கடைபிடிப்பர்.














**சிற்பன்**

நேர்மை...
இன்று அனைவரிடமும் அழிந்து போன `மை' யானது.



# வேலையில்லா பட்டதாரி -2 ட்ரெய்லர் படைத்த சாதனை

சவுந்தர்யா ரஜினிகாந் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் உருவாகியிருக்கும் வேலையில்லா பட்டதாரி 2 படத்தின் ட்ரெய்லர் புதிய சாதனை ஒன்றைப் படைத்திருக்கிறது.

வேல்ராஜ் இயக்கத்தில் தனுஷ், அமலாபால், மற்றும் பலர் நடிப்பில் கடந்த 2014ஆம் ஆண்டு வெளியாகிய படம் 'வேலையில்லாப் பட்டதாரி'. ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதால் இந்தப் படத்தின் 2ஆவது பாகம் தற்போது தயாராகி உள்ளது.

ரஜினிகாந்தின் இரண்டாவது மகளான சவுந்தர்யா ரஜினிகாந் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தப் படம் தமிழ் மற்றும் தெலுங்கில், தனுஷ் பிறந்தநாளான எதிர்வரும் 28ஆம் திகதி வெளியாக இருக்கிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்தப் படத்தின் ட்ரெய்லர் 'யூ ரியூப்' இல் வெளியிடப்பட்டது. இதை இது வரை சுமார் 90 லட்சத்து 50ஆயிரம் பேர் பார்த்துள்ளனர். தனுஷின் படத்திற்கு அதிகளவில் பார்வையாளர்களைப் பெற்றுள்ள படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 5 | 4 | 6 | 3 | 2 | 1 | 8 |
| 3 | 6 | 1 | 2 | 5 | 8 | 9 | 7 | 4 |
| 2 | 4 | 8 | 1 | 7 | 9 | 6 | 3 | 5 |
| 5 | 2 | 6 | 3 | 1 | 4 | 8 | 9 | 7 |
| 7 | 1 | 3 | 9 | 8 | 5 | 4 | 6 | 2 |
| 8 | 9 | 4 | 7 | 2 | 6 | 1 | 5 | 3 |
| 1 | 3 | 9 | 5 | 4 | 2 | 7 | 8 | 6 |
| 6 | 5 | 2 | 8 | 9 | 7 | 3 | 4 | 1 |
| 4 | 8 | 7 | 6 | 3 | 1 | 5 | 2 | 9 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டுவோம்





## படித்ததில் பிடித்தது



### வெற்றிக்கு அடிப்படை முயற்சிகள்

தோல்வியும் வெற்றியும் எப்படி உண்டாகின்றன? என்பதற்கு பெர்னார்ட்ஷா ஒரு விளக்கம் சொல்லி இருக்கிறார். "நான் இளைஞனாக இருக்கும் போது பத்துக் காரியங்கள் செய்தால் அதில் ஒன்பது காரியங்கள் தோல்வி அடைவதைப் பார்த்தேன். என்னுடைய வாழ்க்கை தோல்வியாவதை நான் விரும்பவில்லை. ஒன்பது தடவை வெற்றி பெற என்ன செய்யவேண்டும்? என்று யோசித்த போது, எனக்கு ஒரு உண்மை 'பளிச்'சென்று விளங்கியது. தொண்ணூறு முறை முயன்றால் ஒன்பது தடவை வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. ஆகவே நான் முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேன்.

### நகைச்சுவைத் துணுக்கு

ஒரு மனிதர் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அந்த வேளை அவரைப் பார்க்க இன்னொரு மனிதர் வந்தார். ஆனால் சாப்பிட்டுக் கொண்டிருந்த ம்னிதர் ஒரு மரியாதைக் கென்றாலும் அவரைச் சாப்பிடச் சொல்லவில்லை. இரண்டாவது வந்தவருக்கு அது என்னவோ போல் இருந்தது. உடனே அவர் வேதாகமத்தை எடுத்து வைத்துக் கொண்டு "பிறருக்குக் கொடுக்காது உண்ணாதே" என்றார். சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் பதிலுக்கு மேசை மீதிருந்த வேதாகமத்தைப் புரட்டியவாறு "பிறர் பொருளை இம்சிக்காதே" என்று கூறிக் கொண்டே ஏப்பம் விட்டபடி எழுந்தார்.

## வாக்கிய அமைப்பு வாக்கிய உறுப்புக்கள்

ஒரு வாக்கியத்தில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் அடைமொழி என்ற நான்கு உறுப்புகள் உண்டு.

**எழுவாய்** : வாக்கியம் ஒன்றில் யார் அல்லது எது அல்லது எவை என்ற கேள்விக்கு விடையாக அமையும் சொல் எழுவாய்.

உதாரணம் : மாணவர்கள் பந்து விளையாடுகிறார்கள்.

யார் விளையாடுகிறார்கள்? - மாணவர்கள்

மாணவர்கள் - எழுவாய்

**பயனிலை** : வாக்கியம் ஒன்றின் கருத்தை நிறைவு செய்யும் இடம் (சொல்) பயனிலையாகும். பயனிலை வினை வடிவில் வரும் .வாக்கியத்தின் இறுதியில் வரும் (வினை முற்று)

உதாரணம் : கார்த்திகா பாடம் படித்தாள்

படித்தாள் - பயனிலை

**செயப்படுபொருள்** : வாக்கியத்தில் எப் பொருள் பற்றிப் பேசப்படுகிறதோ அதுசெயப்படுபொருளாகும். எதை, யாரை, எவற்றை, என்னத்தை என்ற வினாக்களுக்கு விடையாக அமைவது செயப்படுபொருள்

உதாரணம் : பூனை பாலைக் குடித்தது

பால் - செயப்படுபொருள்

அடைமொழி : வாக்கியம் ஒன்றின் உறுப்புக்களை விசேடித்து வரும் சொல் அடைமொழியாகும். இது எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றையும் விசேடித்து வரும்

உதாரணம் :

1. வெள்ளைக் கொக்கு குளக்கரையில் நின்றது.
   வெள்ளை எழுவாய் அடைமொழி
2. காற்று பெரிய மரத்தை வீழ்த்தியது
   பெரிய என்பது செயப்படுபொருள் அடைமொழி
3. மாணவர் பாடங்களைக் கவனமாகப் படித்தனர்
   கவனமாக என்பது பயனிலை அடைமொழி.

# புல்வெளி தன்னில்.....



ஒரு காட்டில் எருது ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் காட்டின் ஒரு பகுதியில் பச்சைப் .பசேல் என்று புல் அடர்ந்து கிடந்தது. எருதுக்கு, தான் இருக்கும் இடத்துப் புல்லே மிகவும் போதுமானதாக இருந்த போதிலும், தூரத்தில் அடர்ந்திருந்த புல்வெளியே கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் அழகாகவும் தெரிந்தது. தூரத்துப் புல்லில் ஆசைப்பட்ட எருது, அந்தப் புல்வெளி நோக்கிச் சென்று கொண்டிருந்தது. எருது தூரப் புறப்பட்டுச் செல்வதை அங்கிருந்த மரமொன்றில் அமர்ந்திருந்த கிளி ஒன்று அவதானித்தது. "எருதண்ணா எங்கே போகிறீர்கள்? என்று கேட்டது கிளி. "அதோ அங்கே தூரத்தில் தெரியும் புல் வெளிக்குச் சென்று புதுப்புல் மேயப் போகிறேன்'' என்றது எருது. கிளியோ " "அண்ணா அங்கே இருக்கும் புற்கள் தூரத்தில் இருப்பதால் மிகவும் பசுமையானதாகத் தெரிகின்றன. இங்கிருப்பவையும் அங்கிருந்து பார்த்தால் மிகவும் பசுமையாகத்தான் தெரியும். 'தூரத்துப் பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி' என்பார்களே! நீர் கேள்விப்பட்டதில்லையா? என்றது. எருது கிளியைப் பார்த்து



"மூடக்கிளியே! புல்லைப் பற்றி உனக்கென்ன தெரியும்?'' என்று கூறிவிட்டு தொடர்ந்து நடந்தது. கிளியோ "சரி" எனக்கு புல்லைப் பற்றி எதுவும் தெரியாது தான். ஆனால் உங்களுக்கு புலியைப்பற்றி நன்கு தெரியுமல்லவா? புற்களுக்கு இடையே புலி மறைந்திருக்கும் கவனம்" என எச்சரிக்கை செய்தது. எருதுக்கும் கிளிக்குமான உரையாடலைக் குள்ள நரி ஒன்று பற்றை மறைவில் இருந்து கேட்டு விட்டு வெளிப்பட்டு "ஏய் கிளியே! கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனை? உனக்கு என்ன தெரியும். புல்லைப் பற்றி? ஒருவர் ஒரு நல்ல காரியமாகப் புறப்பட்டுச் செல்கையில் எங்கே போகிறீர்கள்? என்று கேட்பது தவறல்லவா? மேலும் புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பதை நீஅறியாயோ? ஆதலால்புல்வெளியிலாவது புலியாவது இருப்பதாவது. ஆசையாக எருதண்ணா உணவு தின்னப் போகிறார். மீறி புலி வந்தாலும் கூட, எருதண்ணாவின் கொம்புகள் சும்மாதான் இருக்குமா? புலியின் குடலை குத்தி உருவி புலிக்கு மாலைப் போட்டு விட மாட்டாதா?" என்று எருதுக்கு உற்சாக மூட்டும் வகையில் பாசாங்கு மொழி பேசியது.

எருதோ கிளியின் பேச்சை அசட்டை செய்து, நரியுடன் உரையாடிக் கொண்டு புதுப் புல் வெளியை அடைந்தது.

இப்போது நரி மெதுவாக அவ்விடத்தை விட்டுநழுவ, எருதோ புற்களை ஆசையுடன் மேய்வதில் ஆர்வம் காட்டியது.

இப்போது தனித்து விடப்பட்ட எருதின் மேல் சட்டென்று பாய்ந்து அதனைக் கொன்றது புற்களின் நடுவில் மறைந்திருந்த கிழட்டுப்புலி. இதனை எதிர்பார்த்த நரியும் அவ்விடம் வந்து சேர்ந்தது. புலி எருதின் இறைச்சியைச் சுவைத் துண்ண, வஞ்சக நரியோ எருதின் குருதியைக் குடித்து மகிழ்ந்தது.


உயிர்போகும் தருணத்தில் அவலக் குரல் எழுப்பிய எருது, பச்சைக்கிளியின் அறிவுரை கேளாது நரியின் நயவஞ்சகத்துக்கு தான் இரையாகிக் கொண்டிருப்பதை உணர்ந்து வருந்தியது.

**வஞ்சக எண்ணம் இல்லாதவர்களின் கடுஞ் சொல்லும் நன்மை தரும்.**

**வஞ்சகர் பேசும் இன்சொல்லும் துன்பத்தையே தரும்**

**நட்டார் போல் நல்லவை சொல்லினும் ஒட்டார் சொல்**
**ஒல்லை உணரப்படும் (குறள் 826)**

***பொருள் : பகைவர், நண்பர் போல நல்லனவற்றைச் சொன்னாராயினும், அவர்கள் சொன்ன சொல்லின் தீய விளைவு விரைவாக அறியப்படும்.***




படத்தில் காட்டப்படுள்ள பொருள்களில் ஒன்றை வாங்குவதற்கு செலுத்தப்பட வேண்டிய பணம் எவ்வளவு?

உதாரணம் :ஓர் ஐஸ் கிறீம் : ரூபா 6

| | | | |
|---|---|---|---|
| 1. ஒரு தீப்பெட்டி | :...................... | 2. ஒரு வாழைப்பழம் | :...................... |
| 3. ஒரு மாம்பழம் | :...................... | 3. ஒரு பென்சில் | :...................... |
| 5. ஒரு புத்தகம் | :...................... | 4. ஒரு சவர்க்காரக் கட்டி | :...................... |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை, உன் சந்திரன் மறைவதுமில்லை
கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாய் இருப்பார்,
உன் துக்க நாள்கள் முடிந்துபோம்"
ஏசாயா 60 : 20

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



மண்ணில்
04.03.1985



விண்ணில்
14.07.2016

**அமரர்**
**ஜெயரஞ்சன் தனுஷ்கா**
(ஆசிரியர் - ஏஞ்சல் சர்வதேச பாடசாலை)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இல.527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் சொர்ணாம்பிகை மணிமண்டபத்தில் (TCT Hall) நன்றி செலுத்தும் ஆராதனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**261/3, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம். 077 946 2841**

**தே. ஜெயரஞ்சன்**
**(கணவர்)**

## முதலாம் ஆண்டு சேவை நிறைவில்
## றோயல் மெடிக்கல் சென்ரர்
**458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்.

**றோயல் வைத்திய ஆலோசனைகள் ...**

- காது, மூக்கு தொண்டை [ENT] சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- சத்திரசிகிச்சை நிபுணர்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்புநோய் வைத்திய நிபுணர்
- இதய வைத்திய நிபுணர்
- பிளாஸ்ரிக் [Plastic] சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்



**தொடர்புகளுக்கு...**
021 720 1587, 021 320 2300, 021 221 3668, 077 045 7976
royalmedicalcentre458@gmail.com

## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரதேவி சிவசுப்பிரமணியம்



தோற்றம் 28.06.1946 மறைவு 13.07.2017

அல்வாய் வட்டுவத்தையைப் பிறப்பிடமாகவும், புத்தூர், சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரதேவி சிவசுப்பிரமணியம் நேற்று (13.07.2017) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கிருபாகரன் (UK), யோகேஸ்வரன் (முன்னாள் பணியாளர் - அச்சுவேலி, ப.நோ.கூ.சங்கம்), காலஞ்சென்ற சசிகரன் மற்றும் கேதீஸ்வரன் (பாப்பன் - சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கோப்பாய்), சசிகலா (UK) ஹேமகலா (முகாமைத்துவ உதவியாளர் , பிரதேசசபை தலைமைக் காரியாலயம் - புத்தூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இன்பவேணி (ராதா -UK), குமாரதேவி (தாதிய உத்தியோகத்தர் , யாழ்.போதனா வைத்தியசாலை), வெண்ணிலா (கிளி/ வேம்போடுகேணி, சி.சி.த.க.பா), சுதாகரன்(UK), ஞானபாஸ்கரன் (விவசாயப் போதனாசிரியர் - தர்மக்கேணி) ஆகியோரின் மாமியும், டிக்சன் (UK), கோகுல் (UK), தனுஸ் (UK), கிசானி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), கிரிசன் (யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), செந்தூரி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஹரிசன் (யா/ இந்துக்கல்லூரி), நீரஜா (UK), ஜனுயன் (UK), யாதவி (UK),சாங்கவி, சாம்பவி ஆகியோரின் பேர்த்தியும், துரைராசா (ஓய்வுபெற்ற மருந்தாளர்), தேவதாசன் சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரியும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராசமணி, காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் நவரத்தினராசா (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை- பலாலி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கிந்துசிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் கோயிலடி, புத்தூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### சின்னப்பு சின்னத்தம்பி (கரம்பகம் ராஜா)

கரம்பகம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சின்னத்தம்பி நேற்று (13.07.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பு முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை சீதேவன் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் சிவகாமியின் அன்புக் கணவரும் சபேசன் (கேசவன்), சௌமினி (கேமா பிரான்ஸ்), சபீசன் (ஆஸ்திரேலியா), சபேந்திரன் (கஜன்), சபீந்திரன் (குகன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சியாமா பிறேமரூபன், மயூரி டிலோசனா ஆகியோரின் அன்பு மாமனும் நேருஜா, ரக்சிகா, டெலக்சன் சுவீற்றா, டினோஜா ஆகியோரின் அன்புப் பேரனும் மனோன் மணி சிதம்பரநாதன், சேனாதிராசா பஞ்சாட்சரம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் வேலாயுதம், பரலோகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.ஒரு மணியளவில் கரும்பகம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரம்பகம்.**
**077 236 7986**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## பொதுக்கூட்ட அறிவித்தல்

எதிர்வரும் 16.07.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு எமது சங்க பணிமனையில் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

**செயலாளர்,**
**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்**

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படும் ஐந்து மாடிக் கட்டட நிர்மாண வேலைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை :**


1. **NDT - (Civil) / NCT - (Civil)**
2. **ஐந்து வருட துறைசார் அனுபவம்**

**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். சுயமாக தயாரித்த விண்ணப்பத்தை 25.07.2017 இற்கு முன்னர் தபால் மூலமோ மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரில் வரவேற்பாளர்களிடம் கையளிக்க முடியும்.**

**மனிதவள முகாமையாளர்**
**நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை**
**No. 342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
**Tel No : 021 221 9988 Extension No - 324**
**Mobile No - 077 773 2892**
**Email - nchjaffna@gmail.com**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சிவசுப்பிரமணியம்



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவசுப்பிரமணியம்நேற்று (13.07.2017) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் சர்வலோகேஸ்வரியின் அன்புக்கணவரும் பிரவீனாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் சிவானந்தம், யோகமலர், புனிதமலர், தவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராசரத்தினம், புவனேஸ்வரி, நவரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புமைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சடச்சப்பை, கொல்லங்கலட்டி,**
**தெல்லிப்பழை.**
**077 4457 224**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மாற்றுத்...

கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் மாற்றுத் தலைமை குறித்து அண்மையில் தெரிவித்த கருத்தைக் கண்டித்து விடுத்த அறிக்கையில் அவர் கொந்தளிக்கும் வாதங்களை முன்வைத்துள்ளார்.

அவரது ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான தலைமை ஒன்று பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அண்மையில் தெரிவித்திருக்கிறார். கூட்டம்மைப்புக்குள் இருந்துகொண்டே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். அவருக்கோ அல்லது அவரது கட்சிக்கோ கூட்டமைப்பின் தலைமையுடன் முரண்பாடுகள் இருந்தால் அதனைக் கூட்டமைப்புக்குள்ளேயே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் கூட்டணி தர்மம்.

அது முடியவில்லை என்றால் கூட்டமைப்பை விட்டு அவரும் அவரது கட்சியும் வெளியேறிச் சென்று மாற்றுத் தலைமை குறித்துப் பேசவேண்டும். அதைச் செய்யும் துணிவு அவர்களுக்கு ஒருபோதும் கிடையாது. அவர்கள் அப்படிச் செய்யவும் மாட்டார்கள். உள்ளே இருந்துகொண்டே கலகக் குரல் எழுப்புவதன் ஊடாகத் தமது நலன்களைத் தேடிக்கொள்வதே அவர்களின் அருவருக்கத்தக்க பாணி.

சிவசக்தி ஆனந்தனோ ஈபிஆர்எல்எவ் கட்சியோ இவ்வாறு சபைகுழப்பித் தனத்துடன் நடந்து கொள்வது இன்று நேற்று நடப்பதல்ல. அவர்களின் வரலாறு முழுவதும் அதைத்தான் அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள். அவர்களின் கட்சி வரலாற்றை நன்கு உற்றுப் பாருங்கள் அது புரியும். அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காக என்று ஆயுதம் தூக்கினார்கள். பின்னர் எந்த மக்களுக்காக ஆயுதங்களைத் தூக்கினார்களோ அவர்களையே சுட்டுக்கொன்று 'மண்டையன் குழு' என்று பெயர் வாங்கினார்கள். அந்த மக்களையே கடத்தினார்கள். அவர்களிடமே கொள்ளையடித்தார்கள். இவையெல்லாம் விடுதலைக்குத் தேவையானவை என்று சப்பைக்கட்டுக் கட்டினார்கள்.

அதாவது எல்லாத் தமிழ் இளைஞர்களும் மக்களுக்காகப் போராடப்புறப்பட்டபோது தாமும் அதிகாரங்களைப் பெறவேண்டும் என்கிற சுயநலத்துடன் ஆயுதங்களைத் தூக்கி னார்கள். அதனால்தான் அந்த ஆயுதங்களைத் தமது மக்களுக்கு எதிராகவே பயன்படுத்தி அதிகாரத்தை நிலைநிறுத்தினார்கள். அவர்களுக்குத் தேவையாக இருந்தது எல்லாம் அவர்களின் சுயநலத்தை நிறைவேற்றிக் கொள்வது மட்டுமே.

அது போகட்டும், கட்சிக்குள்ளே அவர்கள் என்ன செய்தார்கள். ஈபிஆர்எல்எவ் கட்சிக்குள் இருந்த மூத்த தலைவர்கள் உட்கட்சி மோதல்களாலும் சகோதரப் படுகொலைகளாலும் அழிக்கப்பட்டபோது தங்களைப் பாதுகாத்துக்கொண்டார்கள். சிவசக்தி ஆனந்தனும் அவரது தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தருணம் வந்தபோது தலைமைப் பதவிகளைக் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆக கட்சிக்குள்ளும் அவர்களின் குறியாக இருந்தது தமது சுயநலனை நிறைவேற்றிக்கொள்ளும் திட்டம் மட்டுமே.

அதன் பின்னர் எந்த மக்களின் விடுதலைக்கு என்று புறப்பட்டார்களோ அந்த மக்களை நட்டாற்றில் கைவிட்டுவிட்டு இந்தியாவின் பின்னால் சென்றார்கள். ஏன்? இந்தியாவிடமிருந்து நலன்களையும் பணத்தையும் பெற்றுக்கொள்வதற்காக. அந்தப் பருப்பு இனிமேல் வேகாது என்று தெரிந்தபோது இலங்கைக்கு ஓடி வந்து கொழும்பு அரசுடன் சேர்ந்து கொண்டார்கள். சிங்கள அரசுகளிடம் இருந்து நலன்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்ததிக்கொண்டார்கள். அதற்காகத் தமிழ் மக்களையும் அவர்களின் ஒரே போராட்ட இயக்கமாக இருந்த விடுதலைப் புலிகளையும் காட்டிக்கொடுப்பதற்கும் அவர்கள் தயங்கவில்லை.

அப்போதும் விடுதலைப் புலிகளுக்கான மாற்று இயக்கம் என்றுதான் இவர்கள் கூறிக்கொண்டார்கள். எந்த தமிழ் மக்களுக்காகப் போராடப் புறப்பட்டார்களோ அதைக் கைவிட்டு, தமது நோக்கத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, தமிழ் மக்களுக்காகப் போராடிய இயக்கத்துக்கு மாற்று இயக்கம் என்றார்கள். அதன் பயனாக அவர்களுக்குச் சிங்கள அரசு அமைச்சில் ஒரு பதவியைக் கொடுத்தது. பெற்றுக்கொண்டு பயனடைந்தார்கள். அதாவது அவர்கள் உயர்த்திய மாற்றுக் குரல் அவர்களுக்கு ஓர் வருமானம் தரக்கூடிய பதவி கிடைத்தது.

வடக்கு மாகாண சபையிலும் அதுவே தான் நடந்தது. அவர்கள் மாற்றுக் கட்சி, மாற்றுத் தலைமை என்று குரல் எழுப்பி ஒருவாறு அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டு விட்டார்கள். சுரேஸ் பிரேமச்சந்திரனின் தம்பி இப்போது அமைச்சராகிவிட்டார். அவர்கள் மாற்று அணி எனக் கிளம்பியதன் பயனை அடைந்துவிட்டார்கள்.

இப்படியேதான் வரலாறு முழுமைக்குமே அவர்கள் நடந்துகொண்டார்கள். ஒரு கொள்கை அணியில் சேர்வதும் பின்னர் தங்கள் நலனுக்காகப் பிரிவதும், அதன் பின்னர் தாம் முன்னர் கொண்ட கொள்கைக்கு முற்றிலும் முரணான பாதையில் பயணிப்பதுடன் அதுதான் மாற்று என்று சொல்வதும் அதற்கூடாகத் தங்கள் சுயநலன்களைப் பூர்த்தி செய்துகொள்வதும் அவர்களின் வாடிக்கை, வழமை.

அதையேதான் இப்போதும் செய்கிறார்கள். தமிழ் மக்கள் இதனைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஈபிஆர்எல்எவ் கட்சியும் சிவசக்தி ஆனந்தனும் மாற்றுத் தலைமை என்று கேட்பதும் மாற்று அணி என்று பேசுவதும் தமிழ் மக்களின் மீதுள்ள அக்கறையின் காரணமாக அல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். தமக்குத் தேவையானவற்றை, தமது நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே அவர்கள் இப்படித் தகிடுதத்தம் ஆடுகிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், நாளைக்கு கொழும்பு அரசில் அமைச்சுப் பதவி கிடைக்கும் என்றால் அதனையும் பெற்றுக்கொண்டு அதுதான் மாற்று அணி, மாற்றுத் தலைமை என்று அவர்கள் தமிழர்களை முட்டாள்க ளாக்க முயல்வார்கள்.

எனவே தமிழ் மக்கள் இது தொடர்பில் விழிப்புடன் இருந்து, இவ்வாறு மாற்றுத் தலைமை, மாற்று அணி என்று பேசுபவர்களின் தலையில் இறுக்கிக் குட்டி அவர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அடக்க ஒடுக்கமாக இருக்கச் செய்யவேண்டும். இல்லையேல் அவர்கள் தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைத்துவிட்டு தங்கள் நலன்களைப் பார்த்துக் கொண்டு போய்விடுவார்கள்.

ஈபிஆர்எல்எவ் கட்சி மாற்று அணி பற்றிப் பேசியே மாகாண அமைச்சுப் பதவி ஒன்றைப் பெற்றுக்கொண்ட போதும் அது போதவில்லைப் போலுள்ளது. அதனால்தான் சிவசக்தி ஆனந்தன் மீண்டும் மாற்றுத் தலைமை பற்றிப் பேச முனைந்திருக்கிறார். அது பற்றி மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார். (த)

### தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு - 076 6367 091

### தேவை

பிரபல்யமான ஆங்கில மருந்தகம் ஒன்றிற்கு தகுதி வாய்ந்த அனுபவமுள்ள மருந்தாளர் **(Pharmacist)** தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 021 224 3565.
077 105 6236.

### சமையல் உதவியாளர் தேவை

நன்கு சமையல் வேலை தெரிந்தவர்களும் அத்துடன் உதவியாளரும் தேவை.
தொடர்பு - 077 741 2113
077 320 0727

### கடைகள் வாடகைக்கு

யாழ். நகரின் மத்தியில் கடைகள் வாடகைக்குண்டு.
நிறுவனங்களுக்கும் ஏற்றது.
தொடர்பு - 0777 651 826

### காணி விற்பனைக்கு

கைதடி வடக்கில் ஆச்சிரமத்திற்கு வடக்குப் பக்கமாக சுற்றுமதில் கிணறு, தண்ணீர்தாங்கியுடன்கூடிய 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**077 941 5891, 0044 793 335 3162**

### வாகனம் விற்பனைக்குண்டு

**HIACE** வாகனம் ஆங்கில இலக்கம் கொண்ட **SuperGL** வாகனம் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு - 076 568 3727




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கி...

மையை வழங்கக் கூடியவர்கள் அந்தச் சக்தி உள்ளவர்கள் மக்களை அரவணைத்து, அவர்களின் பிரச்சினைகளைக் கையாளக்கூடியவர்கள் தலைமைத்துவத்துக்கு வர முடியும். இவை மக்களின் கையில் இருக்கக்கூடிய விடயம். தனிநபர் தீர்மானிக்கின்ற விடயமாக இருக்காது.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் க.சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார். மட்டக்களப்புக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சுரேஸ் பிரேமச்சந்திரன், சமகால அரசியல் தொடர்பில் பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உடனடியாக மாற்றுத் தலைமை அவசியமில்லை என்ற கருத்தில் உள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தவறுகள் விட்டிருந்தால் அவருடன் பேச முடியும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் அறிக்கையிலிருந்து அதனுடைய தலைமை விலகி நடக்கிறது என்ற கருத்தையும் முன்வைத்திருந்தார். வடக்கு-கிழக்கு இணைப்பு, கூட்டாட்சி, தமிழ் மக்களுக்கான சுயாட்சி என்பன தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள். தற்போது இவை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயமாகத் தமிழ் அரசுக் கட்சி கைவிட்டுள்ளது. ஆனால் நான் அந்த விடயங்களில் உறுதியாக இருக்கின்றேன் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாணசபையால் தீர்வுத் திட்டம் வெளியிடப்பட்டது. அந்தத் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையிலும், ஏற்கனவே முன்வைத்த தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலும் செயற்படுவதானால் மாற்றுத் தலைமை அவசியம்.

வடக்கு மாகாண முதலமைச்சர் தற்போது மாற்றுத் தலைமை தேவையில்லை எனக் கூறியது அவரது சொந்தக் கருத்து. ஆனாலும், வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அவருக்கு மாற்றுத் தலைமை தேவை.

மாகாண சபை முதலமைச்சராகத் தன்னைக் கொண்டு வந்ததில் சம்பந்தன் மிகப்பெரிய பங்கு வகித்துள்ளார். ஆகவே நான் அவருக்கு விரோதமாக நடக்கக் கூடாது என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் நினைத்திருக்கலாம். இது சம்பந்தன் தொடர்பான விடயமல்ல. அரசியல் தீர்வு சம்பந்தப்பட்ட விடயம். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது, எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பான விடயம். தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் சகலதும் தமிழ் அரசுக் கட்சியால் கைவிடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் எவ்வாறான அரசியல் தேவை என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

வடக்கு மாகாணசபை, தமிழ் மக்கள் பேரவை இரண்டினதும் தீர்வுத் திட்டம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது தேர்தல் அறிக்கை, இவை மூன்றிலுமிருந்து முற்று முழுதாக விலகிய தீர்வுத் திட்டதால் எந்தப் பயனும் இல்லை. இந்த மூன்று திட்டங்களிலுமிருந்தும் தமிழ் அரசுக் கட்சி தடம் மாறிச் செல்கிறது என்பது உண்மை - என்றார். (த-5)

## கஜேந்திரகுமார்...

வாக்குக்களைச் சிதறடித்துத் தமிழ் முதலமைச்சர் கிடைக்காமல் செய்வதற்கே கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடப் போவதாகத் தெரிவித்துள்ளமை தொடர்பாக கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியானது இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாக வந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள். மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொள்ளாதவர்கள்.

நாங்கள் மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறி, மாகாண சபை முதலமைச்சர் தலைமையேற்று நடத்திய முள்ளிவாய்க்கால் நிகழ்வில் பங்குபற்றாமல் விட்டவர்கள்.

இவ்வாறு இருக்கையில் தற்போது கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடப் போவதாகக் கூறி இங்கு வருவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிட்டுத் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்கேயாகும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் விகிதாசார அடிப்படையில் நடைபெறுவதால் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதன் மூலம் பிரதிநிதித்துவம் குறையும் வாய்ப்பு உள்ளது. கிழக்கில் தமிழரொருவர் முதலமைச்சராக வருவதைத் தடுப்பதற்கான கைங்கரியத்தைச் செய்வதற்காக இங்கு வருகிறார்கள் - என்றார். (த-5)

## புதிய...

நிலைப்பாட்டை எட்டியிருக்கவில்லை.

இவ்வாறானதொரு நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், வழிநடத்தல் குழுவின் உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சில தினங்களுக்கு முன்னர் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில், நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்ட முறையிலேயே, உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தலைமை அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார். அத்துடன் அனைத்துக் கட்சிகளும் இந்த யோசனைக்கு உடன்பட்டுள்ளன. புதிய அரசமைப்புக்கு முன்னதாகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளமையால், அந்தத் தேர்தலைப் புதிய முறையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர், கலப்பு முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த-5-101)

## கொக்கிளாய்...

டும்" இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் யோசனை முன்வைத்துள்ளது.

இந்த யோசனைக்கான பதிலை நீரியல் வளத் திணைக்களம் மன்றில் முன்வைக்க வேண்டும் என்றும் நீதிபதி கட்டளையிட்டார்.

'முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்கள் வாடி அமைப்பதற்கு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட நிலப்பரப்பு தென்னிலங்கை மீனவர்களுக்கான கரைவலைப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளடங்குகின்றது. அதனால் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட உள்ளூர் மீனவர்களுக்கான அனுமதியைத் தடை செய்ய வேண்டும்' என்று 3 தென்னிலங்கை மீனவர்களின் சார்பில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது. இதனால் உள்ளூர் மீனவர்கள் அந்தப் பகுதியில் தொழில் புரிய இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. வழக்கு விசாரணைகளும் தொடர்ந்து இடம்பெற்றன.

இந்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. உள்ளூர் மீனவர் சங்கம் சார்பில் மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில் சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

தென்னிலங்கை மீனவர்களுக்கான கரைவலைப்பாட்டுக்கான அனுமதியை நீரியல் வளத் திணைக்களம் வழங்குவதானால் பிரதேச செயலாளரின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் பிரதேச செயலாளருக்கு தெரியாமலேயே குறித்த பாடுகள் அனைத்தும் நீரியல்வளத்திணைக்களத்தால் தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கப்பட்டன" என்று உள்ளூர் மீனவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றிடம் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு குறித்த பிரதேசத்தில் 1983ஆம் ஆண்டு அத்தனை பாடுகளும் உள்ளூர் மீனவர்களின் பெயரிலேயே வர்த்தமானி அறிவித்தல் இருந்தது என்ற ஆவணத்தையும் அவர்கள் மன்றில் முன்வைத்தனர்.

உரிய முறைப்படி விண்ணப்பித்தவர்களுக்கே பாடுகளுக்கான அனுமதி வழங்கப்பட்டது என்று நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மன்றில் தெரிவித்தனர்.

"குறித்த பாடுகளுக்கான அனுமதி எந்தக் காரணம் கொண்டும் மாற்றவோ நீக்கம் செய்யவோ முடியாது. போர் காரணமாக உள்ளூர் மீனவர்கள் இடம்பெயர்ந்த நிலையில் திணைக்கள அதிகாரிகள் திட்டமிட்ட வகையில் அவற்றை தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கியுள்ளனர்" என்று உள்ளூர் மீனவர்களின் சட்டத்தரணிகள் மன்றிடம் தெரிவித்தனர்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த மாவட்ட நீதிபதி ஏ.எம் சம்சுதீன், "கொக்கிளாய் கடற்கரையில் முன்பு தொழில்புரிந்த உள்ளூர் மீனவர்களுக்கு 5 பாடுகளை வழங்க வேண்டும். இதனை வழங்க கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சின் செயலாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று யோசனையை முன்வைத்தார்.

நீதிமன்றின் யோசனைக்கான பதிலை நீரியல் வளத் திணைக்களம் மன்றுக்கு முன்வைக்க வேண்டும். அவ்வாறு பதில் வழங்கப்படாத பட்சத்தில் அடுத்த தவணையின் போது இந்த வழக்குக்கான தீர்ப்பு அறிவிக்கப்படும் என்று நீதிபதி கட்டளையிட்டார். வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு மன்று ஒத்திவைத்தது. (வ-101)

## சட்டவிரோத...

முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றங்களை எதிர்க்கும் இளைஞர் அணி என்று அடையாளப்படுத்தும் முகநூல் அமைப்பினரால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல் சமூக வலைத்தளத்தில் நேற்று முதல் பகிரப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து கூழாமுறிப்பு நோக்கி பேரணி இடம்பெறும். காலை 11 மணிக்கு இந்தப் பேரணி ஆரம்பமாகும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## வடமராட்சி...

மணல் கடத்தலில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் இளைஞன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பின்னர், பொலிஸார் மணல் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை.

அரச அதிகாரிகளுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளபோதும் மணல் கொள்ளை தடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பொலிஸார் கடமையில் இருக்கும்போது பொலிஸாருக்குத் தெரியாமல் மணல் கடத்தல் இடம்பெறுவது வழமை. காட்டுப் பாதைகளுடாக மணல் கடத்தப்படும் சிலர் பொலிஸாரிடம் சிக்குவர். பலர் தப்புவதனால் காட்டுப் பகுதிக்குள் பாதைகளில் பொலிஸார் பெருங்கிடங்கு வெட்டி மணல் கடத்தலைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

பலரை வாகனங்களுடன் துரத்திச் சென்றால் காட்டுக்குள் சென்று மறைந்துவிடுவர்.

அதனால் வடமராட்சியில் மணல் ஏற்றும் பகுதிகளில் பொலிஸ் தடுப்பு உள்ளது. மணல் கடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்படும் இளைஞன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதும் அங்கு பொலிஸாருக்கு எதிராக எதிர்ப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து மணல் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுக்க அமைக்கப்பட்ட பொலிஸ் காவலரண் சேதமாக்கப்பட்டது. அதற்கு அடுத்த நாளிலிருந்து மணல் கடத்தல் இரவு பகலாக முன்னெடுக்கப்படுகிறது. மணல் கடத்தல் இரவு பகலாகத் தொடர்வது குறித்து அரச அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளபோதும் உரிய - நீதியான நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்களால் கூறப்படுகிறது. (4,26)

## சு.க. - ஐ.தே.க...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பங்களாதேஷ் பயணத்துக்கு முன்னதாக, அவசர அவசரமாக நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள அதிருப்தி அமைச்சரான ஜோன் செனவிரத்தின, எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் அரசிலிருந்து தாம் வெளியேறப் போவதாகக் கூறியுள்ளார். அதிருப்தி அமைச்சர்கள் சிலரும் இதே கருத்தை முன்வைத்துள்ளனர்.

இதன்போது, இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். வெளியேறுவதாக இருந்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முழுமையாக வெளியேறவேண்டும். நாம் கூட்டு அரசில் இருப்பதால்தான், சில விடயங்களை எதிர்க்கக் கூடியதாக உள்ளது. மக்கள் விரோதத் தீர்மானங்களை தோற்கடிக்க முடிகின்றது. எங்களில் ஒரு பகுதியினர் வெளியேறினாலும் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் என்று கூறியுள்ளார். இந்தக் கருத்தை ஆதரிக்கும் வகையில், எஸ்.பி.திசாநாயக்க, மகிந்த சமரசிங்க ஆகியோரும் தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர். மிகக் காரசாரமான கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது. இறுதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிட்டுள்ளார். எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் பொறுமையாக இருங்கள். வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடருடன் முக்கிய முடிவு எடுப்போம் என்று கூறியுள்ளார். (5)

## அவசரமாக...

அவசரமாகக் கூடுகின்றது. கட்சித் தலைவர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம[illegible] தலைமையில், கட்சித் தலைமை அலு[illegible]தில் நடைபெறும் குறித்த கூட்டத்தில் கட்[illegible] பங்கேற்குமாறு மத்திய குழு உறுப்[illegible]ளுக்கு அறிவுறுத்தல் விடுக் கப்பட்டுள்ள[illegible]

இதன்போது சமகால அரசியல் நிலை[illegible] தொடர்பில் கலந்துரையாடப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என ஐ.தே[illegible] வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

குறிப்பாக புதிய அரசமைப்புக்கு எதிர்ப்புக[illegible] வலுத்துவரும் நிலையில், அது பற்றியும் மத்திய குழுக் கூட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனக் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ள நிலையில், அதற்குரிய கட்சி ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்படவுள்ளதுடன், தொகுதிவாரியாகக் கட்சியைப் பலப்படுத்துவதற்குரிய பொறுப்பும் ஒப்படைக்கப்படவுள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதியுடன் 70 வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனவே, தேர்தலை அடிப்படையாகக் கொண்டு 70ஆவது ஆண்டு பூர்த்தி விழாவை ஐக்கிய தேசியக் கட்சி தடல்புடலாகக் கொண்டாடவுள்ளது. இது பற்றியும் குறித்த சந்திப்பில் பேசப்படவுள்ளது.

அத்துடன், தேசிய அரசமைப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை அடுத்த மாதத்துடன் நிறைவுக்கு வருகின்றது. அதை நீடிப்பது பற்றியும் விரிவாக ஆராயப்படவுள்ளது. எனவே, ஐ.தே.கவின் இன்றைய மத்திய குழுக் கூட்டமானது முக்கியத்துவமிக்க சந்திப்பாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பார்க்கப்படுகின்றது. (த)

## பொருத்து...

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், பொருத்து வீடுகளை அமைக்கத் திட்டமிட்டுள்ள ஆர்சிலோன் மிட்டல் நிறுவனம், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக மனுவில் பெயரிடப்பட்டுள்ளனர்.

பொருத்து வீடு வடக்கு - கிழக்கு காலநிலைக்குப் பொருத்தமில்லை என்பது மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் 65 ஆயிரம் பொருத்து வீடுகளை நிர்மாணிப்பதற்குக் கேள்வி கோரல் நடத்தியதன் அடிப்படையிலேயே 6 ஆயிரம் பொருத்து வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது பிழையான நடவடிக்கை என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, பொருத்து வீடு தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொண்டு எடுப்பதற்குத் தடை விதிக்க மனுவில் கோரப்பட்டுள்ளது.

மேலும், வடக்கு கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட வீட்டுத் தேவை உடைய மக்களுக்கு வீடுகள் கிடைப்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். கல்வி வலயம் முதலிடம் பிடித்ததில் சுண்டுக்குழி மகளிர், மத்தியின் பங்கு அதிகம்

## மொத்தமாகக் கிடைத்த புள்ளிகளில் மூன்றில் ஒருபங்கு இவற்றிடமிருந்து

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடத்தைப் பிடித்தமைக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி என்பவற்றின் மிகப்பெரிய பங்களிப்பு முக்கிய காரணமாக இருந்தது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் கடந்த திங்கட்கிழமை வரை நடைபெற்றது. ஒட்டுமொத்தமாக 650 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடம் பிடித்தது.

இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி என்பவற்றின் மிகப்பெரிய பங்களிப்பு முக்கிய காரணமாக இருந்தது. அதேநேரம் கொக்குவில் இந்துக் கல்லூரி தன்னாலான சிறிய பங்கை ஆற்றியுள்ளது.

மாணவர்கள் தொகையை அதிகம் கொண்ட யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் போன்றன போதிய புள்ளிகளைப் பெறவில்லை.

யாழ்ப்பாணக் கல்வி வலயம் பெற்ற 650 புள்ளிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 128 புள்ளிகளையும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி 104 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்ததோடு கொக்குவில் இந்துக் கல்லூரி 70 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 41 புள்ளிகளையும் சென். ஜோன்ஸ் கல்லூரி 40 புள்ளிகளையும் பெற்றன.

ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடம் பிடித்தது என்று கூறிக்கொள்ளலாம்.

ஆனால் அதன் பின்னர் ஒரு சில பாடசாலைகளின் பங்களிப்பே அதிகளவில் உள்ளது. யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் சிறப்பான மைதானம் உபகரணங்கள் மற்றும் பயிற்றுநர்களோடு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தையும் பயன்படுத்தக்கூடிய வசதிகள் காணப்பட்ட போதும் தடகளத்தில் முக்கிய பாடசாலைகள் பெரியளவில் சாதிக்காதமை அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ம-422)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

**ஐக்கியத்தின் கபடித் தொடர்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துள்ளுமீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்திவிநாயகர் அணி மோதவுள்ளது.

**யங்ஹென்றிஸின் கால்பந்தாட்டம்**

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் மறைந்த முன்னாள் கால்பந்தாட்டப் பயிற்றுனர் அமரர் அருளானந்தம் ஞாபகார்த்தமாக யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன.

அணிக்கு 7 வீரர்கள் கொண்டதாக நடைபெறும் இந்தத் தொடரில் ஒட்டுமொத்தமாக 16 அணிகள் பங்குபற்றுகின்றன.

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. அடுத்தடுத்த ஆட்டங்களில் அராலி பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகமும், வேலணை ஐயனாரை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும், மல்லாகம் நியூவொரியஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும், சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும், ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23-108)

## வலைப்பந்தாட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தத் திட்டமிட்ட வலைப்பந்தாட்டத் தொடர் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகிறது. இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிதியத்தின் இணைப்பாளர் கே.சதீஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## நல்லூர் றோட்டறக் கழகத்தின் துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

நல்லூர் றோட்டறக் கழகம் நடத்தத் திட்டமிட்ட அணிக்கு 6 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடர் நாளை ஆரம்பமாகிறது. நவாலி அட்டகிரி மைதானத்தில் காலை மணி முதல் இந்த ஆட்டங்கள் அனைத் நடைபெற [illegible] (ம-ரி)

## வடக்கு மாகாணத் தடகளத்தில் 12 வயதுப்பிரிவில் சாதித்தோர்


இந்துயன்


யாழ்மதி

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 12 வயதுப் பிரிவில் தடம் மற்றும் களம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியவர்களின் விவரம் வருமாறு.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. 12 வயதுப் பிரிவில் சிறந்த தட வீரராக உடுத்துறை மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். இந்துஜன், சிறந்த கள வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த பி.பிரணவன் ஆகியோர் தெரிவாகினர்.

பெண்கள் பிரிவில் சிறந்த தட வீராங்கனையாக தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த ஏ.சிந்துஜா, சிறந்த கள வீராங்கனையாக மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.யாழ்மதி [illegible] (ம-422)


பிரணவன்


சிந்துஜா

## ஹென்றிஸின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் 110ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய ரீதியாக நடத்தத் திட்டமிட்ட அணிக்கு 5 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்துத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நாளைமறுதினம் ஆரம்பமாகின்றன.

ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வாவும், சிறப்பு விருந்தினராக இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் பிறின்ஸ் கௌடியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் மாலை இடம்பெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக இந்தியத் தூதரகத்தின் கொன்சியூலர் ஏ.நடராஜனும், சிறப்பு விருந்தினராக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலகினார் ஜோகோவிக்

விம்பிள்டன் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காயத்தால் காலிறுதியில் விலகிச் சென்றார் ஜோகோவிக்.
ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டம் நேற்று நடைபெற்றது. சேர்பிய வீரர் ஜோகோவிக்கை எதிர்த்து செக்குடியரசின் வீரர் பெர்டிச் மோதினார்.
ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றில் ஜோகோவிக் 2:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருந்தபோது காயம் ஏற்பட அவர் தொடரில் இருந்து விலகிச் சென்றார். இதனால் பெர்டிச் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப்பட்டது. (ம)





அண்மையில் நடைபெற்ற சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கை அணி 2:3 என்ற அடிப்படையில் இழந்தது. இந்தத் தொடரில் பணியாற்றிய மைதானப் பரிமரிப்பாளர்களுக்கு சம்பளம் தரவேண்டுமாயின் அவர்கள் தமது காற்சட்டையைக் களற்றித் தரவேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்தக் கருத்து பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்தது. இந்த இரு சம்பவங்களையும் பிரதிபலிக்கும் விதமாக இந்தக் கேலிச் சித்திரம் வரையப்பட்டுள்ளது. (ம)



## மரதன் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 14
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான மரதன். மினி மரதன் ஓட்டப்போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை மாலை நடைபெறவுள்ளது.
மினி மரதன் ஓட்டப்போட்டி 5 கிலோ மீற்றர் தூரமுடையதாக அமையவுள்ளது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்து தட்டாதெருச் சந்திவரை சென்று மீண்டும் ஆரம்ப இடத்திலேயே முடியவுள்ளது.
மரதன் ஓட்டப்போட்டி துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பித்து காங்கேசன்துறை வீதியூடாக சுன்னாகம் சந்தி வரை சென்று மீண்டும் ஆரம்பித்த இடத்திலேயே நிறைவடையும்.
பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-108)

# இலங்கை - சிம்பாப்வே டெஸ்ட் ஆட்டம் இன்று

இலங்கை-சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டம் கொழும்பு பிறேமதாஸ அரங்கில் இன்று ஆரம்பமாகிறது. சிம்பாப்வே அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரை சிம்பாப்வே வெற்றிபெற்றது. இந்த நிலையில் டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. ஒருநாள் தொடரில் ஏற்பட்ட தோல்விக்குப் பதிலடி கொடுப்பதற்கு இலங்கை அணி டெஸ்ட் ஆட்டத்தைப் பயன்படுத்த எத்தனிக்கும் என்பது வெளிப்படையான உண்மை. அதேநேரம் டெஸ்ட் ஆட்டத்திலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட சிம்பாப்வே யும் எத்தனிக்கும் என்பதால் இன்றைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.



### தலைவராக சந்திமலின் முதலாவது ஆட்டம்

ஒருநாள் தொடரில் இலங்கை அணி அடைந்த தோல்வியை அடுத்து அந்த அணியின் தலைவராக இருந்த மத்தியூஸ் பதவி விலகினார். இதனால் டெஸ்ட் ஆட்டங்களுக்குத் தலைவராக சந்திமலும் ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களுக்குத் தலைவராக தரங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் இன்றைய ஆட்டம் தலைவராகச் சந்திமல் களமிறங்கும் முதலாவது ஆட்டமாக அமைந்துள்ளது. இதனாலும் இன்றைய ஆட்டத்தின் மீது பெரியளவில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.
இலங்கை அணியின் தலைவராக தனது வாழ்க்கையைத் தொடங்கும் சந்திமலுக்கு இலங்கை கிரிக்கெட் சபை தனது வாழ்த்தை நேற்றுத் தெரிவித்தது. (ம)

## இங்கிலாந்து - தெ.ஆபிரிக்கா இரண்டாவது டெஸ்ட் இன்று

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
தென்னாபிரிக்க அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இதனால் இன்று நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடி தென்னாபிரிக்க அணிக்கு ஏற்பட்டுள்ளது. மாறாக இன்றும் இங்கிலாந்து வெற்றிபெற்றால் கிண்ணத்தைக் கைப்பற்றுவதும் அந்த அணிக்கு இலகுவாகிவிடும். எனவே இன்று வெற்றிபெற வேண்டும் என்ற சிக்கல் தென்னாபிரிக்க அணிக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

# இறுதியாட்டத்தில் கார்பின் முகுருசா



விம்பிள்டன் பகிரங்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீராங்கனை முகுருசா.
லண்டனில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் [illegible] தரப்படுத்தலில் 14ஆம் இடத்தில் உள்ளவரான கார்பின் முகுருசாவை எதிர்த்து சுலோவாக்கியாவின் மெக்டாலேனா ரிபாரிகோவா மோதினார்.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் [illegible] அவர் தனது ஆதிக்கத்தை இரண்டாவது செற்றிலும் உறுதியாக நிலைப்படுத்தினார். இரண்டாவது செற்றும் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முகுருசாவின் வசமாக 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் முகுருசா.
இறுதியாட்டத்துக்குள் நுழைந்ததன் மூலம் இரண்டு முறை விம்பிள்டன் தொடரின் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற முதல் ஸ்பெய்ன் வீராங்கனை என்ற வரலாற்று அடைவுக்கு முகுருசா சொந்தமானார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்போதுள்ள இந்திய அணி மிகவும் வலிமை வாய்ந்தது

*ரவி சாஸ்திரி சொல்கிறார்*

தற்போதுள்ள இந்திய டெஸ்ட் அணியுடன் உலகின் எந்தப் பகுதிக்கும் பயணம் செய்யலாம் என புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

அனில் கும்ளே கடந்த மாதம் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக 55 வயதான ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டார். இதையடுத்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சாஸ்திரி இவ்வாறு தெரிவித்தார்.

"இதற்கு முன்னர் நாம் இருந்ததை விட தற்போதுள்ள இந்திய அணி சிறந்த டெஸ்ட் அணியாக திகழ்கிறது. இந்த அணியுடன் உலகின் எந்த இடத்துக்கும் நாம் பயணிக்கலாம். அணியில் உள்ள வேகப்பந்து வீச்சாளர்களால் எந்த சூழ்நிலைகளிலும் சிறப்பாக செயல்பட்டு 20 இலக்குகளை வீழ்த்த முடியும். அவர்கள் சரியான போக்கில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

விராட் கோக்லி ஒரு சம்பியன் வீரர். அவர் இதுவரை உச்சத்தை எட்டவில்லை. அடுத்த 5 முதல் 6 வருடங்களில் அவர், தன்னை தலைசிறந்த வீரராக வடிவமைத்துக் கொள்வார். 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடருக்கு இன்னும் நீண்டகாலம் உள்ளது. அதனால் யுவராஜ் சிங், டோனி ஆகியோரது எதிர்காலம் குறித்து நேரம் வரும்போது திறன்பட கையாள்வோம். இருவருமே சிறந்த வீரர்கள். நான் மீண்டும் வீரர்கள் அறையில் நுழைய உள்ளேன். இதனால் கோக்லியுடன் அதிக நேரம் செலவிடவுள்ளேன்.

எப்போதும் நான் சவாலை விரும்பக்கூடியவன். இதனால் எனது பணியை ஆவலுடன் எதிர் நோக்குகிறேன். கங்குலியும், நானும் தலைவர்களாகச் செயல்பட்டவர்கள். கடந்த காலங்களில் எங்களுக்குள் சில வாக்குவாதங்கள் நிகழ்ந்தது. ஆனால் நாங்கள் பெரிய பிம்பங்களாக உள்ளோம். நேர்காணலின் போது அவர் சிறந்த கேள்விகளைக் கேட்டார். இதில் இருந்து நாங்கள் அடுத்த கட்டத்துக்கு செல்ல வேண்டும். அனைவரும் இந்திய கிரிக்கெட்டின் நலனுக்காக செயல்பட வேண்டும்" என ரவி சாஸ்திரி மேலும் தெரிவித்தார். (ம)


போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
இம்மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கு
முகாமைத்துவ உதவியாளர்.
சனி, ஞாயிறு 9.30 - 3.30 மணிவரை
வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி 10.00 - 3.00 மணி வரை
வடமாகாண ஆசிரியர் தெரிவுக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I பிரதி சனி 11.00 - 3.30
பிரிவு II பிரதி ஞாயிறு 11.00 - 3.30
SLAS
பிரதி ஞாயிறு 9.00 - 4.00
சுங்கபரிசோதகர்
பிரதி சனி 12.30 - 4.00
முன்பள்ளி ஆசிரியர்
பிரதி ஞாயிறு 11.00 - 3.00
சட்டமாணி நுழைவுக்கு
பிரதி சனி 10.00 - 2.00
*சகல பரீட்சைகளுக்கும் தொடர்ச்சியாக வகுப்புக்கள் நடைபெறும் ஒரே இடம்.
தொடர்புகள் - 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கி அருகில்)

## விபத்து!

கானாவின் கால்பந்து வீரர்கள் சென்ற பஸ் நேற்று விபத்துக்குள்ளானது. உயிராபத்தை விளைவிக்கக்கூடிய காயம் எவருக்கும் ஏற்படவில்லை. (ம)

அரச முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு
காலம் - 20/07/2017, 21/07/2017
காலை 9.00 - 4.00 மணிவரை
வழமையான விரிவுரையாளர்
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள் கலந்துரையாடப்படும்.
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P. 077 469 6695

# விம்பிள்டன் ரென்னிஸில் அரையிறுதியில் பெடரர்



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் பகிரங்கத் தொடரில் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரர் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார்.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் விம்பிள்டன் தொடரில் 7 தடவைகள் உலக சம்பியனான பெடரரை எதிர்த்து கனடா வீரர் ரோனிக் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் பெடரர் 6:4, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவில் கைப்பற்றினார். எனினும் நேர்செற் வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற் இலகுவானதாக அவருக்கு அமையவில்லை. நீண்ட போராட்டத்தின் பின்னர் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மூன்றாவது செற் பெடரரிடம் தஞ்சமடைந்தது. முடிவில் அவர் நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

முன்னதாக முடிவடைந்த ஆஸ்திரேலியத் தொடரையும் பெடரர் கைப்பற்றியிருந்தார். எனினும் அதன் பின்னரான எந்தத் தொட ரையும் அவர் கைப்பற்றியிருக்க வில்லை. இதனால் விம்பிள்டன் தொடர் தொடர்பில் மிகப்பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முக்கிய வீரர்களாக இங்கிலாந்தின் முர்ரே, சேர்பியாவின் ஜோகோவிக், ஸ்பெய்னின் நடால், சுவிற்சர்லாந்தின் வாவ்ரிங்கா ஆகியோர் தொடரில் இருந்து வெளியேறியுள்ள நிலையில் நடப்பு வருடத்துக்கான விம்பிள்டன் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்பு பெடரருக்கு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் சுமார் ஆறு மாதங்கள் பெடரர் காயம் காரணமாகக் களமிறங்கியிருக்கவில்லை. இதனால் அவர் தரப்படுத்தலில் மிகவும் பின்னடைவைச் சந்தித்தார். தற்போதும் அவர் 15 ஆவது இடத்திலேயே தரப்படுத்தப்பட்டுள்ளார். விம்பிள்டன் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மிகப்பெரும் முன்னேற்றம் பெடரருக்கு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடர், ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடர் ஆகிய பருவகாலத் தொடர்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. இந்தப் பருவகாலத்தில் பார்சிலோனா அணிக்கான ஜெர்சி அறிமுக விழாவும், சம்பிரதாயபூர்வமான பயிற்சி முகாமும், உடல்தகுதிச் சோதனையும் நேற்று நடைபெற்றது. (ம)

## றொட்ரிகாஸ் விலகல்

ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரராகத் திகழ்ந்த ஜேம்ஸ் றொட்ரிகாஸ், அடுத்த இரண்டு வருட காலத்துக்கு கடன் அடிப்படையில் மட்ரிட்டிடம் இருந்து ஜேர்மனியக் கழகமான பெயர்ன் மூனிச்சால் வாங்கப்பட்டுள்ளார். ரியல் மட்ரிட் அணியின் முக்கிய வீரர்களில் ஒருவராக றொட்ரிகாஸ் அடையாளமிடப்பட்டிருந்தாலும், அவர் பெரும்பாலான ஆட்டங்களில் மாற்று வீரராக குறுகிய நேரத்துக்கே களமிறக்கப்பட்டார். இதற்குக் காரணம் பேல், பென்சிமா உள்ளிட்ட சில வீரர்கள் றொட்ரிகாஸுக்குப் போட்டியாக இருந்தமையே ஆகும். இதனால் அவரை மட்ரிட்டில் இருந்து வாங்குவதற்கு பெயர்ன் மூனிச் முனைப்புக் காட்டியது. ஆனால் 2 வருடங்களுக்கு கடன் அடிப்படையில் கொடுத்துள்ளது மட்ரிட். (ம)

# இறுதியில் வீனஸ்



விம்பிள்டன் பகிரங்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ். பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டம் நேற்று நடைபெற்றது. வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து இங்கிலாந்தின் ஜோகன்னா ஹோன்டா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:4, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் வீனஸ் வில்லியம்ஸ். நாளை நடைபெறும் இறுதியாட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸும் முகுருசாவும் பலப்பரீட்சை நடத்துகிறார்கள். (ம)

15% OFF 14 முதல் 21 வரை
இன்று முதல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட
சிறுவர் ஆடைக்காட்சியறையிலும்
(பலாலி வீதி சுகர்னி வைத்தியசாலைக்கு அருகில்)
கிளை நிறுவனமான
மெற்றோ பசன் மாட்
சாவகச்சேரியிலும்
15% விலைக்கழிவினைப் பெற்றுக் கொள்ளலாம்.
Premier kids wears

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.